www.padippakam.com

12 F

எழுச்சி

# தலித் முரசு

சூலை, 2000 • அடக்கப்பட்ட மக்களின் சமூக நீதித் திங்களிதழ் • ரூ.5

## 'கருத்தியல் ஆயுதம்' வெளியீட்டு விழா



## அவசர நிலை

அறிவிக்கப்படாமல் வருகிறது

## அய்.அய்.டி. நிறுவனத்தில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு அநீதி

## கடலூர் : இன்னொரு பீகார்?



புளியங்குடியில் படுகொலை செய்யப்பட்ட மூன்று தலித் இளைஞர்களில் ஒருவர்

படிப்பகம்

www.padippakam.com

அண்ணல் அம்பேத்கர் பேசுகிறார்

# நதி நீர் நாட்டுடைமை ஆக்கப்பட வேண்டும்



"நாட்டில் உள்ள ஒவ்வொரு மாநிலமும் அந்த நாட்டில் ஓடும் நதிகளால் பயன்பெற வேண்டும். இதற்காக நமது ரயில்வே நிர்வாகத்தை நாடு முழுமைக்குமானதாக அரசியல் சாசனத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது போல, நதிநீர் ஆதாரங்களையும் நாட்டுடைமையாக்க வேண்டும். ரயில்வே துறைக்கான அதே விதிமுறைகளை, நதி நீர் ஆதாரத்திற்கும் நமது நாட்டு அரசு உறுதி செய்ய வேண்டும்."

தாமோதர் ஆற்றின் மீது அணை கட்டுதல் தொடர்பாக வங்காள அரசு, 1944ஆம் ஆண்டு தாமோதர் நதி வெள்ளத் தடுப்புக் குழுமத்தை அமைத்துள்ளது. இதற்காக நான் அந்த அரசைப் பாராட்ட விரும்புகிறேன். இந்தக் குழுமம் பல நல்ல பரிந்துரைகளை செய்துள்ளது. குறிப்பாக, வெள்ளம் வரும் காலங்களில் அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைத் தொகுத்துள்ளது. அரசு, வெள்ளம் ஏற்படும் காலங்களில் நதிக்கரை ஓரங்களில் வாழும் மக்களைப் பாதுகாப்பது மட்டுல்ல; அவ்வாறு தேக்கிவைக்கப்பட்ட நீரை எவ்வாறு பல வழிகளில் பயன்படுத்துவது என்பதையும் நாம் கணக்கில் கொள்ள வேண்டும். நீர்ப்பாசனத் திட்டம், மின்சாரம் தயாரித்தல், நதி மீது படகு மற்றும் பிற நீர்ப்போக்குவரத்து எந்த வகைகளில் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதையும் நாம் ஆய்வு செய்ய வேண்டும்.

குறிப்பாக, நம் நாடு தண்ணீரை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற கொள்கையினை நீர்ப்பாசனம் அடிப்படையாகக் கொண்டது. பல இடங்களில் மத்திய அரசின் ரயில்வே துறையினரால் கூட போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்த முடியாத இடங்களில், நதிநீர்ப்போக்குவரத்தைப் பயன்படுத்தக் கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பின், அவற்றை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும், நீர் ஆதாரம், அது உற்பத்தி ஆகும் இடத்திற்கு மட்டுமே சொந்தமானதல்ல.

நாம், ரயில்வே நிர்வாகத்தை மத்திய அரசின் கட்டுப்பாட்டிலும் - நதிநீர் சம்மந்தப்பட்ட நிர்வாகத்தை, அந்தந்த மாநில அரசின் கட்டுப்பாட்டிலும் வைத்துள்ளோம். இம்முறை, பல்வேறு சிக்கலையும், இடையூறுகளையும் ஏற்படுத்துகிறது. இதற்கு நான் ஒரு எடுத்துக்காட்டைக்கூற விரும்புகிறேன். ஒரு மாநில அரசு தனது தேவைக்காக மின்சாரம் உற்பத்தி செய்ய, தனது எல்லைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள நீர் ஆதாரங்களில் அணை கட்டுவதாக வைத்துக் கொள்வோம். இந்த அணை பக்கத்தில் உள்ள மாநிலங்களின் விவசாயத்தைப் பெரிதும் பாதிப்பதாக அமைந்துவிடும். இதன் காரணமாக, இவ்விரு மாநிலங்களும் ஒத்துப்போக முடியாத கருத்துக்களையும், மாநில எதிர்ப்பு உணர்வுகளையும் சந்திக்க நேரிடும்.

இந்த இரு மாநிலங்களும் தங்களது கோரிக்கைகள் தான் சரியானது என போராட வேண்டிய அவசியம் ஏற்படும். அணை கட்டுவதால், எந்தவிதமான பிரச்சினைகளும் சம்மந்தப்பட்ட மாநிலங்களுக்கு ஏற்படாவிட்டாலும், ஒரு மாநிலத்தில் அமைக்கப்படும் அணைக்கட்டிற்கு, அதன் அருகாமையில் உள்ள மாநிலம் எத்தகைய ஆர்வமும் காட்டாமல், அந்த அணைக்கட்டிற்குத் தேவையான பொருளாதார உதவியை அளிக்க மறுக்கலாம்.

இதனால் பிற்கால கட்டங்களில், நதிநீர் சம்மந்தமாக இருமாநிலங்களிடையே பிரச்சனை எழும்போது, அதை நமது அரசு எளிதாக, அரசியல் சட்ட சாசன முறையைப் பயன்படுத்தி சீர் செய்ய முடியும். இதற்காக நமது இந்திய அரசு, தொழில் நுட்பம் சார்ந்த 'ஆற்றல் பயன்பாடு மய்யக்கழகம்' போலவே, மய்ய நீர்வழிகள், நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழிப் போக்குவரத்துக் குழுமம் ஒன்றை அமைக்க நான் பரிந்துரை செய்துள்ளேன்.

இவ்விரு குழுமங்களும் இந்தியாவில் உள்ள ஒட்டுமொத்த நீர் ஆதாரங்களைப் பற்றி விரிவான ஆய்வு மேற்கொள்ளவும் அவற்றை மக்களுக்கு எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பது பற்றியும் தங்களது பரிந்துரைகளை அளிக்கும்.

இதன் மூலம், அணைக்கட்டுகள், வெள்ளம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக மட்டுமல்ல, நீர்ப்பாசனம், மின்சாரம், போக்குவரத்து போன்றவைகளுக்கும் என்பது கணக்கில் கொள்ளப்படும். இதன் மூலம் முதல் கட்டமாக, பீகார் அரசும், வங்காள அரசும் பங்குதாரர்களாகக் கொண்டு இந்த தாமோதர் அணை கட்டப்படும்.

---

'பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுப்பு : 10, பக்கம் : 220



படிப்பகம்

www.padippakam.com

எழுச்சி தலித் முரசு
Volume : 4 Issue : 1
சூலை, 2000 • ஆண்டு : 4 - இதழ் : 6

# விரல்களுக்கிடையே மோதலா?!

'சமூக நீதியின் தலைநகரம் - தமிழ் நாடு' என்றிருந்த நிலை மாறி, இன்றைக்கு 'சமூக அநீதி'யின் தலைநகரமாகக் காட்சியளிக்கிறது தமிழகம்! இன்றைய ஆட்சியாளர்களும், சாதியை முதன்மைப்படுத்தும் அரசியல்வாதிகளுமே இது போன்ற போக்குகளுக்குப் பெரிதும் காரணமாக இருக்கின்றனர். அதனால்தான் இன்றைக்கு தலித் மக்களுக்கு எதிரான வன்கொடுமைகள் தலைவிரித்தாடுகின்றன; அடுத்த நூற்றாண்டிலாவது கண்டதேவியில், தாழ்த்தப்பட்ட மக்கள் தேர்வடம் பிடிக்க முடியுமா? என்பதற்கு தமிழ் கூறும் நல்லுலகம்தான் விடை சொல்ல வேண்டும்!

அண்ணல் அம்பேத்கரின் மணிமண்டபத்தைத் திறந்து வைத்து, தமிழக முதல்வர் கருணாநிதி அவர்கள் பேசியபோது, *''இங்கு அமர்ந்திருக்கின்றவரை நீங்கள் தமிழர்கள். கூட்டம் முடிந்து நீங்கள் கலைந்து சென்றால், பத்துபேர் செட்டியார்கள், பத்துபேர் அய்யர்கள், பத்துபேர் ஆதிதிராவிடர்கள், பத்து பேர் வன்னியர்கள், பத்துபேர் முக்குலத்தோர் என்றுதான் போகிறோமே தவிர, உட்கார்ந்திருக்கிறவரை தமிழன் - எழுந்து நடக்க ஆரம்பித்தால் அவன் செட்டியார், முதலியார், பிள்ளைவாள் என்றாகி விடுகிறானே, இது நியாயமா என்பதை எண்ணிப் பார்த்து, எல்லோரும் தமிழர்களாக இருப்போம்''* என்றார்.

தமிழக முதல்வர் இப்படிப்பேசி, இருவாரத்திற்குப் பிறகு, முதல்வரின் மனைவி, அவரின் ஒப்புதலுடன் 'முதல்வரின் பிறந்தநாள் சிறப்பு மலரை' வெளியிடுகிறார். இந்நூலை, 'இசை வேளாளர் முற்போக்குப் பேரவை' வெளியிட்டுள்ளது. கலைஞர் எழுப்பிய அதே கேள்வியைத்தான் நாமும் எழுப்புகிறோம். இது நியாயமா? அறிஞர் அண்ணா எழுதினாரே, ''பேச நா இரண்டுடையாய் போற்றி'' - இது அண்ணா சுட்டிக்காட்டிய ஆரியர்களுக்கு மட்டுமல்ல; அண்ணனின் தம்பிகளாகிய எங்களுக்கும் பொருந்தும் என்று மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறார்கள், அண்ணாவின் வழி ஆட்சி நடத்துபவர்கள். வெட்கக்கேடு!

திராவிட இயக்கப் பாரம்பரியம் மிக்க ஆட்சியாளர்களே இப்படி நடந்து கொள்ளும்போது, மற்றவர்களைப் பற்றி சொல்லத் தேவையில்லை. இந்தியாவே சமத்துவபுரமாக மாற வேண்டுமாம்; எப்படி மாறும்? அதுமட்டுமல்ல; வரவிருக்கிற தேர்தலில் எந்த ஜாதிக்கு எத்தனை இடம் கொடுப்பது என்று வருணாசிரமம் பார்த்து, வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கத்தான் போகிறார்கள். இல்லை என்று இவர்களால் மறுக்க முடியுமா? இதையெல்லாம், தேர்தலின்போது மானமும் சொரணையும் உள்ள தமிழன் சிந்திக்காமலா போய்விடுவான்?

அடுத்து, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் இருவரும் சண்டையிட்டுக் கொள்வது, வலது கையும் இடது கையும் சண்டையிட்டுக் கொள்வதற்குச் சமம் என்று, உண்மையான சமூக நீதி சிந்தனையாளர்கள் எல்லாம் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிற நிலையில், வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல், விரல்களுக்கிடையே மோதல் (தாழ்த்தப்பட்ட உட்சாதியினரிடையே) என்றொரு செய்தியும் நம் இதயத்தைப் பிளக்கிறது.

உட்சாதிப் பிரிவுகளால் வரும் மோதல் குறித்து டாக்டர் அம்பேத்கர் கூறியது ஆழ்ந்த சிந்தனைக்குரியது. ''உங்களுக்கு உட் சாதி ரீதியான பெயரை வைத்தது இந்து மதம்தான். உட்சாதிப் பெருமை பேசி, அதனால் சண்டையிடுவது, உங்களை நீங்கள் இன்னும் இந்துக்கள் என்றும் பார்ப்பன, சாதி இந்துக்களுக்கு அடிமைகள் என்பதையுமே காட்டுகிறது. ஆனால், நீங்கள் இந்துக்கள் அல்ல; உங்களுக்கு சாதியும் இல்லை.''

எனவே, இதுபோன்ற மோதல்களைத் தடுப்பதில், அனைத்து தலித் தலைவர்களுக்கும் கடமை இருக்கிறது என்றாலும், குறிப்பாக டாக்டர் கிருஷ்ணசாமிக்கும், தோழர் திருமாவளவனுக்கும் இதில் கூடுதல் பொறுப்பு உள்ளது. ஏனெனில், இதுபோன்ற உட்சாதி மோதல்கள் நம்மைப் பின்னோக்கி இழுத்துச் செல்லும். இது, நம்மை 'இந்து' என்று மேலும் மேலும் அடையாளப்படுத்தவே உதவும். நாம் இந்துக்கள் என்றால், கீழ் சாதியினர் என்று நாமே ஒப்புக் கொள்வதாகத்தான் பொருள்படும். கீழ் ஜாதி என்று நாமே ஒப்புக் கொள்கின்றவரை - நம்மீதான இழிவை மட்டும் எப்படி அகற்ற முடியும்? இதுபற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். ●

ஆசிரியர், வெளியிடுபவர்
**பெ. சந்திரசேகன்**

பொறுப்பாசிரியர்
**புனித பாண்டியன்**

| | |
|---|---|
| ஆண்டுக் கட்டணம் : | ரூ.100/- |
| நூலகக் கட்டணம் : | ரூ.200/- |
| வாழ் நாள் கட்டணம் : | ரூ.1000/- |

*விளம்பரக் கட்டணம்*

| | |
|---|---|
| அரைப்பக்கம் : | ரூ.500/- |
| முழுப்பக்கம் : | ரூ.1000/- |
| அட்டைப் பின்புறம் : | ரூ.3000/- |

*முகவரி*
6,97ஆவது தெரு, 15ஆவது செக்டர்,
கே.கே.நகர், சென்னை - 600 078
☎ : 483 07 68

*தொடர்பு முகவரி*
ஈ-21, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு, அண்ணா முதன்மைச் சாலை
கே.கே. நகர். சென்னை - 600 078
தொலைபேசி : 371 66 88
தொலைநகல்: 474 11 88
E-mail : ambedkar@md4.vsnl.net.in



படிப்பகம்

## வாக்குமூலம்

பெண்களுக்கான தேசிய குழு அமைக்கப்பட்டு பெண்களின் நிலை பற்றி 302 பரிந்துரைகள் அரசுக்கு அனுப் பப்பட்டன. ஆனால், ஒன்றுகூட அரசால் செயல்படுத்தப் படவில்லை. அரசின் திட்டங்களில் பெண்களுக்கான ஒதுக்கீடு மிகவும் குறைவாகவே உள்ளது. இந்தப் பிரச்சனைகள் தீர வேண்டும் என்றால், பெண்கள், சட்டம் இயற்றும் இடங்களில் இருக்க வேண் டும். எனவே, 33 சதவிகித இட ஒதுக்கீட் டைப் பெற போராட வேண்டும்.

**ஜெயந்தி நடராசன்,** த.மா.கா. முன்னணித் தலைவர், சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில்.

சமூக நீதியை அடைந்தால்தான் அரசமைப்புச் சட்டத்தின் நோக்கம் நிறைவடையும். எனவே, சமூக ஏற்றத் தாழ்வுகள் அகற்றப் பட வேண்டும்.


**நீதிபதி. கே.ஜி. பாலகிருஷ்ணன்,** உச்சநீதிமன்ற நீதிபதி, சென்னையில் நடைபெற்ற பாராட்டுவிழா ஒன்றில்.

உரிமைகள் மறுக்கப்படுவதுதான் தென் மாவட்டங்களில் சாதிக் கலவரம் வெடிக்கக் காரணமாகும். ஒவ்வொருவரும் அடுத்தவர்களை சமமாகப் பார்க்கும் நிலைமையை ஏற்படுத்த வேண்டும். இவற்றின் மூலமே சாதிக் கலவரங்கள் உருவாகாமல் தடுக்க முடியும்.

**நீதிபதி ச. மோகன்,** முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி, காவல் துறையினருக்கு அளிக்கப் பட்ட பயிற்சிக் கூட்டத்தில்.

மதமாற்றத்திற்கு வறுமை காரணம் அல்ல. வறுமை காரணம் என்றால், உயர் சாதியில் இருக்கும் ஏழைகளும் மதம் மாறியிருப்பார்களே! தாழ்த்தப்பட்ட சாதியினரை எல்லாம் உயர்த்தப்பட்ட சாதியாக்குங்கள்; அப்போது மதமாற்றங்கள் நிகழாது. சாதியமும், சமூகப் பாகுபாடுமே இந்துக்கள் கிறித்தவர்களாவதற்கு அடிப்படைக் காரணமாகும்.

**வி.பி.சிங்,** முன்னாள் பிரதமர், மும்பையில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில்.



பொறியியல் (கல்லூரி) தொழிற்சாலை

"காஷ்மீர் மக்களுக்கு ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டதால்தான் போராளி இயக்கங்கள் உருவாகத் துவங்கின. அவர்களுடைய போராட்டத்தில் நியாயம் இருக்கிறது. இந்த உலகத்தில் எங்கெல்லாம் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் மக்கள் நியாயம் கேட்டு ஆயுதங்களைக் கையில் எடுக்கிறார்கள். அதேபோல்தான், காஷ்மீர் மக்களும் ஆயுதம் ஏந்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஜனநாயகப் பாதை தோல்வியில் முடிந்தால், துப்பாக்கியை கையில் எடுப்பதைத்தவிர, வேறு வழியில்லை. காஷ்மீருக்கு சுயாட்சி உரிமை கொடுத்தால் - இந்தியாவுடன் உள்ள நட்புறவு மேலும் வலுவடையும்."

**- முகமது சபி,** தேசிய மாநாட்டுக் கட்சியின் முன்னணித் தலைவர் மற்றும் காஷ்மீர் மாநில கல்வி அமைச்சர், காஷ்மீர் சட்டப்பேரவையில் சுயாட்சி தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தின்போது.

வறுமையை ஒழிக்க பொருளாதார வளர்ச்சியும் ஒரு தீர்வாகும். ஆனால், பொருளியல் முன்னேற்றத்தின் மூலம் மட்டுமே - ஒரு நாட்டின் வறுமையை நீக்கமுடியாது. அடிப்படையான ஆதாரங்களில் பணம் முதலீடு செய்வது, ஏழைகள் தங்களுக்கான பங்கை பெற உதவும். வணிகத்தில் பாரபட்ச மற்ற தன்மை, தொழில் நுட்பம், நுண்ணறிவு மற்றும் அவற்றைப் பயன்படுத்துவதில் அனைவருக்கும் சம உரிமை போன்றவை மட்டும்தான் வறுமையை ஒழிக்க உதவும்.

**கோபி அன்னன்**
தலைவர், அய்க்கிய நாடுகள் அவை, அறிக்கை ஒன்றில்.

மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், தலித் முஸ்லிம்களுக்கும் இந்திய அரசு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். இதற்குத் தேவையான திருத்தம், நமது இந்திய அரசியல் சட்டத்தில் செய்யப் பட வேண்டும். இதைப் போலவே மாநில அரசுகளும் பஞ்சாயத்து மற்றும் தாலுக்கா அமைப்புகளிலும் தலித் முஸ்லிம்களுக்கு இடஒதுக்கீடு வழங்க வேண்டும்.

**லாலு பிரசாத் யாதவ்,** பீகார் மாநில முன்னாள் முதலமைச்சர், பொதுக்கூட்டம் ஒன்றில்.

சாதிகளே வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால், சண்டையில் கொண்டுபோய் விடும் அளவுக்கு சாதி சங்கங்கள் செயல்படக் கூடாது.

**- காஞ்சி சங்கராச்சாரி,**
'ஜூனியர் விகடனு'க்கு அளித்த பேட்டியில்.



www.padippakam.com
படிப்பகம்

நி கழ் வு

## அம்பேத்கரும் பெரியாரும்

# இரட்டைக் குழல் துப்பாக்கி



கவிஞர் இன்குலாப், ஆர்.கே. சுவாமிநாதன், எஸ்.நடராஜன், எல்.இளையபெருமாள், பெ. சந்திரசேகரன், டாக்டர். ஆ. பத்மநாபன், சுப. வீரபாண்டியன், கிருத்துதாஸ் காந்தி

சமூக நீதி நூல் வெளியீட்டு விழா சென்னை - தேவநேயப் பாவாணர் நூலக அரங்கில், 24.6.2000 அன்று மாலை சிறப்புற நடைபெற்றது. இவ்விழாவிற்கு தலித் சேனா தலைவர் திரு. பெ.சந்திரசேகரன் தலைமை வகித்தார். மேதகு மிசோரம் மாநில ஆளுநர் டாக்டர் ஆ. பத்மநாபன் அவர்கள், 'குடியரசுத் தலைவரின் உரை' நூலை வெளியிட்டு சிறப்புரையாற்றினார். தமிழ் - தமிழர் இயக்கத்தலைவர் திரு. சுப. வீரபாண்டியன், 'வடநாட்டுப் பெரியார் - தென்னாட்டு அம்பேத்கர்' நூலை வெளியிட்டு சிறப்புரையாற்றினார்.

திரு.எஸ். நடராஜன் வரவேற்புரை நிகழ்த்த, சமூக சீர்திருத்தத்துறை செயலாளர் திரு. இரா. கிருத்துதாஸ் காந்தி, தலித் முரசு - சமூக நீதிக் கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு வழங்கினார். திரு. ஆர்.கே. சுவாமிநாதன் , கவிஞர் இன்குலாப், முனைவர் அரங்க. மல்லிகா ஆகியோர் கருத்துரை நல்கினர். திரு. தமிழ் மறையான் நன்றியுரையாற்றினார்.

**எஸ். நடராஜன் :** ''இந்த மண்ணுக்கேற்ற மார்க்சியத்தை அளித்த இரு புரட்சியாளர்கள் - டாக்டர் அம்பேத்கரும் தந்தை பெரியாருமே ஆவர். இவ்விரு சிந்தனையாளர்களின் கருத்துக்கள் இன்றளவும் பெருமளவு பொருந்தி வருகிறது. தலித் முரசில் தொடர்ந்து வெளிவந்த அம்பேத்கர் - பெரியார் கருத்துக்களை மக்கள் நலன் கருதி அதைத் தொகுத்து வெளியிடுங்கள் என்று என்னைப் போன்ற பலரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இந்நூல் இன்று மிகச் சரியான நேரத்தில் வெளியிடப்படுகிறது. இன்றைய இளைஞர்களுக்கு இந்நூல் - ஒரு கருத்தியல் ஆயுதமாகப் பயன்படும் என்பது உறுதி.''

**பெ. சந்திரசேகரன் :** ''இன்றைய பத்திரிகைகள் எல்லாம் உண்மைச் செய்திகளை வெளியிட மறுக்கின்ற நிலை'யில், நமக்கென்று ஒரு பத்திரிகை வேண்டும்; அதை நிலைநிறுத்த வேண்டும் என்ற அடிப்படையில்தான் - தலித் முரசை பல்வேறு இன்னல்களுக்கிடையே நாம் தொடர்ந்து நடத்தி வருகின்றோம். அதேபோல் இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர் கே.ஆர். நாராயணன் அவர்களின் உரையைக் கூட இருட்டடிப்புச் செய்யும் சூழல் ஏற்பட்டதால், இதை ஒரு நூலாக வெளியிட முடிவு செய்தோம். இன்றைய இளைஞர்கள் தொலைக்காட்சி மாயையில் சிக்கி இருப்பதால், படிப்பதையே விட்டுவிட்டார்கள். எனவே, இவர்களிடையே பெரியார் - அம்பேத்கர் கருத்துக்களை விதைக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே இந்நூலை வெளியிட்டுள்ளோம். இதுபோன்ற முயற்சிகளுக்கு நீங்கள் அனைவரும் ஆதரவு நல்க வேண்டும்.''

**ஆர்.கே. சுவாமிநாதன் :** ''இவ்விரு நூல்களையும் இன்றைக்கு வெளியிடுவது காலத்தின் கட்டாயமாகும். இந்நூல் வெளியீட்டு விழா வெறும் சடங்கு அல்ல. இங்கு வந்திருக்கும் அனைவரும் இந்நூலை வாங்கி, அதன் ஒவ்வொரு வரியையும் படிப்பீர்களானால், அதனுள் புதைந்து கிடக்கும் அருமையைப் புரிந்து கொள்வீர்கள். சாதியை ஒழிக்க வேண்டும் என்றால், இந்து மதத்தை ஒழித்தாக வேண்டும் என்று அம்பேத்கரும் பெரியாரும் ஒரே மாதிரி கூறுகின்றார்கள். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்ற நோக்கத்திலேயே - இவ்விரு சிந்தனையாளர்களின் கருத்துக்கள் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன.''

**கவிஞர் இன்குலாப் :** ''இந்த இரு நூல்களையும் வெளியிட்ட தலித் தகவல் ஒருங்கிணைப்புக் குழுவினருக்கு



படிப்பகம்

www.padippakam.com

ஒடுக்கப்பட்ட மக்கள் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளனர். ஒரு சில பிரச்சினைகளைத் தவிர, பெரும்பாலான விஷயங்களில் அண்ணல் அம்பேத்கருக்கும் தந்தை பெரியாருக்கும் ஒத்தக் கருத்து இருந்தது. அரசியல் சாசனத்தின் மீது பெரியாருக்கு துவக்கத்தில் இருந்தே ஒரு விமர்சனம் இருந்தது. அரசியல் சாசனம் என்பது, மக்களின் ஒப்புதல் பெறாமல் இயற்றப்பட்ட ஒன்று என்பதுதான் பெரியாரின் நிலைப்பாடாக இருந்தது. இதுகுறித்து அம்பேத்கருக்கும் விமர்சனம் இருந்தது என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்று. இந்த அரசியல் சட்டத்தைக் கொளுத்துவதாக இருந்தால், அதைக் கொளுத்துவதில் நான் முதல் ஆளாக இருப்பேன் என்று அண்ணல் அம்பேத்கர், நாடாளுமன்றத்திலேயே அறிவித்தார்கள்.



மிசோரம் மாநில ஆளுநர் வெளியிட்ட நூலை, ஆர்.கே. சுவாமிநாதன் பெறுகிறார்

இன்று சங்பரிவாரங்கள், அரசமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டும் என்பதற்கும் பெரியாரும் அம்பேத்கரும் கூறுவதற்கும் மிகப்பெரிய வேறுபாடு உள்ளது. அம்பேத்கரும் பெரியாரும் சமூகநீதி என்ற கண்ணோட்டத்தில் உறுதியாக நின்றவர்கள். ஆனால், இந்துத்துவா நோக்கத்திற்கு ஏற்ப அரசியல் சாசனத்தை மாற்றியமைக்க வேண்டும் என்றுதான் சங்பரிவாரங்கள் முயற்சிக்கின்றன. இதை அம்பேத்கரிஸ்டுகளும் பெரியாரிஸ்டுகளும் ஒருபோதும் ஏற்கப்போவதில்லை என்பதைத்தான் இந்தக் கூட்டம் மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறது.

'வடநாட்டுப் பெரியார் தென்னாட்டு அம்பேத்கர்' என்ற இந்நூலின் தலைப்பே மிக அருமையாக அமைந்திருக்கிறது. இந்தப்புத்தகத்தில் இருக்கக்கூடிய ஒவ்வொரு பக்கமும் - பல மணி நேரம் விவாதிக்க வேண்டிய செய்திகளை உள்ளடக்கியிருக்கிறது. மிகச்சுருக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு இதைப் படிக்கும்போது, மாவோவின் 'சிவப்புப் புத்தகம்'தான் நினைவுக்கு வருகிறது. சீனாவுக்கு எப்படி மாவோவோ அப்படித்தான் நமக்கு அம்பேத்கரும் பெரியாரும் என்பதே என் கருத்து. இந்திய சுதந்திரம் என்பதை இந்திய மக்களின் சுதந்திரம் என்று கருதியவர்கள்தான் அம்பேத்கரும் பெரியாரும்.

**இந்நூலில் இருக்கும் ஒவ்வொரு பக்கமும் - பல மணி நேரம் விவாதிக்க வேண்டிய செய்திகளை உள்ளடக்கியிருக்கிறது. இதைப் படிக்கும் போது, மாவோவின் 'சிவப்புப் புத்தகம்'தான் நினைவுக்கு வருகிறது.**

இந்தப் புத்தகத்தை வெறும் பக்கங்களாக நான் பார்க்கவில்லை; இதில் இடம் பெற்றிருப்பது, இப்பெரியார்களின் வெறும் எழுத்துக்கள் அல்ல; இதில் சமூக நீதிக்கான, ஒரு புரட்சிக்கான கோரிக்கை அடங்கியிருக்கிறது. ஒரு சிந்தனைக் கருவூலமாக வைத்து நீங்கள் இதைப்படிக்க வேண்டும் என்ற கோரிக்கையை உங்கள் முன்பு வைக்கிறேன்.

*அரங்க. மல்லிகா:* தாழ்த்தப்பட்டோர் தலைமையை வலியுறுத்த வேண்டிய கால கட்டத்தில் இருக்கும்போது, இந்நூலின் அவசியம் எனக்குப் புரிகிறது. நாம் இன்னும் அம்பேத்கர், பெரியார் கருத்துக்களை சரிவர உள்வாங்கிக் கொள்ளவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. இன்றைக்கு அம்பேத்கர் - பெரியார் போன்ற தலைவர்கள் இல்லை என்கிற சூழலில், நம் நாட்டின் குடியரசுத் தலைவர் அவர்கள் உருவாகி இருக்கிறார் என்றால், அவருடைய கருத்துக்களை நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். டாக்டர். கே.ஆர். நாராயணன் இந்த நாட்டின் முதல் குடிமகனாக இருப்பதற்கு நாமெல்லாம் பெருமைப்பட வேண்டும்.

இலக்கியங்களைப் பார்த்தாலும் வரலாற்றை நீங்கள் புரட்டிப் பார்த்தாலும் - எல்லா இடத்திலும் ஒரு தலித்தான் மேலே இருக்கிறான். அந்த தலித்துக்குப் பின்னால்தான் பார்ப்பனர்களும் மற்றவர்களும் இருக்கிறார்கள். ஆனால், அந்த உண்மையை மறந்து அல்லது நமக்கு அது மறைக்கப்பட்டு இருப்பதால்தான் - நமக்கான அநீதிகள் இழைக்கப்பட்டு வருகின்றன. இதையெல்லாம் தடுக்க வேண்டும் என்றால், குடியரசுத் தலைவரின் இந்த உரை நமக்குத் தேவை.

**சுப. வீரபாண்டியன் :** ஒரு நல்ல கூட்டணியை இந்த அரங்கம் உருவாக்கி இருக்கிறது. அடுத்த தேர்தலின் வெற்றியைக் கருத்தில் கொண்டு அல்ல; அடுத்தத் தலைமுறையின் வெற்றியைக் கருத்தில் கொண்டு. அருமையான இரண்டு நூல்களை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள். குடியரசுத் தலைவரின் உரை ஒரு புரட்சியாளரின் உரையைப் போல அமைந்திருக்கிறது.

'ஒடுக்கப்பட்ட மக்களின் வறுமைதான் - இந்த நாட்டின் வன்முறைக்கு வழிவகுக்கிறது' என்றொரு வரி குடியரசுத் தலைவரின் உரையில் இடம் பெற்றிருக்கிறது. வறுமை இருக்கிறவரை வன்முறை இருந்துதான் தீரும் என்பதை குடியரசுத் தலைவர் சொல்லியிருப்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. அதனால்தான் குடியரசுத் தலைவரின் உரையைக்கூட, இந்தப் பார்ப்பனப் பத்திரிகைகள் வெளியிடாமல் மறைத்துவிட்டன. சாதாரணமாக இருக்கக்கூடிய - ஒரு கலைக்கப்பட்ட மாநகராட்சி கவுன்சிலர் பேசினால்கூட, முதல் பக்கத்தில் போடுகிறவர்கள், ஒரு குடியரசுத் தலைவரின் உரையைக்கூட மறைக்கிறார்கள் என்று சொன்னால், ஆயிரம் கைகள் தடுத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை என்று அழுத்தமாகச் சொல்வதற்கு இதுபோன்ற அரங்குகள், கூட்டங்கள் கண்டிப்பாகத் தேவை.

அம்பேத்கர் - பெரியார் கருத்துக்



படிப்பகம்

www.padippakam.com

களில் ஏறக்குறைய பெரும் பகுதிகளில் ஒத்தக் கருத்துக்கள்தான்; சில இடங்களில் வேறுபாடுகளும் உண்டு. ஒத்தக் கருத்து என்பது மேலோட்டமான ஒத்தக்கருத்து அல்ல; நட்பினால் விளைந்த ஒத்தக் கருத்து அல்ல. ஒத்தக் கருத்தினால் விளைந்த நட்பு. தந்தை பெரியார் அவர்கள் சொல்கிறார்: எனக்கும் அண்ணல் அம்பேத்கருக்கும் நட்பு ஏற்பட்டதே ஒத்தக் கருத்து இருந்ததால்தான் நட்பு ஏற்பட்டது; அவர் எங்கோ இருந்தார், ஆனாலும் நான் படித்துப்பார்க்கின்ற போது, நான் சொல்கின்ற செய்திகளை அவர் அங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார்; என்னைக் காட்டிலும் கூடுதலாக அவர் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார். ஒடுக்கப்பட்ட மக்களுக்காக நாளும் அவர் உழைத்து வருகின்றதால் - எங்களுக்குள் நட்பு ஏற்பட்டது என்று பெரியார் சொல்லுகிறார். நான் கருதுகிறேன், பெரியார் அவர்கள் வாழ்க்கையில் ஒரே ஒருமுறை மிகவும் வரலாற்றுச் சிறப்புமிக்க செய்தி ஒன்றைத் தெரிவித்துள்ளார். 1947இல் மயிலாடுதுறையில் அவர் பேசிய போது, ''நான் அம்பேத்கரை தலைவராக ஏற்றுக் கொண்டேன்'' என்று கூறியிருக்கிறார்.

ஒடுக்குமுறைக்கு எதிராக இருப்பவர்கள் எல்லாம் ஒன்று சேருவோம் என்றொரு சரியான தலையங்கத்தை தலித் முரசில் எழுதியிருக்கிறார்கள். தலித் முரசை நான் இன்றைக்கு இந்த மேடையில் அல்ல; பல ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தே சொல்லிக் கொண்டிருக்கிறேன். மிக அழகாக, ஆழமான கருத்துக்களையும் அழகான



முனைவர் அரங்க. மல்லிகா

வடிவமைப்பையும், கொண்டு தமிழ் நாட்டில் வந்து கொண்டிருக்கிற மிக எளிமையான தலித் முரசை கடைகள் தோறும் போட வேண்டும். தமிழ் நாடு முழுவதும் கிடைக்கிற இதழாக, தமிழ் மக்களின் இதழாக தலித் முரசு மாறவேண்டும்; அதன் விற்பனையும் உயரவேண்டும்என்பதேஎன்கோரிக்கை. அருமையானதொரு நூலை வெளியிட்ட தங்களுக்கு என்னுடைய பாராட்டுதல்கள்.

**இரா. கிருத்துதாஸ் காந்தி:** இங்கு நாம் கூடியிருப்பதில் பெருமிதம் என்ன வென்றால், நமக்கும் ஒரு இதழ் இருக்கிறது என்ற பெருமிதம்தான்; இதுதான் நம்மை இங்கு ஒன்றாக சேர்த்திருக்கிறது. தலித் முரசு, நம்முடைய முரசாக - நம்முடைய எண்ணங்களை எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

தலித் முரசு - சமூக நீதிக் கட்டுரைப் போட்டியின் முதல் பரிசுக்கானத் தொகை ரூ. 2000அய், பெங்களூரைச் சேர்ந்த **திரு. பி. ராஜமூர்த்தி** அவர்கள் வழங்கினார்.

தலித் முரசில் அம்பேத்கர் உரையும் பெரியார் உரையும் இடம் பெற்றுக் கொண்டு வருவது எப்படி என்றால், குழந்தைகளுக்கு மருந்தை அள்ளி ஒரே நாளில் கொடுத்துவிட மாட்டார்கள்; குழந்தை வளர்ப்பு தெரிந்த தாய்மார்கள் - ஒரு வசம்பையும் ஒரு கடுக்காயையும் கொஞ்சம் கொஞ்சமாக அரைத்துக் கொடுப்பார்கள்; குழந்தையும் நன்கு வளரும். அதன் ஊனும் உணர்வுகளும் நன்கு தெளிவாக இருக்கும். அதேபோல் தான் தலித் முரசில் மாதத்திற்கு ஒரு முறை இந்தப் பக்கம் ஒரு வசும்பு; அந்தப் பக்கம் ஒரு கடுக்காய் என்று கொஞ்சம் கொஞ்சமாக அரைத்துக் கொடுக்கிறார்கள். நீங்கள் உங்கள் ஊனிலும் உணர்விலும் சீராக இருக்க வேண்டும் என்றால், இந்த வசும்பையும் கடுக்காயையும் சுவைத்தே ஆக வேண்டும்.

குடியரசுத் தலைவர் உரையிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டிய உணர்வு என்னவென்றால், எத்தனையோ பேர் குடியரசுத் தலைவராக இருந்தார்கள்; இதுபோல பேசவில்லை என்பதல்ல. அவர்கள், எங்கேயாவது ஆய்வுக் கூடத்தில் இதுபோல பேசுவார்கள்; கருத்தரங்கில் பேசுவார்கள். ஆனால், குடியரசுப் பொன்விழா தருணத்தில் இன்னொரு குடியரசுத் தலைவர் இதுபோல பேசியிருப்பாரா என்றால் இருக்காது. இதுதான் நம் குடியரசுத் தலைவருடைய அருமை.

நாம் அதிகாரமுள்ள இடங்களில் அமர வேண்டும் என்றால், நமக்கு உயர் கல்வி தேவை. இந்த 52 ஆண்டுகளில் நமக்கான உயர் கல்வித் திட்டம்



முதல் பரிசை பிரிதிவிராஜ் பெறுகிறார்



2ஆம் பரிசை எஸ். உதயசங்கர் பெறுகிறார்



3ஆம் பரிசை ஜே. கோபிநாத் பெறுகிறார்



படிப்பகம்

www.padippakam.com

என்ன இருக்கிறது என்றால், வெளி நாட்டுக்குச் சென்று படிக்கும் திட்டம். இந்தத்திட்டத்தையும் நிறுத்தி விட்டார்கள். இதில் பயன்பெறக்கூடிய 36 பேரும் இந்திய பணத்தின் மூலம் படித்துவிட்டு வெளிநாடு போய் விடுகிறார்களாம்; நாட்டுக்குத் துரோகம் செய்து விடுகிறார்களாம். அய்.அய்.டி.க்கு மானியமாகவே சில நூறு கோடி ரூபாய்கள் செல்கின்றன. அதிலிருந்து படித்து வருபவர்கள் ஒரு சில நூறு பேர்தான். இவர்கள் எல்லாம் வெளிநாடுகளுக்குத்தானே செல்கிறார்கள்? இவர்கள் எல்லாம் நாட்டுக்குத் துரோகம் செய்யவில்லையா? இது பற்றி எல்லாம் நாம் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திப் போராட வேண்டும்.

**டாக்டர் ஆ. பத்மநாபன் :** அண்ணல் அம்பேத்கர் பற்றியும் பெரியாரைப் பற்றியும் பேசவேண்டும் என்று சொன்னால், ஒரு மூன்று அல்லது நான்கு மணி நேரத்தில் பேசிவிட முடியுமா? இவர்களிருவரும் சீரிய சிந்தனையாளர்கள்; புரட்சியாளர்கள்; இரட்டைக் குழல் துப்பாக்கி. அம்பேத்கரை நேராக சந்தித்துப் பேசும்போது, 40 நிமிடம் பேசினாலும் - 15 நிமிடம் பெரியாரைப்பற்றி, தமிழ் நாட்டைப் பற்றி, திராவிடர் கழகம் பற்றிதான் பேசுவார். அதேபோல, பெரியாரிடம் பேசும்போது, இந்தநாட்டைப்பற்றி சமுதாயத்தைப் பற்றிப் பேசும்போது, அம்பேத்கரைப் பற்றி 10 நிமிடம் பேசுவார். அம்பேத்கரும் பெரியாரும் ஒத்தக் கருத்துடையவர்களாக இருந்தார்கள் என்று, கூட்டம் போட்டுச் சொல்லத் தேவையில்லை.

இந்த நாட்டில் அம்பேத்கரும் பெரியாரும் இல்லாமல் இருந்திருந்தால், தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டும் அல்ல; பிற்படுத்தப்பட்ட மக்கள் எல்லாம்கூட, இன்றைக்கு முன்னேறியிருக்க முடியாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இதை நான் பல நேரங்களில் பல இடங்களில் சொல்லியிருக்கிறேன். இந்த நாட்டுக்கே சமூக நீதி வேண்டும் என்று புரட்சியைக் கொண்டு வந்தவர்கள் இந்த இரண்டு சிந்தனையாளர்கள் தான்; வேறுயாரும் இல்லை.

**இந்த நாட்டில் அம்பேத்கரும் பெரியாரும் இல்லாமல் போயிருந்தால், தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டும் அல்ல; பிற்படுத்தப் பட்ட மக்கள் எல்லாம்கூட, இன்றைக்கு முன்னே றியிருக்க முடியாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.**

■■

இந்து மதம் மட்டுமல்ல; மதம் என்கிற தன்மையையே மாற்றி அமைத்து, சமூகத்தில் சமத்துவத்தை ஏற்படுத்தி அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று பாடுபட்டு 60, 70 ஆண்டுகளுக்கு முன்பே அந்தக் கட்டமைப்பையே மாற்றி அமைத்தவர்கள் - இந்தியாவிலேயே அம்பேத்கரும் பெரியாரும் தான். ஒருசமயம் அம்பேத்கரின் உரையை வெளியிட மறுத்துவிட்டார்கள். அதை அச்சிட்டு வெளியிட்டவர் பெரியார் தான். இன்றைக்கு இந்த இருவரைப் பற்றி நாடு முழுவதும் பேசப்படுகிறதே ஏன்? சமூக நீதிக்கு இந்த இரண்டு பேரும்தான் - ஒரு உருவத் தோற்றத்தைக் கொடுத்தார்கள்.

தன்மானத்தின் மறு பெயர் அம்பேத்கர்தான். பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்துப்போடும்போது அம்பேத்கர் சொல்கிறார்: நான் கோடிக் கணக்கான என் மக்களைக் காப்பாற்றுவதா அல்லது ஒரு மனிதனின் உயிரைக் காப்பாற்றுவதா என்ற குழப்பத்தில் இருக்கிறேன். ஒருவேளை அவர்கையெழுத்துப் போடவில்லை என்றால் என்ன ஆகியிருக்கும்? அடுத்த நாள் காலையில் அவர் இருந்திருக்க மாட்டார்! அது தான் அவருடைய தியாகத்திற்கு எடுத்துக்காட்டு; தேசப்பற்றுக்கு எடுத்துக் காட்டு.

திரு. சந்திரசேகசன் அவர்கள் மிகுந்த சிரமங்களுக்கிடையே இந்த இதழை நடத்தி வருகிறார். அம்பேத்கர் மற்றும் இரட்டைமலை சீனிவாசன் காலத்தில் ஆறு கோடி தாழ்த்தப்பட்டவர் வாழ்ந்தார்கள். இன்று நாம் 30 கோடி பேர் வாழ்கிறோம். அனைவரும் ஒன்றாகச் சேர்ந்தால்தான் நமக்கு வாழ்வு. தான் எழுதிய இந்து சட்ட முன் வரைவு மசோதா மூலம் - இந்தியாவின், இந்து மதத்தின் மூலம் நிலவிவரும் சாதிக் கொடுமை, தீண்டாமை, பெண்களுக்கு எதிரான கொடுமைகள் போன்றவற்றை சீர் செய்ய விரும்பினார். அதற்கு வாய்ப்பில்லை என்றபோது, மத்திய அமைச்சரவையில் இருந்து வெளியேறினார். அந்த அளவிற்கு தன்மானமே பெரிது என வாழ்ந்த சுயமரியாதைச் சுடர்தான் அம்பேத்கர்.

அவர் எழுதித்தந்த அரசியல் சட்டத்தை மிக நல்லமுறையில் உணர்ந்து இயங்கும் குடியரசுத் தலைவராக திரு. கே.ஆர். நாராயணன் அவர்கள் வாழ்கிறார்கள். இது வரை இருந்த குடியரசுத் தலைவர்களிலேயே இவர் பல துணிச்சலான முடிவுகளை எடுத்துள்ளார். தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல், உலக மயமாக்கல் போன்ற நடவடிக்கைகள் தலித் மக்களுக்கு எதிரானதாகும். எந்த தனியார்துறையும் தலித் மக்களுக்கு அவர்களது திறமை அடிப்படையில் வேலை தருவதில்லை. தலித் மக்களுக்கு வேலை இல்லை என்பதன் மறு பெயரே - தனியார் மயமாக்கல் தான். இதை தலித் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். குறைந்த பட்சம், நமது இன்றைய அரசியல் சாசனத்தில் வரையறுத்துள்ள இட ஒதுக்கீட்டை உறுதி செய்த பிறகாவது, அரசியல் சட்ட ஆய்வுக் குழுவை அமைத்திருக்கலாம். இதை நீங்கள் இப்பொழுது வலியுறுத்த வேண்டியது அவசியம். ●

- நம் செய்தியாளர்






பக்கம் : 88 விலை : ரூ. 20 பக்கம் : 28 விலை : ரூ. 5

வெளியீடு : தலித் தகவல் ஒருங்கிணைப்பு
ஈ - 21, கே.கே. நகர், சென்னை - 600 078




படிப்பகம்

www.padippakam.com



# தகுதி, திறமை, வெங்காயம்

### இரு பாடங்களில் 200/200 எடுத்து தலித் மாணவர் சாதனை

இந்த ஆண்டு +2 தேர்வில் மூன்று லட்சம் மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் மாநில அளவில் நடைபெறும் இந்தத் தேர்வில் - கணிதம், வேதியியல், இயற்பியல் போன்ற பாடங்களில் பார்ப்பனர்களும், சாதி இந்துக்களும் 200/200 மதிப்பெண்கள் பெற்று வருவதாக பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இந்த ஆண்டும் இந்த மூன்று பாடங்களிலும் 200/200 தேர்ச்சி பெற்றவர்கள் என மூன்று மாணவர்களை பத்திரிகைகள் அடையாளம் காட்டியுள்ளன.



ராஜேஷ்

மாநில அளவில் மூன்றே மூன்று மாணவர்கள்தான் 200/200 மதிப்பெண் பெற்றுள்ளனர். ஆனால், இரண்டு பாடங்களில் 200/200 மதிப்பெண் பெற்றவர்களை பற்றி செய்திகளை எந்தப் பத்திரிகையும் வெளியிடவில்லை. சென்னை சேத்துப்பட்டு பகுதியைச் சேர்ந்த ராஜேஷ் என்ற தலித் மாணவர் - கணிதம், வேதியியல் ஆகிய இரு பாடங்களிலும் 200/200 மதிப்பெண் பெற்றுள்ளார்; இயற்பியலில் 194/200 மதிப்பெண்கள் பெற்று சாதனை புரிந்துள்ளார்.



ராஜேஷ் தனது குடும்பத்தினருடன்

இவர் மிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்தவர். இவர் தனது 8ஆம் வகுப்புவரை சென்னையில் உள்ள, மாநகராட்சிப் பள்ளியில் பயின்றார். தனது 10ஆம் வகுப்பு வரை தமிழ் வழியிலேயே கல்வி கற்றார். எம்.சி.சி.யில். +1 முதல் குருப் ஆங்கில வழியில் மட்டுமே இருப்பதாலும், பொறியியல் கல்லூரிப் பாடத் திட்டங்களும் ஆங்கில வழியில் மட்டுமே இருப்பதாலும், இவர் +1 ஆங்கில வழியில் சேர்ந்து படித்தார். +1, +2 இரு ஆண்டும் ஆங்கில மொழியை உணர்ந்து புரிந்து கொண்டு தேர்ச்சி பெறுவதே சிரமமாக இருக்கும். ஆனால், இவர் இரவு பகல் பாராது மிகக் கடுமையாக உழைத்து, மொழிப் பிரச்சனையையும் கடந்து மிகப் பெரிய அளவில் சாதனை புரிந்துள்ளார்.

**தகுதி, திறமை என்பதெல்லாம் தங்களுக்கு மட்டுமே சொந்தம் என உரிமை கொண்டாடும் ஆதிக்க சாதிக் கும்பலுக்கு சவால் விடுகின்ற அளவில் சாதனை புரிந்துள்ளார் ராஜேஷ். வாய்ப்புகள் கிடைத்தால், வாய்ப்புகள் மறுக்கப்பட்ட மாணவர்கள்கூட, சிகரத்தின் உச்சியை எட்ட முடியும். அந்தவகையில் தகுதி, திறமை எல்லாம் வெறும் வெங்காயம்தான் என்று மெய்ப்பித்திருக்கிறார் இவர்.**

இவருக்கு நல்லதொரு சூழலையும் ஊக்கத்தையும் கே.கே.டி.சி. என்று அழைக்கப்படும் மாணவர் தனிப் பயிற்சி நிறுவனம் ஏற்படுத்திக் கொடுத்தது. திரு. பரணீதரன் தலைமையில் ஒரு சில சமூக அக்கறையுள்ள இளைஞர்களால் சேர்ந்து நடத்தப்படும் இந்நிறுவனம், கல்விப் பணியில் அமைதியான - ஆனால் வியக்கத்தக்க சாதனைகளைப் புரிந்து வருகிறது. சென்னை சேத்துப்பட்டில் அமைந்துள்ள இப்பயிற்சிக் கூடத்தில் படித்துள்ள மாணவர்கள் அனைவரும் 10ஆவது வகுப்பில் 80க்கு மேல் எடுத்துள்ளனர்.

''10 ஆம் வகுப்புவரை தமிழில் பயின்று 11ஆம் வகுப்பில் சிரமமான வேதியியல், இயற்பியல் போன்ற பாடங்களை எப்படி ஆங்கில வழியில் பயின்றீர்கள்?'' என்று நாம் அவரைக் கேட்டதற்கு,

''முதல் மூன்று மாதங்கள் கண்ணைக் கட்டி காட்டில் விட்டதுபோல இருந்தது. வகுப்பில் ஆசிரியர்கள் நடத்தும் பாடங்கள் மொழிப்பிரச்சனை காரணமாக, பாடத்தின் விளக்கத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. மொழியைப் புரிந்து கொள்ள இயலாத நிலையில் - அம்மொழியில் வேதியியலையும், இயற்பியலையும் படிப்பது சிரமமாகத்தான் இருந்தது. இதற்காக மீண்டும் மீண்டும் ஒரே பாடத்தை பலமுறை படிப்பேன். எனது கே.கே.டி.சி. ஆசிரியர்கள் மிகுந்த ஊக்கம் தந்தனர்'' என்றார் ராஜேஷ். ●

- சோபகன்



படிப்பகம்

www.padippakam.com



# இல்லற இணைப்பு விழா அழைப்பிதழ்







**மணமக்கள்:**

## டி. நித்தியானந்தம், பி.ஏ., பி.எல்., கோ. ஜான்சிராணி

**மணநாள் : 12.07.2000 நேரம் : காலை 9.00**

**தலைமை :** ஏ. கோதண்டம், எம்.எல்.ஏ., திருப்பெரும்புதூர்,

**வரவேற்புரை :** ஈ. சின்னதுரை, வேதா அருண், சி. ஆறுமுகம், அய்.சி.எப், வி. உதயகுமார், எம்.ஏ.,

**முன்னிலை :** கே.ஏ. கபாலி, எம்.தாசன், ஈ. மகாலிங்கம், எம்.கே. சீனிவாசன், டி.பாலு
சி.பெருமாள், ஈ. பலராமன், அய். சர்க்கரை, இன்பநாதன் (அய்.ஏ.ஏ.அய்), தியாகிரங்கன், கே. ரவிச்சந்திரன்

**மணவிழாவை நடத்தி வைத்து வாழ்த்துரை :** அய்யா எல். இளைய பெருமாள், முன்னாள் எம்.பி.

**மணமக்களை வாழ்த்துவோர்**

டாக்டர். பூவை மூர்த்தியார், எம்.ஏ.எம்.எல்.
புரட்சி பாரதம்,

சி.கே. தமிழரசன், எம்.ஏ.,
முன்னாள் எம்.எல்.ஏ.,

பேராசிரியர் பெரியார்தாசன், எம்.ஏ.
பச்சையப்பன் கல்லூரி

பெ. சந்திரசேகரன்
மா.த. தலித்சேனா

வி. பலராமன், எம்.ஏ.,
டி.சி.எல்., ஓய்வு.,

தங்கராஜ், அய்.ஜி.ஐ.பி.எஸ்.
காவல்துறை,

தாழை.க. மோகனன் த.வ.மா.ஆ.சென்னை

இரா. திருமாவளவன், எம்.ஏ.பி.எல்.,
அமைப்பாளர், விடுதலைச் சிறுத்தைகள்

அ. சக்திதாசன்
தலைவர் ஆர்.பி.அய்.,

என். ராஜாங்கம், முன்னாள் எம்.பி.,
பி.எஸ்.பி. மா.பொ.செ

எம். மலையாளம், எம்.ஏ.
டி.ஆர்.ஓ. ஓய்வு.,

டாக்டர். எம். நாகப்பன், எம்.ஏ.
த.அ.இ.இயக்கம்.,

என் தர்மன், பி.ஏ., பி.எல்.,

பொன். கோவிந்தராஜ் பி.எஸ்.சி.

வி. கருப்பன், அய்.ஏ.எஸ்., ஓய்வு
தலைவர் ப.நில.மீ. இயக்கம்,

கே.எம். சுப்ரமணியம், அய்.ஏ.எஸ்.
இயக்கனர் மலைஜாதி மக்கள்,

டாக்டர் வரப்பிரசாதராவ், அய்.ஏ.எஸ்.,
இயக்குனர் மலைஜாதி மக்கள்,

கவிஞர். ராசமாணிக்கம், பி.எஸ்சி.,
மா.பொ. செயலர் வி.ஏ.ஓ.எம்.எஸ்.,

டாக்டர். சுசிலா மாரியப்பன்,
சென்னை பல்கலைக் கழகம்

ஏ.ஜி. மவுரியா, அய்.பி.எஸ்.
காவல்துறை.,

ஆ. தாமோதரன், மேஸ்திரி

(வி.ம்)

இடம் : **அய்யப்பன் தாங்கல் லட்சுமி திருமண மாளிகை**

படிப்பகம்

# “எல்லோரையும் கீழ்சாதி ஆக்க வேண்டும்”

நூல் :
‘இந்துத்துவா - ஒரு பன்முக ஆய்வு’
ஆசிரியர் : அ. மார்க்ஸ்
வெளியீடு : அடையாளம்
எச்-15 / 193, 2ஆவது தளம்
கருப்பூர் சாலை
புத்தாநத்தம் - 621 310
பக்கம் : 160
விலை : ரூ. 60/-

இந்துத்துவம் - ஒரு பன்முக ஆய்வு என்ற இந்நூல் பேரா. அ. மார்க்ஸ் அவர்களால் பல் வேறு காலகட்டங்களில் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாகும். இதில், ‘இந்துத்துவத்தின் பரிணாமம் - ஒரு வரலாற்றுக் குறிப்பு’; ‘இந்துத் துவம்: தலித் மக்கள் - பெண்கள்’; ‘இந் துத்துவ வகுப்பு வாதம் மற்றும் வகுப் புக் கலவரங்களின் சில முக்கிய பரிமா ணங்கள்’; ‘இசுலாமியருக்கு இந்துத்து வம் சொல்லும் சேதி’; ‘இந்துத்துவ அணுகுண்டு’; ‘ஏழுகடல் கடந்து வேர் ீட்டும் இந்துத்துவா’ என பன்னி ரண்டு கட்டுரைகள் அமைந்துள்ளன.

இந்தப் பன்னிரண்டு கட்டுரை களும் அன்றாட நிகழ்வுகளை ஆதார மாகக் கொண்டு தெளிவாக எழுதப் பட்டுள்ளன. இவை இந்துத்துவத்தின் பன்முகத் தன்மையை விரிவாகப் பேசு கின்றன. ஆசிரியரின் தொலை நோக் குப் பார்வைக்கு, காலந்தோறும் மாறி வரும் இந்துத்துவச் சொல்லாடல் பற் றிய விளக்கம் ஒரு மைல்கல். ஆளும் கட்சியை / ஒரு கட்சியின் செயல் பாட்டை அறிந்திருந்தும் சமூகத்தின் மீதான அக்கறையை முக்கியப்படுத்தி, இந்துத்துவச் சொல்லாடல் விளக்கப் பட்டிருப்பது பாராட்டுதற்குரிய முயற்சி.

இந்நூலில், இந்துத்துவம் என்ற சொல்லாடல் - பார்ப்பனீயத்தை ஆத ரிப்பது; வருணாசிரம தர்மத்தைக் காப்பாற்றி வருவது; வகுப்புவாதத்தை ஆதரிப்பது; இஸ்லாமிய, கிறித்தவ மதத்திற்கு எதிரானது என்ற அர்த்தத் தில் விளக்கப்பட்டுள்ளது. இந்த மண் ணில் எழுந்துள்ள பல பிரச்சனை களுக்கு ஆணி வேராக விளங்குவது இந்துத்துவம் என்பது, வரலாற்று ஆதா ரங்களோடு எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மதவாதம், பாசிசம் மூலம் இந்த நாட்டில் வாழும் தலித் மற்றும் பிற்ப டுத்தப்பட்ட மக்களை வறுமைக் கோட்டிற்குள்ளேயும், வேலைவாய்ப் பின்மை மூலமாக வும், சாதிரீதியாக எவ் வாறு ஒடுக்கமுடியும் என்பதைச் செயல் படுத்தி வருவதற்குப் பேருதவியாக - இந்துத் துவம் திகழ்வதை, மக் கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதைத் தெளிவாக இந்நூல் எடுத்துக்காட்டுகிறது.




இதற்கு ஆதாரமாக, ராபர்ட் பிரைகான் பர்க் என்கிற ஆய்வாளர், இந்துத்துவம் என் கிற கோட்பாட்டின் கட்டுருவாக்கம் என்பது, ஒரு மேல்தட்டுச் சிறுபான் மைகளின் கூட்டமைப்பு (உயர்சாதி + அதிகார வர்க்கம் + ஆண் + முதலாளி கள்) மற்ற எல்லோரையும் மேலாண்மை செய்யும் முயற்சியைத்தவிர வேறொன்று மில்லை என்று குறிப்பிட் டுள்ளார்.

விசுவ இந்து பரிஷத் மற்றும் ஆர்.எஸ்.எஸ். தன் கால்சுவட்டை ஆக்டோ பசாக விரித்து வருவதை இந்துத்துவம் காப்பாற்றி வருகின்றது. இதற்கு ஆதாரமாக, பாரதீய ஜனதா கட்சியின் மறை முகத்திட்டங்கள் மெல்ல வெளிப்பட் டுக் கொண்டிருக்கின் றன. தாங்கள் ஆளும் மாநி லங்களில், வந்தே மாதரம் பாடலைப் பள்ளிப் பிள்ளைகளிடம் பதித்தல்; மும்பை போன்ற நகரங்களில் இசுலாமிய கலை ஞர்கள், பாகிஸ்தான் விளையாட்டு வீரர்கள் ஆகியோர் நிகழ்ச்சிகள் நடத்த முடியாத நிலை; குடியரசுத் தலைவர் ஆட்சிமுறை பற்றிய கருத்துக்களைப் பரப்புதல்; கடைசியாக, அணுகுண்டு வெடிப்பு என்பதாக மறைமுகத்திட்டத் தின் கூறுகள் வெளிப்படுகின்றன என்ற பகுதியைச் சுட்டலாம்.

இந்துத்துவ வெறியர்கள், இஸ்லா மியரை எதிர்ப்பாகக் கொண்டு செயல் பட்ட களம் இப்பொழுது கிறித்துவத் தையும், தலித் மக்களையும், பெண்களை யும் குறிவைத்துத் தாக்கி வருவதை கொள்கையாகக் கொண்டுள்ளது. வரு ணாசிரம தர்மம் புதுப்பிக்கப்பட்டு, கிராமந்தோறும் சாதிக் கலவரம் தூண் டப்பட்டு வருகின்றது. இந்துத்துவத்தை ஆதரிப்பவர்களுக்கு இந்நூல் எரிச்ச லைத் தரலாம். ஆனால், நாள்தோறும் எரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சிறு பான்மையின மக்களுக்கும் சனாதனத் திற்கு எதிராக எழுபவர்களுக்கும் இது ஒரு பயன்மிக்க நூல். ●

- அரங்க. மல்லிகா

## நூலிலிருந்து...

இந்திய சமூகத்தில் உழைப் பிலும் உற்பத்தியிலும் வரலாறு முழுவதிலும் பங்கு பெற்று வந்திருப்போர் - கீழ் சாதி யினரும் பெண்களும்தான்; மற்ற வர்கள் உற்பத்தியிலிருந்து நாட் டைப் பின்னுக்கிழுத்தவர்கள், சுரண்டி வாழ்ந்தவர்கள். எனவே, இன்றைய பிரச்சனைகளுக்கான தீர்வு என்பது, எல்லோரையும் கீழ்ச் சாதியினராக - தலித் மக்களாகவும் பெண்களாகவும் உணர வைப்பதுதான்.

இந்த வகையில், ஆண்களாக வும் தலித் அல்லாதவர்களாகவும் பிறந்துவிட்ட ஜனநாயக சக்திகள், தங்களின் வரலாற்றுக் கடமையை அறிந்து - தலித்துகளாகவும், பெண் களாகவும் உணர்ந்து அவர்களோடு இணைந்து நிற்பது அவசியம்.

# அவசர நிலை

## அறிவிக்கப்படாமல் வருகிறது

ரவிக்குமார்

அவசரநிலை அறிவிக்கப்பட்டு 25 ஆண்டுகள் ஆகிவிட்டதை நினைவுகூர்கிற எவரும் - அந்தக்கொடிய நாட்களின் பயங்கரத்தை எண்ணி அதிராமல் இருக்க முடியாது. இப்போதோ அதை விடவும் மோசமான ஒரு நிலை நெருங்கிக் கொண்டிருக்கிறது. வழக்கொழிந்து போன 'தடா' சட்டத்துக்கு மாற்றாக - புதிய 'தடா' சட்டமொன்றை பா.ஜ.க. கூட்டணி அரசு கொண்டு வரஉள்ளது. **'பயங்கரவாத தடுப்பு மசோதா- 2000'** என்ற பெயரில் வரவிருக்கும் அது, விரைவில் சட்டமாக உள்ளது.

1995இல் தடா சட்டம் வழக்கொழிந்து போனது. அப்போது அதற்கு கிளம்பிய எதிர்ப்பு, அந்தச் சட்டத்தைப் புதுப்பிக்க முடியாமல் நரசிம்மராவ் அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியது. ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். நீதிபதியோ, பேராசிரியரோ, நடிகரோ, அரசியல் தலைவரோ எவரையும் விட்டு வைக்கவில்லை அந்தச் சட்டம். அப்போது பா.ஜ.க.வை தவிர வேறு எந்தவொரு பெரிய கட்சியும் தடாவை ஆதரிக்கவில்லை. காங்கிரசுக்குள்ளும் எதிர்ப்பு.

சர்வதேச மனித உரிமை அமைப்புகள், அய்.நா. சபை என, அந்த சட்டம் எல்லா தரப்பினரது கண்டனத்துக்கும் ஆளாகியது. வேறு வழியில்லாமல் தடா சட்டத்தைக் கைகழுவிய நரசிம்மராவ் அரசு, உடனடியாக அதற்கு மாற்றாக இன்னொரு சட்டத்தைக் கொண்டுவர முயற்சித்தது. குற்றவியல் நடைமுறைத் திருத்த மசோதா - என்ற பெயரில் மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தப்பட்ட அந்த புதிய தடாவை, அப்பொழுது இடதுசாரிக் கட்சிகள் கடுமையாக எதிர்த்தன. எனவே, அந்த மசோதாவும் கிடப்பில் போடப்பட்டது. அப்படி காங்கிரஸ் அரசால் கிடப்பில் போடப்பட்டிருந்த மசோதாவைத்தான் இன்று பா.ஜ.க. கொண்டு வருகிறது.



பா.ஜ.க.வின் இந்த முயற்சி குறித்து செய்தி அறிந்தவுடன், இந்தியாவிலுள்ள பல்வேறு மனித உரிமை அமைப்புகளும் அதை எதிர்க்க களத்தில் இறங்கின. கடந்த ஏப்ரல் மாதம் 22, 23 தேதிகளில் டெல்லியில் கூடிய மனித உரிமை அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், இந்த மசோதாவுக்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்தனர். இந்த புதிய தடா சட்டத்தை உருவாக்குவதில் சட்டக்கமிஷனும், இந்திய மனித உரிமைகள் ஆணையமும் ஈடுபட்டதைக் கண்டித்த அவர்கள், இத்தகைய சட்டங்கள் நாடு தற்போது சந்திக்கும் பிரச்சனைகளைத் தீர்க்க உதவாது என்பதை சுட்டிக்காட்டினர். **'பயங்கரவாதம்' என கூறப்படும் பிரச்சனையின் வேர்கள் சமூக, அரசியல் பிரச்சனைகளில் ஆழப் பதிந்துள்ளன. அது மட்டுமின்றி, இத்தகைய சட்டங்கள் அதிகாரத்துவத்தை மேலும் வலுவாக்குகின்றன எனவும் அவர்கள் தெரிவித்தனர்.**

ஆனால், இந்த சட்டத்தை 'மனித முகம் கொண்ட தடா' என மத்திய உள்துறை அமைச்சர் அத்வானி வர்ணித்துள்ளார். இப்படியான சட்டங்கள் ஒரு போதும் மனித முகத்தைப் பெறமுடியாது. நரசிம்மராவ் அரசு அந்த மசோதாவைக் கொண்டு வந்தபோது, 'அம்னஸ்டி இன்டர் நேஷனல்' சில பரிந்துரைகளை முன்வைத்தது. தடா வழக்குகளை மறுபரிசீலனை செய்வதற்காக அமைக்கப்பட்ட குழுக்களின் கருத்துகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்று 'அம்னஸ்டி' குறிப்பிட்டது.

தற்போது கொண்டுவரப்
படும் புதிய தடா சட்டம் இந்திய
அரசு கையெழுத்திட்டுள்ள சர்வ
தேச உடன்படிக்கைகளுக்கு எதி
ராக உள்ளது. குறிப்பாக, சிவில்
மற்றும் அரசியல் உரிமைகளுக்
கான சர்வதேச ஒப்பந்தத்தின்
(ICCRP) பிரிவுகளுக்கு நேர் எதி
ராக இந்த புதிய தடா சட்டப்
அமைந்துள்ளது. அது மட்டு
மின்றி, இந்திய அரசியலமை
புச் சட்டத்தின் பிரிவுகள் பலவ
றுக்கு எதிராகவும் இச்சட்ட
உள்ளது.

அரசியலமைப்புச் சட்ட
தின் 14ஆவது பிரிவு 'இந்திய கு
மகன் எவருக்கும் சட்டத்தின்முன் சம
துவத்தை மறுக்கக்கூடாது. சட்ட
பாதுகாப்பை மறுக்கக்கூடாது' எ
வலியுறுத்துகிறது. ஆனால், இந்த பு
யதடா சட்டத்தின் கீழ கைது செய்ய
படும் ஒருவருக்கு இந்தப் பாதுகாப்
கிடைக்க வாய்ப்பில்லை. எனவே, அ
சியலமைப்புச் சட்டத்தின் ஆதாரமா
இந்த உரிமையை புதிய தடா சட்ட
மறுக்கிறது.

புதிய தடா சட்டத்தின் பிரி
3(3)இன் படி பயங்கரவாதத்துக்கு
வியவர்களுக்கு தண்டனையை வ
றுக்கிறது. ஆனால், அவர்களின் நே
கம் என்னவாக இருந்தது என்பது ப
அந்தப்பிரிவு அக்கறை செலுத்தவில்ல

www.padippakam.com

தடா சட்டத்தில் இருந்த இத்தகைய பிரிவுதான் அப்பாவிகள் பலர் கைதாகக் காரணமாக இருந்தது என்பது நினைவு கூறத் தக்கதாகும். தடா சட்டத்தின் செல்லுபடித்தன்மையை பரிசீலித்த உச்சநீதிமன்றம் (சர்தார்சிங் எதிர் பஞ்சாப் மாநில அரசு) தூண்டுதல் அல்லது ஈடுபடுதல் என்பது ''குற்ற எண்ணம்'' என்பதோடு இணைத்துப் பார்க்கப்பட வேண்டும் என தெளிவுபடுத்தியிருந்தது. அதாவது, ஒருவர் இன்னொரு நபரோடு தொடர்பு வைக்கும்போது அந்த நபர் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார் என்பது பற்றி அவர் அறிந்திருந்தாரா எனப்பார்க்க வேண்டும் என உச்சநீதி மன்றம் குறிப்பிட்டது. உச்சநீதி மன்றத்தின் இந்த முக்கியமான தீர்ப்பு, புதிய தடா சட்டத்தில் மீறப்பட்டுள்ளது.

புதிய தடா மசோதாவின் பிரிவு 24இன் படி, விசாரணை தொடங்குவதற்குமுன் அரசு தரப்பு சாட்சியங்களின் தன்மை குறித்து கேள்வி எழுப்ப முடியாது. இந்தச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் ஒரு நபர் அவருக்கு எதிராகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கு ஆதாரங்களே இல்லாவிட்டாலும் கூட, விசாரணை தொடங்கும்வரை எதுவும் பேசமுடியாது. சிறையில் கிடக்க வேண்டியதுதான். தடா சட்டத்திலும் இதுதான் நடந்தது. ஆயிரக்கணக்கானோர் விசாரணையின்றி சிறையில் அடைக்கப்பட்டனர்.

பின்னர் அமைக்கப்பட்ட ஆய்வுக் குழுக்கள் அவர்களுக்கு எதிராக போதிய ஆதாரங்கள் இல்லையென அவர்களில் பலரை விடுவித்தன. இதனிடையே அவர்கள் பல ஆண்டுகளை ஒரு காரணமுமின்றி சிறையில் கழிக்க வேண்டி ஆனது. இந்த புதிய தடா சட்டமும் அதே நிலையை உண்டாக்கும்.

புதிய தடாவின் பிரிவு 30(2)ன் படி, ஒருவரை போலிஸ் காவலில் 90 நாட்கள் வைக்கலாம். குற்றச்சாட்டுகளை பதிவு செய்யவோ, விசாரணை துவங்கவோ தேவையில்லை. அரசு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டால், இது 180 நாட்கள் வரை அனுமதிக்கப்படும். அதாவது ஒருவரை ஆறுமாதம் வரை எந்தவித குற்றச்சாட்டும் இல்லாமலேயே சிறையில் அடைத்துவிட முடியும். இது ICCRPன் பிரிவுகள் 9(2) மற்றும்

# கொடிய 'தடா' சட்டம்

• வழக்கு விசாரணை வெளிப்படையாக இருக்கவேண்டுமென்பதே பலரும் ஏற்றுக் கொண்ட, வலியுறுத்துகின்ற அம்சமாகும். ஆனால், புதியதடா சட்டமோ வழக்கு விசாரணையை ரகசியமாக (Trial in Camera) நடத்திக் கொள்ள வகை செய்கிறது.

• தடா சட்டத்தின் பிரிவு 5, இந்தப் புதிய தடா சட்டத்தின் பிரிவு 4ஆக சேர்க்கப்பட்டுள்ளது. இதன்படி அனுமதியின்றி ஆயுதம் வைத்திருந்தால், அது பயங்கரவாத செயலாகும். இந்தப் பிரிவின்படிதான், இந்தி நடிகர் சஞ்சய்தத் கைது செய்யப்பட்டார் என்பது நினைவுகூறத் தக்கதாகும். மேலும் ஆயுதமோ, வெடி மருந்தோ, வைத்திருந்ததாக யாரை வேண்டுமானாலும் போலிஸ் கைது செய்துவிடலாம். புதிய தடாவின் பிரிவு 24(5)ன் படி குற்றம் சாட்டப்பட்டவர் இல்லாமலேயே கூட வழக்கை விசாரித்து தீர்ப்பு வழங்கிவிடலாம். குற்றம் சாட்டப்பட்டவர் தனது தரப்பினை எடுத்துச் சொல்ல வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்ற சர்வதேச சட்டங்களின் நெறிமுறைகளை அப்பட்டமாக புதிய தடா சட்டம் மீறுகிறது.

• புதிய தடாவின் பிரிவு 25(2) மற்றும் 3(இன்) படி, அரசு தரப்பு சாட்சிகள் யாரென்பதை ரகசியமாக வைத்துக்கொள்ளலாம். குற்றம் சாட்டப்பட்டவர் தனக்கு எதிராக சாட்சியம் சொல்பவர்களை குறுக்கு விசாரணை செய்யும் வாய்ப்பு இதன் மூலம் மறுக்கப்படுகிறது. அந்த சாட்சி சரியானவரா அல்லது ஜோடிக்கப்பட்ட பொய் சாட்சியா என்பதை வெளிப்படுத்தும் வாய்ப்பு பறிக்கப்படுகிறது. இந்தப் பிரிவு, தடா சட்டத்திலும் இருந்தது. தடா சட்டம் பற்றி விசாரித்த உச்ச நீதிமன்றம் இந்தப் பிரிவு குறித்த கடுமையான கண்டனத்தைத் தெரிவித்திருந்தது நினைவு கூறத்தக்கதாகும்.

• புதிய தடா மிகமோசமானது என்பதற்கு அதன் பிரிவு 3(8) ஒரு எடுத்துக்காட்டாகும். இந்தப் பிரிவு தடா சட்டத்தில்கூட இல்லை. இந்தப் பிரிவின்படி, பயங்கரவாதியைப் பற்றியோ அல்லது பயங்கரவாத செயல்குறித்தோ ஒருவர் தகவல் அறிந்திருந்தால், அதை அவர் போலிசிடம் சொல்லிவிட வேண்டும். இல்லாவிட்டால் அவருக்கு மூன்று ஆண்டுகள்வரை சிறை தண்டனை கொடுக்கலாம். இந்தப் பிரிவு பத்திரிகையாளர்களைக் குறிவைத்தே சேர்க்கப்பட்டுள்ளது. பயங்கரவாதி என போலிஸ் ஒருவரை அறிவித்துவிட்டால் - அவரது பேட்டியோ, அவர் குறித்த தகவலோ பத்திரிகையில் வெளிவர முடியாது. அப்படி வந்தால் அதற்குப் பொறுப்பான பத்திரிகையாளரைக் கைது செய்யலாம், சிறையில் அடைக்கலாம்.

• விசாரணையின்றி போலிஸ் காவலில் ஆறுமாதம் வரை வைத்திருக்க வகைசெய்யும் புதிய தடாவின் பிரிவு 30(2) மிகவும் ஆபத்தானதாகும். போலிஸ் காவல் என்றாலே சித்ரவதை என்றுதான் அர்த்தம். பஞ்சாபில் பல்லாயிரக்கணக்கானோர் இப்படி சித்ரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டனர் என்பதை தற்போது வரும் செய்திகள் வெளிப்படுத்துகின்றன. 1.4.99 முதல் 31.3.2000 வரையிலான ஒரு ஆண்டில் மட்டும், போலிஸ் காவலில் 1150 கொலைகள் நடந்துள்ளதாக (Lockup Deaths) தேசிய மனித உரிமைகள் ஆணையத்துக்கு (NHRC) வந்த புகார்கள் தெரிவிக்கின்றன. இதுதவிர, 5783 புகார்கள் போலிசார் செய்த பல்வேறுவிதமான அநீதிகள் குறித்து தெரிவிக்கின்றன. இந்திய போலிஸ் எந்த நிலையில் உள்ளது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். மேலும் இப்படி காவல் நிலையங்களில் நடக்கும் அத்து மீறல்களுக்கு ஆளாவது - பெரும்பாலும் தலித் மக்கள் தான் என்பதையும் கவனிக்க வேண்டும்.

• தடா சட்டத்தில் இருந்த இன்னொரு மோசமான பிரிவு இதில் தொடர்கிறது. சாட்சிய சட்டத்தை (Evidence Act) தடா சட்டம் சீர்குலைத்து போலிசிடம் தரப்படும் வாக்கு மூலம் செல்லாது என இந்திய சாட்சிய சட்டம் கூறுகிறது. ஆனால், தடா சட்டமோ அது செல்லும் என ஆக்கியது. சித்ரவதை செய்து போலிசால் பெறப்பட்ட ஒப்புதல் வாக்கு மூலங்களின் அடிப்படையில், பலருக்கு தண்டனை தரப்பட்டதை இங்கே நினைவுபடுத்திக் கொள்வோம். ராஜிவ் கொலைவழக்கில் தூக்குத்தண்டனை வழங்கப்பட்டதும் இப்படிப் பெறப்பட்ட ஒப்புதல் வாக்கு மூலங்களின் அடிப்படையில்தான். தடா பற்றிய உச்சநீதிமன்றத் தீர்ப்பில் ஒரு நீதிபதி இந்தப் பிரிவினை கடுமையாக விமர்சித்திருந்தது குறிப்பிடத்தக்கது. அப்படியிருந்தும் அந்தப் பிரிவு இந்த புதிய தடா சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

• புதிய தடா சட்டத்தின் பிரிவு 37(1) மத்திய மாநில அரசுகளின் அதிகாரிகளுக்கு சில பாதுகாப்பை வழங்குகிறது. அதாவது தங்கள் கடமையைச் செய்யும் நோக்கோடு அவர்கள் செயல்படும்போது, அநீதி இழைக்கப்பட்டால் அதற்காக அவர்களைத் தண்டிக்க முடியாது. இது போலிசுக்கும் பிற அதிகாரிகளுக்கும் அவர்கள் விருப்பம்போல செயல்பட்டு எவரை வேண்டுமானாலும் பழிவாங்க வகை செய்கிறது. அவர்கள் சட்டத்துக்குப் புறம்பாக செய்யும் செயல்களுக்காக அவர்களைத் தண்டிக்கவோ, அவர்களிடமிருந்து பாதிக்கப்பட்டவர் இழப்பீடு பெறவோ முடியாது. •



படிப்பகம்

www.padippakam.com

9(3) ஆகியவற்றுக்கு நேரெதிராக உள்ளது. ஒரு நபர் மீது சாட்டப்படும் குற்றச்சாட்டு என்னவென்பது குறித்து அவருக்கு தெரிவிக்கப்படவேண்டும். நியாயமான கால அளவுக்குள் விசாரணை நடத்தப்பட வேண்டும் என அவ்விதிகள் தெரிவிக்கின்றன.

புதிய தடாவின் பிரிவு 31இல் கைது குறித்து விசாரிக்க ஆய்வுக்குழு அமைக்கப்படும் என கூறப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்குழு, அரசாங்க அதிகாரிகளைக் கொண்டு அமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், சர்வதேச மனித உரிமை அமைப்புகள் இத்தகைய ஆய்வுக் குழுக்கள் - சுயேச்சையான நீதித்துறை சார்ந்தவர்களைக் கொண்ட அமைப்பாக இருக்க வேண்டும் (Judicial Body) என வலியுறுத்துகின்றன.

இத்தகைய கைதுகளின் அவசியம் மற்றும் அவை சட்டப்படி, செல்லுமா என்பது குறித்து ஆராய போதுமான ஏற்பாடுகள் புதிய தடாவில் இல்லை. அப்படி இல்லாத நிலையில் இதற்காக நியமிக்கப்படும் அதிகாரிகள், கண்ணை மூடிக்கொண்டு ஒப்புதல் அளித்துவிடுவதுதான் நடைமுறையாக இருக்கும். ஜம்மு காஷ்மீரில் தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் குறித்து வெளியான தகவல்கள் ('டைம்ஸ் ஆப் இந்தியா' - 22.2.2000) இதை உறுதி செய்கின்றன. நீதி மன்றத்தின் முன் வாக்குமூலம் அளித்த போலிஸ், டி.எஸ்.பி. மற்றும் எஸ்.பி.க்கள், போராளிகளைக் கைது செய்து பாதுகாப்புப் படையினர் நீட்டிய காகிதங்களில் எல்லாம் கையெழுத்துப் போடும்படி நிர்பந்திக்கப்பட்டதாகக் கூறியுள்ளார்.

புதிய தடாவின் பிரிவு 30 - ஆய்வுக் குழு அமைப்பது குறித்துப் பேசினாலும் அந்த ஆய்வுக் குழுவின் அதிகாரமென்ன, ஒரு கைது நியாயமானதா இல்லையா என்பதை அந்த ஆய்வுக் குழு தீர்மானிக்க முடியுமா, ஒரு கைதி ஆய்வுக் குழுவின் முன் நியாயம் கேட்க முடியுமா என்பவை குறித்து எதுவும் சொல்லப்படவில்லை. புதிய தடாவின் பிரிவுகள் 30(6) மற்றும் (7) பிணையில் வருவதை சிக்கலாக்குகிறது. ஒருவரை பிணையில் விடலாமா இல்லையா என்பதை அரசுத் தரப்பு வழக்கறிஞரின் விருப்பத்துக்கு அது விட்டுவிடுகிறது. அவர் எதிர்ப்புத் தெரிவித்தால், நீதிமன்றம் ஒருவரை பிணையில் விடமுடியாது. இது சர்வதேச நியதிக்கு நேர் எதிரானதாகும். இவ்வளவு மோசமானதொரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டிய தேவை என்ன?

கடந்த பத்து ஆண்டுகளாகவே இந்திய சமூக அரசியல் சூழல் என்பது மிக மோசமான முறையில் சீரழிக்கப்பட்டு வருகிறது. அவசரநிலைகாலத்து கெடுபிடிகள் வெவ்வேறு வடிவங்களில் திணிக்கப்பட்டு, சகஜமாக்கப்பட்டன. மதவெறி பரப்பப்பட்டு, பாகிஸ்தானுக்கு எதிரான யுத்தவெறி ஊட்டப்பட்டு வருகிறது. கார்கில் அதன் ஒரு வெளிப்பாடாகும். யுத்த அபாயம் எப்போதும் உள்ளது போன்றதொரு மனநிலைக்கு மக்கள் ஆளாக்கப்பட்டு போலியான தேசிய வெறிக்கு ஆட்படுத்தப்பட்டுள்ளனர்.

''சட்டமாவதற்கு முன் இந்த மசோதா குறித்து மாநில அரசுகளின் கருத்துகள் கேட்டறியப்படும்'' என அத்வானி கூறியுள்ளார். இந்த மசோதாவைக் கைவிடவேண்டும் என மாநில அரசினை நாம் நிர்பந்திக்க வேண்டும். அவகாசம் அதிகமில்லை. இப்போதே, இன்றே தொடங்கியாக வேண்டும். இன்று நாம் சும்மா இருந்து விட்டால், இந்த புதிய தடா சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டால், சாதிவெறி சக்திகளுக்கு கொண்டாட்டமாகிவிடும். தலித் மக்கள் வாய் திறக்கவே முடியாது என்றநிலை ஏற்பட்டுவிடும். எச்சரிக்கை.

பொருளாதார தளத்திலோ தாராளமயமாக்கலும் உலக மயமாக்கலும், இந்தியாவின் வளங்களை - பன்னாட்டு நிறுவனங்கள் கொள்ளையிட கதவுகளைத் திறந்து விட்டுள்ளன. நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. லட்சக்கணக்கான தொழிலாளர்கள் தெருவுக்கு விரட்டப்படுகின்றனர். இஸ்லாமியர்களுக்கு எதிரான வன்முறை என்பது, இப்போது கிறித்துவர்களுக்கு எதிராகவும் பரவியுள்ளது. சீக்கியர்களையும் இந்துத்துவா விட்டுவைக்கவில்லை. பஞ்சாபிலும் சீக்கிய மதத்துக்கு எதிரான தாக்குதல்கள் தொடங்கிவிட்டன. இப்படி சிறுபான்மை சமூகத்தினர் அனைவரும் பாதுகாப்பற்ற சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தலித் மக்களுக்கு அரசியலமைப்பு சட்டம் வழங்கியுள்ள பாதுகாப்பு படிப்படியாக பறிக்கப்படுகிறது. அவர்கள் மீதான தாக்குதல்கள் நாள்தோறும் அதிகரித்து வருகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக அரசியலமைப்புச்சட்டத்தையே திருத்தி இந்துத்துவக் கொள்கைக்கு ஏற்றபடி எழுதுகிற முயற்சி நடக்கிறது.

இந்த நடவடிக்கைகள் விளைவிக்கும் சமூகப் பதற்றத்தை ஒடுக்குவதற்காகத்தான், புதிய தடா சட்டம் தேவைப்படுகிறது. இன்றைய ஜனநாயக சக்திகளின் குரல் அமுங்கிக் கிடக்கிறது. அவசர நிலை அறிவிக்கப்பட்டபோது இருந்த எதிர்ப்புகூட இப்போது இல்லை. மாநில உரிமைகள் என சவடால் பேசிய சமூகநீதிக் கட்சிகளெல்லாம் இப்போது இந்துத்துவா கூட்டணியில் சேர்ந்து பணம் அடிப்பதிலேயே குறியாக உள்ளன. இந்நிலையில், இத்தகைய மக்கள் விரோத சட்டங்களை எதிர்த்து முறியடிக்கவேண்டிய பொறுப்பு வேறு எவரையும் விடவும் - தலித் மக்களுக்கே அதிகப் உள்ளது.

''சட்டமாவதற்கு முன் இந் மசோதா குறித்து மாநில அரசுகளில் கருத்துகள் கேட்டறியப்படும்'' என அத்வானி கூறியுள்ளார். இந்த மசோத வைக் கைவிடவேண்டும் என மாநி அரசினை நாம் நிர்பந்திக்க வேண் டும். அவகாசம் அதிகமில்லை. இ போதே, இன்றே தொடங்கியா வேண்டும். இன்று நாம் சும்மா இருந் விட்டால், இந்த புதிய தடா சட்ட நடைமுறைக்கு வந்துவிட்டால், சா வெறி சக்திகளுக்கு கொண்டாட்டம கிவிடும். தலித் மக்கள் வாய் திறக்கவே முடியாது என்ற நிலை ஏற்பட் விடும். எச்சரிக்கை.



படிப்பகம்

www.padippakam.com



# தலித் புகைப்படங்கள், ஓவியங்கள் தேவை

தலித் மக்களின் வாழ்வியல் முறையைப் பதிவு செய்யும் பணியில் 'தலித் முரசு' இறங்



கியுள்ளது. முழுமையாக இன வரைவியல் நோக்கத்தோடு இப்பணி துவங்க இருக்கிறது. முதற்கட்டமாக, தலித் மக்களின் வாழ்வியல் நிலை புகைப்படங்களைசேகரிக்கும் பணியில் நாங்கள் ஈடுபட இருக்கிறோம்.

குறிப்பாக, 100 ஆண்டுகளுக்கு முந்தைய புகைப்படங்கள், ஓவியங்கள், வாழ்நிலை முறைகள், சடங்குகள், அன்றாட வாழ்நிலை, வன்கொடுமைகள், சேரிகளின் அமைப்பு, வழிகாட்டு முறைகள், உடைகள், நீர்ப்பாசன முறைகள், பாடல்கள், நிகழ்த்துகலைகள், இவை அனைத்தும் புகைப்படங்களாகக் கிடைத்தால் - தலித் மக்களின் வரலாற்றினை மறுஉருவாக்கம் செய்ய முடியும். நீங்கள் சாதாரண குடும்பப் புகைப்படங்கள் என்று ஒதுக்குவதுகூட, எங்களுக்கு மிக முக்கியமான ஆவணமாகப் பயன்படலாம். தலித் மக்களின் வரலாற்றை காட்சிரூபமாகப் பதிவு செய்ய அனைத்துத் தரவுகளையும் அனுப்புங்கள். ●

- தலித் தகவல் ஒருங்கிணைப்பு

## முக்கிய அறிவிப்பு

மேற்கொண்டு என்ன படிக்கலாம், அதற்கென்ன செலவாகும், நீங்கள்விரும்பும்பட்டப்படிப்பு / டிப்ளமோ போன்றவை எந்தக் கல்வி நிலையங்களில் உள்ளன என்பது போன்ற தகவல்களைப் பெற எங்களுக்கு எழுதுங்கள். அதற்குரிய பதிலை இனி தலித் முரசில் தொடர்ந்து வெளியிட இருக்கிறோம். உடனடியாக பதில் தேவை எனில், அஞ்சல் தலையுடன் கூடிய உறையில் எழுதி அனுப்பவும். உடனே பதிலை அனுப்பி வைக்கிறோம்.

### பட்டதாரி இளைஞர்களுக்கு மட்டும்

வேலை தேடும் தலித் பட்டதாரி இளைஞர்களுக்கு எமது 'தலித் தகவல் ஒருங்கிணைப்பு' மய்யம் தன்னால் இயன்ற பணியினை செய்திட விரும்புகிறது. நீங்கள் செய்ய வேண்டியது இதுதான் : உங்களின் கல்வி, வயது, முன் அனுபவம், வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருந்தால் அதன் தேதி, எண் போன்றவற்றை – குறிப்பிட்டு எங்களுக்கு எழுதுங்கள். இது குறித்து அரசிடம் உங்கள் சார்பாக நாங்கள் முறையிடுகின்றோம். ●

**தலித் முரசு வாழ்நாள் கட்டணம் செலுத்திய சமூக நீதிப் போராளிகள்**

54. திரு. ஆ. துரைசாமி, ஆத்தூர்
55. திரு. எல். இளையபெருமாள், சென்னை
56. திரு. பி. அய்யாசாமி, ஈரோடு
57. திரு. ஏ. பால்ராஜ், சென்னை
58. திரு. ஆர். துரைராஜ், சென்னை
59. திரு. கண்ணன், தருமபுரி
60. செல்வி. காந்திமதி, விழுப்புரம்
61. செல்வி. எழிலரசி, விழுப்புரம்
62. திரு. எஸ். செபாஸ்டியன், திருச்சி
63. டாக்டர் எஸ். மகாலிங்கம், சென்னை
64. திரு. வி. தனபாலன், சென்னை
65. திரு. பி.ஆர். சக்திவேல், சென்னை

**தலித் முரசு வாழ்நாள் கட்டணம் ரூ. 1000/-**

கலகக்காரனின் திரைக்கதை
சூலை வெளியீடு (புதிய புத்தகம்)

## ஜான் ஆபிரகாம்



திருநெல்வேலி காஞ்சனை சினிமா இயக்கம் தொகுத்திருக்கும் இயக்குனர் ஜான் ஆபிரகாமின் கவிதைகள், கட்டுரைகள், நேர்முகங்கள், கதைகள், திரைக்கதைகள் மற்றும் ஜான் ஆபிரகாம் பற்றிய விமர்சனங்களும், நினைவுகளும்.

அடூர் கோபால கிருஷ்ணன், குமார் ஷகானி, பால் சக்கரியா, ஓ.வி. விஜயன், வெங்கட் சாமிநாதன், ந. முத்துச்சாமி, ஏ. அய்யப்பன், ஓ.கே. ஜானி, பாலச்சந்திரன் சுற்றிக்காடு, சச்சிதானந்தன் மற்றும் பலரின் படைப்புகள், மற்றும் அரிய புகைப்படங்களுடனும், ஓவியங்களுடனும் வெளிவரவிருக்கிறது.

தொகுப்பாசிரியர் :
ஆர்.ஆர். சீனிவாசன்

பக்கம் : 240 விலை : ரூ. 100

வெளியீடு : தாமரைச் செல்வி பதிப்பகம், 31/48, ராணி அண்ணா நகர் கே.கே. நகர், சென்னை

தொடர்புக்கு :
ப. திருநாவுக்கரசு - 472 8326

ஜான் ஆபிரகாம் - கலகக்காரனின் திரைக்கதை புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட கட்டுரை.



படிப்பகம்

www.padippakam.com

கற்பனை

# ஈழப்பிரச்சனைக்கு இதோ தீர்வு!

செக்கோஸ்லோவாகியா நாட்டைப் போல், இலங்கையையும் இரண்டு நாடாக பிரிக்கலாம் என்று முதல்வர் கருணாநிதி ஒருயோசனையை முன்வைக்க அதுபற்றிகடும் சர்ச்சைகள் எழுந்தன, நம் சிறப்புச் செய்தியாளர், இதுபற்றி கேட்க தலைவர்களை சந்திக்கப் புறப்பட்டார்; தலைவர்கள் என்ன சொல்லியிருப்பார்கள்? - ஒரு கற்பனை.

*மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் நுழைந்தபோது, அங்கே உமாநாத் இருந்தார்; தோழருக்கு வணக்கம் கூறி பேட்டி துவங்குகிறது...*

நம் செய்தியாளர் : **செக்கோஸ்லோவாகியா நாடு இரண்டாகப் பிரிந்தது போல், இலங்கையையும் இரண்டு நாடுகளாகப் பிரிக்கலாம் என்று முதலமைச்சர் கருணாநிதி கூறியிருக்கிறாரே?**

*உமாநாத்:* அவர் வரலாறு தெரியாமல் உளறுகிறார்.

ந.செ: **அப்படியானால், செக்கோஸ்லோவாகியா நாடு, சுலோக்கியா, செக் என்று இரண்டு நாடுகளாகப் பிரியவே இல்லை என்கிறீர்களா?**

*உமாநாத்:* அப்படிச் சொல்லவில்லை தோழர்; பிரிந்தது உண்மைதான். ஆனால், கருணாநிதி கூறுவதுபோல் கணவனைப் பிடிக்காததால் மனைவி பிரிந்து போகவில்லை; மனைவி பிடிக்காததால்தான் கணவர் பிரிந்து போனார். இது எவ்வளவு பெரிய உண்மை? இதைப் புரிந்து கொள்ளாமல் பிரிந்து விட்டார்கள் என்று வரலாற்றை புரட்டிவிடக்கூடாது!

ந.செ: **ஆழமான, நுட்பமான அறிவான விளக்கம் தோழர்; அது போகட்டும்; எந்த ஒரு இனமும், தனிநாடாக இருக்க விரும்பினால், தாராளமாகப் பிரிந்து போய் விடலாம் என்று லெனின் எழுதியிருக்கிறாரே; சோவியத் நாடு உருவானபோது, அந்நாட்டு சட்டத்திலும், இந்த உரிமை வழங்கப்பட்டிருந்ததே; போலந்து நாடு - அந்த அடிப்படையில் சோவியத் நாட்டோடு இணையாமல் தனிநாடாகப் போனதே; ஆனால், லெனின் கொள்கையை ஏற்கும் நீங்கள் இலங்கையில் மட்டும் தமிழர்கள் தனிநாடாவது கூடாது என்கிறீர்களே; என்ன காரணம்?**

*உமாநாத்:* காம்ரேட்; என்ன வரலாறு தெரியாமல் பேசுகிறீர்கள்? லெனின் பிரிந்து போகும் உரிமையைப் பற்றிப் பேசியது சோசலிச நாடுகளுக்கு; இலங்கை என்ன சோசலிச நாடா?

ந.செ: **ஓ... அப்படியா? காம்ரேட்; ஒரு சந்தேகம். இங்கிலாந்திலிருந்து அயர்லாந்து தனியாகப் பிரிந்து போய்விடலாம் என்று காரல் மார்க்ஸ் சொன்னாரே; இங்கிலாந்து என்ன சோசலிச நாடா?**

*உமாநாத்:* இப்படியெல்லாம் கேட்டால் எங்களால்பதில் சொல்லமுடியாது என்று நினைக்கிறீர்களா? மார்க்ஸ் இங்கிலாந்துக்குச் சொன்னாரே தவிர, இலங்கைக்கு அல்ல என்பது உங்களுக்குத் தெரியுமா? இங்கிலாந்து நாடுஎன்பது வேறு; இலங்கை நாடு என்பது வேறு அதே போல் இலங்கை என்பது வேறு; இங்கிலாந்து என்பது மற்றொரு வேறு; இந்த வரலாறுகூடத் தெரியாமல் பேசுகிறீர்களே?

*இடம்: த.மா.கா. அலுவலகம். தமிழ் நாட்டில் காமராசர் ஆட்சி அமைக்க, அ.தி.மு.க.வுடன் சேரலாமா? தி.மு.க.வுடன் கூட்டு சேரலாமா? ரஜினியை கட்சித்தலைவராக்கலாமா என்று தீவிர ஆலோசனை நடந்து கொண்டிருக்கிறது; நம் செய்தியாளர் உள்ளேநுழைந்து, மூப்பனாருக்கு வணக்கம் போடுகிறார். பேட்டி தொடங்குகிறது...*

ந.செ: **இலங்கையிலே தமிழர்களுக்கும் - சிங்களர்களுக்கும் யுத்தம் நடந்து கொண்டிருக்கிறதே...**

*மூப்பனார்:* ஆமாம்! அது என்ன இப்போதுதானா நடக்குது? நீண்ட காலமா நடந்துகிட்டுத்தானே இருக்கு..

ந.செ: **யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர தாங்கள் கூறும் தீர்வு என்ன என்று சொல்ல முடியுமா?**

*மூப்பனார்:* தமிழர் - சிங்களர், இரண்டு பேரும் யுத்தத்தை நிறுத்திட்டா, யுத்தம் நின்று விடும்! இதுதான் தீர்வு!

ந.செ: **இது ரொம்ப நல்லயோசனை சார்; உண்மையிலே, இதுவரைக்கும் யாருக்கும் தோணாமல் போயிடுச்சு பாருங்க; அப்ப, யுத்தத்தை நிறுத்துறதுக்கு ஏதாவது திட்டம் வச்சிருக்கீங்களா, சார்?**

*மூப்பனார்:* அதப்பத்தி இப்ப எதுவும் சொல்ல முடியாது; டெல்லிக்குப்போய் சோனியா அம்மாவ சந்திச்சப்பிறகுதான் சொல்ல முடியும்.

ந.செ: **செக்கோஸ்லோவாகியா நாட்டைப் போல, இரண்டு நாடுகளாகப் பிரித்து விடலாம் என்கிறார்களே... அதைப்பற்றி?**

*மூப்பனார்:* அதெல்லாம் சரிவராது; தமிழர்களும் சிங்களர்களும் ஒரே நாட்டில்தான் வாழ வேண்டும். விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்திப்போராடுவது தப்பு; கண்டிக்கத்தக்கது.

ந.செ: **கேக்கறேன்னு கோபப்படாதீங்க... இந்திராகாந்தி பிரதமராக இருந்த போதுதானே, இந்தியாவிலே போராளிகளுக்கு ராணுவப் பயிற்சி கொடுத்தாங்க! அப்ப காங்கிரசுலே நீங்க பெரிய புள்ளிதானே! இந்திரா விடம் ஆயுதப்பயிற்சி எல்லாம் தரக்கூடாதுன்னு எதிர்ப்பு தெரிவித்தி[ீர்]களா?**

*மூப்பனார்:* இதற்கெல்லாம், டெல்லியிலே அம்மாவை சந்திச்சுட்டுவந்தபிற[கு]தான் பதில் சொல்ல முடியும்!

ந.செ: **சரிங்க; இன்னொரு சந்தேகம் நீங்க சோனியாவைத் தலைவரா ஒத்து[க்]கிட்டிங்க; ஆனாலும்; உங்க கட்சியு[ம்] காங்கிரசும் ஒன்றாக சேர முடியலே ஆனா, யுத்தமே நடத்திக் கொண்டிருக்கு[ம்] தமிழர்களும் - சிங்களர்களும் ஒன்றா[க] சேர்ந்து வாழணும்னு சொல்றீங்களே இது எப்படி சாத்தியமாகும்?**

*மூப்பனார்:* நீங்க எதைக்கேட்டாலு[ம்] ஒரேபதில்தான்; டெல்லியில் அம்மாவ[ை] சந்திச்சுவிட்டு வந்தபிறகுதான்!

*இடம்: தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி அ[லு]வலகம். கட்சியின் புதிய தலைவர் இள[ங்]கோவனைக் காணவில்லை; "இதோ வந்[து] விடுவார்; போயஸ் கார்டன் வரை தலை[வர்] போயிருக்கிறார். உணர்வுபூர்வமான, உ[...] பூர்வமான கூட்டணி அமைப்பதுபற்றி அம்[மா]விடம் பேசப்போயிருக்கிறார்;" என்று இர[...]டாம் கட்டத்தலைவர் கூறினார்; சிற[ிது] நேரத்துக்கெல்லாம், புதிய தலைவர் வ[...]வீடவே பேட்டி துவங்குகிறது.*

ந.செ: **வணக்கம், வாழ்த்துக[ள்] கட்சிக்கு புத்துயிர் ஊட்டும் முயற்சிய[ில்] ஈடுபடப் போகிறீர்களா?**

*இளங்கோவன்:* அதெப்படி, அ[...] ளவு சரியாகச் சொல்கிறீர்கள்?

ந.செ: **ஒவ்வொரு முறையும் பு[...]**



படிப்பகம்

www.padippakam.com

கட்சித் தலைவர் வரும்போதெல்லாம் வழக்கமாக சொல்வதுதானே? இந்த ஈழத் தமிழர் பிரச்சனைபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

*இளங்கோவன்:* இலங்கையில் என்ன நடக்கிறது என்பது கூட எங்களுக்கு முக்கியமல்ல; விடுதலைப்புலிகளையும், ஈழ விடுதலையையும் ஆதரித்துப்பேசும் தமிழ் நாட்டுக்கட்சிகளை தடைசெய்ய வேண்டும். அதுதான் எங்களுக்கு முக்கியம்.

*ந.செ:* **அப்படி நீங்கள் ஆட்சியைப் பிடித்தால், அதை திண்டிவனம் ராமமூர்த்தி அங்கீகரிக்க மாட்டாரே! அவர் தமிழ் நாட்டையே பூட்டி, சாவியை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டால், அப்புறம் எப்படி ஆட்சி நடத்துவீர்களாம்?**

*இளங்கோவன்:* அப்படி ஒரு நிலை வந்தால் திண்டிவனத்தை, இலங்கைக்கு நாடு கடத்திவிடுவோம்.

*ந.செ:* **ஏன், திண்டிவனத்தை தனி நாடாகப் பிரித்து விடலாமே!**

*இளங்கோவன்:* அதுதான் நடக்காது; எந்த ஒரு நாட்டையும் நாங்கள் துண்டாட அனுமதிக்கவே மாட்டோம்!

*ந.செ:* **இந்திரா காந்தி, ராணுவத்தை அனுப்பி பாகிஸ்தானைத் துண்டாடி, பங்களாதேஷ் அமைத்தாரே!**

*இளங்கோவன்:* இதற்கெல்லாம் நான் ...பதில் சொல்லமுடியாது; எங்கள் மேலி...ம்தான் பதில்சொல்ல வேண்டும்! எங்...ள் தேசபக்தியை சோதிக்காதீர்கள்........

*இடம் : அ.இ.அ.தி.மு.க. அலுவலகம். நீதி...ன்றம் வரமுடியாததற்கு என்ன காரணம் ...சொல்லலாம் என்று வழக்கறிஞர்களுடன் ...ீவிரமாக ஜெயலலிதா ஆலோசித்துக் ...கொண்டிருக்கும்போது, நம் செய்தியாளர், ...ழப்பிரச்சனை பற்றி பேச்செடுக்க ஜெய...லிதா படபட வென பொரிந்து தள்ளினார்.*

*ஜெயலலிதா:* விடுதலைப்புலிகளுக் ...த் தமிழ் நாட்டில் தடைபோட்டது நான் ...ான்! அவர்களை ஒடுக்கியது நான்தான்! ...ருணாநிதி விடுதலைப்புலிகளை எதிர்ப் ...து போலியானது. எனது எதிர்ப்புதான் ...ண்மையானது. எனது உண்மையான ...லிகள் எதிர்ப்பை திசைதிருப்பத்தான், ...ன்மீது அடுக்கடுக்காக பொய்வழக்குக ...ளைப் போட்டு வருகிறார்! இந்த வழக்கு ...ளை நான் உடல் நலம் பெற்று நீதிமன் ...ம் செல்லும் வாய்ப்பு கிடைக்கும்போது ...றுதியாக சந்திப்பேன்....!

*இடம் : பாரதீய ஜனதா அலுவலகம், பார்ப்பன புரோகிதர்களின் வேத ஒலி கேட்கிறது. அலங்கரிக்கப்பட்ட சங்கராச்சாரி படத்துக்குக் கீழே - இல. கணேசன், அமர்ந்திருக்கிறார். 'நமஸ்தே' கூறி நுழைகிறார் நம் செய்தியாளர்.*

*ந.செ:* **கணேசன் 'ஜி' - இலங்கையில் தமிழர்களுக்கு தனி நாடு வேண்டும் என்பதை ஆதரிக்கிறீர்களா? எதிர்க்கிறீர்களா?**

*கணேசன்:* தமிழ் ஈழமா? அந்தப் பேச்சுக்கே இடமில்லை. அதை அனுமதிக்கவே முடியாது. தமிழ் ஈழம் என்று பேசுகிறவர்கள் தேசத்துரோகிகள். அப்படிப் பேசுகிறவர்களை சிறையில் தள்ள வேண்டும்.

*ந.செ:* **அப்படி எல்லாம் சொல்லாதீர்கள் கணேசன்ஜி; பால்தாக்கரே கூட தமிழ் ஈழத்தை ஆதரித்துள்ளார்; புலிகள் மீது தடையை நீக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்; வாஜ்பாய்கூட எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது மதுரையில் 'டெசோ' மாநாட்டில் கலந்து கொண்டு தமிழ் ஈழத்தை ஆதரித்துப் பேசி இருக்கிறார்; இவர்களை எல்லாம் சிறையில் போட வேண்டும் என்கிறீர்களா?**

*கணேசன்:* ஹி... ஹி... நான் என்ன சொல்லவருகிறேன் என்றால்.. அதாவது.. வாஜ்பாய்ஜி... தாக்கரேஜி போன்ற தேசபக்தர்கள் என்ன பேசினார்கள்; எப்படிப் பேசினார்கள் என்பது பற்றி விவாதிக்கவோ பரிசீலிக்கவோ நான் தயாராக இல்லை, என்றாலும்கூட ஹி... ஹி...

*ந.செ:* **சரி அது போகட்டும், செக்கோஸ்லோவாகியாவைப்போல், தமிழர்களுக்கு, சிங்களர்களுக்கு தனித்தனி நாடுகளைத் தரலாமா?**

*கணேசன்:* செக்கோஸ்லோவாகியா பற்றி எல்லாம் பேசக்கூடாது. அது கிறிஸ்தவர்கள் நாடு; அதை எப்படி நாம் பின்பற்ற முடியும்?

*ந.செ:* **சரி; இலங்கைத் தமிழர்கள் - உங்கள் கருத்துப்படி இந்துக்கள்தானே! அவர்களுக்கு ஏன் தனிநாடு கூடாது என்கிறீர்கள்?**

*கணேசன்:* 'அவாள்' எல்லாம் பேருக்குத்தான் இந்துக்கள்; அங்கே 'பிராமணோத்தமர்கள்' தலைமை தாங்கலியே; சங்கராச்சாரிகளோ, சங்கர மடங்களோ இல்லையே! தமிழ் இனம் என்றெல்லாம், தேசவிரோதக் கொள்கைகளைப் பேசிக்கிட்டு இருக்கான்களே? புலிகள் இயக்கத்தில் சேர்ந்து சண்டைபோடுகிறவன் எல்லாம் கீழ்சாதிக்காரன்களாயிற்றே? இவர்களிடம் ஒரு நாட்டைக் கொடுத்தால் என்ன ஆகும்? வேணும்னா, தமிழர்களுக்கு தனி மாநிலம் எற்படுத்திக் கூடுதல் அதிகாரம் தரலாம்!

*ந.செ:* **அப்படியா, காஷ்மீர் மாநிலத்துக்கு முழு சுயாட்சி தரவேண்டும் என்று அம்மாநில அரசு சட்டசபையிலே இப்போது விவாதம் நடத்தி வருகிறதே; அதையும் ஏற்றுக்கொள்கிறீர்களா?**

*கணேசன்:* முடியாது; முடியவே முடியாது; இந்தியாவில் எந்த மாநிலத்துக்கும் சுயாட்சி தரவே முடியாது.

*ந.செ:* **சொந்த நாட்டு மக்களுக்கு சுயாட்சி தரமுடியாது என்று சொல்லிக் கொண்டு, இலங்கையில் தமிழர்களுக்கு சுயாட்சி தரலாம் என்று கூறினால்; உலகம் சிரிக்காதா?**

*கணேசன்:* அதுபற்றி எங்களுக்கு என்ன கவலை? நாங்கள் உண்மையான இந்துக்கள்; எதற்குமே வெட்கப்படமாட்டோம்!

*(வேகமாகப் பேசிவிட்டு - அடுத்தத் தொலைக்காட்சிக்குப் பேட்டியளிக்க அவசரமாகப் பறந்தார் கணேசன்ஜி)*

*இடம் : தி.மு.க. அலுவலகம். ஏற்கனவே அளித்த பேட்டிக்கு, விளக்கவுரை தயாரிக்கும் பணியில் மும்முரமாக முதலமைச்சர் கருணாநிதி ஈடுபட்டிருந்தபோது, நம் செய்தியாளர் வணக்கம் தெரிவித்து நுழைந்தார்.*

*ந.செ:* **'செக்கோஸ்லோவாகியா' நாட்டைப் போல், தமிழர்களும், சிங்களர்களும் அமைதியாகத்தனித்தனி நாடுகளாகப் பிரியலாம் என்று நல்ல யோசனை சொல்லியிருந்தீர்கள் அல்லவா? அதுபற்றி எல்லோரிடமும் கருத்துக்கேட்டுவிட்டு வந்திருக்கிறேன்...**

*முதல்வர்:* என்ன சொன்னீங்க.. செக்கோஸ்லோவாகியா பற்றியா? நானா? என்ன சொன்னேன்? அதுதான் தீர்வு என்று நான் சொல்லவே இல்லையே; எப்போதுமே நான் சொல்லாத கருத்துக்களை எழுதிக்கொண்டே இருக்கிறார்கள். அதுகூட இந்திய அரசுக்கு நான் யோசனை கூறவில்லையே! அவர்களுக்கு யோசனை கூற எனக்கு ஏது உரிமை? எனக்கு ஏது தகுதி? நான் கூறியது இலங்கை அரசுக்குத்தானே! இந்திய அரசு தேச நலன் கருதி எந்த முடிவை எடுத்தாலும் நாங்கள் ஆதரிக்கத் தயார், தயார். இதுதான் எங்கள் நிலை! 'மாநில சுயாட்சியின்' மீது சத்தியமாக!

(வியந்துபோன நம் செய்தியாளர் விழி பிதுங்க ஓட்ட மெடுத்தார்) ●

-ரா-



படிப்பகம்

www.padippakam.com



# கடலூர் : இன்னொரு பீகார்?

**புளியங்குடி படுகொலையைக் கண்டித்து விடுதலைச் சிறுத்தைகளின் மாபெரும் அணிவகுப்பு**




பேரணியில் காணப்பட்ட சுவரொட்டி

**ஜெயராணி**

காற்றும் ஒளியும் போல் சாதி வன்முறை நாடெங்கும் பரவிக் கிடக்கிறது. சாதி, மத, பொருளாதார ஏற்றத்தாழ்வு உள்ளிட்ட பல்வேறு வேறுபாடுகள், மனிதனை மதிப்பிட விளைவதால் ஏற்படும் சிக்கலில்தான் வன்முறை தோன்றுகிறது. இத்தகைய வேறுபாடுகளால் ஒடுக்கப்பட்டு, மறுதலிக்கப்படும் மக்களே பெரும்பாலும் இந்த வன்முறைகளுக்குப் பலியாகின்றனர். வறுமை, வன்முறைக்கு 'பக்கபலமாக நிற்க, அதைத் தடுக்கும் வழிதெரியாமல் ஏற்படும் தடுமாற்றத்தில் உண்மை ஆட்டங்கண்டு, பின் அழிந்து போனது. எஞ்சியிருப்பது வெறும் பொய்.

வறுமையால், ஊழலில், அரசியலில், வன்முறையில் தோய்த்தெடுக்கப்பட்டது பொய். இன்றைய 'வாழ் நிலையை இந்தப் பொய்தான் தீர்மானிக்கிறது. இந்தப் பொய் - தனது அத்துமீறலால் மனித உரிமையையும், தனி மனித சுதந்திரத்தையும், கருத்துரிமையையும் கேள்விக்குள்ளாக்குகிறது. சாதி சந்தையில் விற்பனைக்கு வரும் மனித உயிர்களுக்கான விலையை இந்தப் பொய்தான் நிர்ணயம் செய்கிறது. அதன் விளைவேஇன்று மிகச் சாதாரணமாக நிகழும் - நிகழ்த்தப்படும் மனிதப் படுகொலைகள்!

பெரும்பாலும் இந்த வன்முறைக்கு தாழ்த்தப்பட்ட மக்களே பலியாகின்றனர். குறைந்தபட்ச எதிர்ப்போ, கண்டனமோ தெரிவிக்கப்படாமலேயே காதுகளையும் கண்களையும் மூடிக் கொண்டு - எல்லோரும் ஒதுங்கிக் கொள்வதால்தானோ என்னவோ - பத்திரிகைகளுக்கும், தொலைக்காட்சிகளுக்கும் தீனிபோடும் அன்றாட சம்பவங்களாக இந்தப் படுகொலைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

வன்முறையின் இன்னொரு பெயர் பீகாராகி வர, பீகாரின் இன்னொரு பெயர் கடலூராகி விடுமோ என்று அச்சப்படும் அளவிற்கு - கடலூர் மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த 19 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதில் 7பேர் பெண்கள். கடந்த மே 27 அன்று, கடலூர் மாவட்டம் புளியங்குடியைச் சேர்ந்த காந்தி, வெள்ளையன், மதியமுகன் ஆகிய மூன்று இளைஞர்கள் தூங்கும்போது கழுத்தை யறுத்து கொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

**அரசியல் ஆதாயம் கருதியோ, தேர்தல் உள் நோக்கம் கொண்டோ - ஆளுங்கட்சியும், எதிர்க் கட்சியும், 'நடுநிலைமை'க் கட்சிகளும் வாயைத் திறக்க வில்லை என்றாலும் கூட, தாழ்த்தப்பட்டோருக்கென இருக்கும் இருபதுக்கும் மேற்பட்ட கட்சிகள் ஒன்றி ணைந்து கண்டனம் தெரி விக்காமல் இருப்பதே - இத்தகைய படுகொலைகள் தொடர்வதற்குக் காரணமாக இருக்கிறது.**

எங்கோ மூலையிலிருந்து எழும்பும் பலவீனமான ஒரு சில எதிர்ப்புக் குரல்களைத் தவிர, இந்தப் படுகொலைகளுக்கு அழுத்தமான எதிர்ப்பு என்பது வரவில்லை. அரசியல் ஆதா
யம் கருதியோ, தேர்தல் உள்நோக்கம் கொண்டோ - ஆளுங்கட்சியும், எதிர்க் கட்சியும், நடுநிலைமைக் கட்சிகளும் வாயைத் திறக்கவில்லை என்றாலும் கூட, தாழ்த்தப்பட்டோருக்கென இருக்கும் இருபதுக்கும் மேற்பட்ட கட்சிகள் ஒன்றிணைந்து கண்டனம் தெரிவிக்காமல் இருப்பதே - இத்தகைய படுகொலைகள் தொடர்வதற்கான காரணமாக இருக்கிறது. பத்து ஆண்டுகளுக்கு முன் இதுபோன்ற படு கொலைகள் நடந்து அதற்கு எதிர்ப்ப தெரிவிக்கப்படாமல் இருந்திருந்தா அது வேறு நிலை.

தங்களின் உரிமைகளை, சுதந்திர
தைப் பற்றி எந்தவித அக்கறையு
அறிவும் இல்லாத காலகட்டத்தை
கடந்துவிட்ட இன்றைய நிலையிலு
தொடரும் வன்முறைகளைக் கண்
வாயை மூடிக்கொ
டிருப்பது, ஜனநாயகத்
கேலிக்குள்ளாக்குவ
கவே பொருள்படு
தங்களின் உயிரையு
உரிமையையு
உடைமைகளையு
பாதுகாத்துக் கொள்
- தலித் மக்கள் தா
களே ஒன்று கூ
போராடத் துணி
வில்லை என்றா
யாரும் துணியம
டார்கள். பிறருக்
அது தேவையுமில்ல

இந்நிலையி
தான், புளியங்குடி
கொலையைக் க
டித்து சூன் 23 அன்று 'விடுதல
சிறுத்தைகள்' **“வாள் கை மாறின
வாழ்க்கை மாறும்”** என்ற முழக்கத்து
சென்னை தீவுத்திடலிலிருந்து மெ
கடற்கரை - சீரணி அரங்கம் நே
சுமார் ஒரு லட்சம் பேர் பங்கேற்ற க
ணப் பேரணியை நடத்தினர்.



படிப்பகம்

www.padippakam.com

புளியங்குடி படுகொலைகளை சேர்த்து கடலூர் மாவட்டம் முழுவதும் தொடரும் அனைத்திற்கும் தமிழக அரசு சி.பி.சி.அய்.டி. விசாரணைக்கு ஆணையிட வேண்டுமென்றும், அதை வலியுறுத்தி முதலமைச்சர் கருணாநிதி மத்திய அரசுக்கு கடிதம் எழுத வேண்டுமென்றும் பேரணியின் முதன்மை கோரிக்கைகளாக வைக்கப்பட்டன. கடலூர் மாவட்டத்தில் பேரணிக்குப் புறப்பட்டு வந்த மக்களை, பா.ம.க.வினர் பல்வேறு இடங்களில் வழிமறித்துப் பேரணியில் கலந்து கொள்ள விடாமல் தடுத்ததாகவும், இத்தகைய வன்முறை கும்பலான பா.ம.க.வை தேர்தலில் நிற்கத்தடைவிதிக்க வேண்டும் என்றும் பேரணியின் முக்கிய கோரிக்கையாக வைக்கப்பட்டது.

இந்தப் பேரணி நடப்பதற்கு முன்னும் நடந்து முடிந்த விட்ட பின்னும் கடலூரில் பேரணியை காரணமாக்கி சாலை மறியல்கள், வாகனங்களைத் தாக்கிப் போக்குவரத்தை தடைசெய்வது, கடைகள், பேருந்துகள் முதலியவை தீ வைத்து எரிக்கப்படுவது போன்ற வன்முறைகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன.

படுகொலைகளும், சாலை மறியல்களும், பேருந்து எரிப்புகளும், விடியலும், அஸ்தமனமும் போல் அன்றாட செயல்களாகிவிட்டது மாதிரி ஒரு சின்ன பாதிப்பையோ பரபரப்பையோ - அரசின் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் ஏற்படுத்த முடியாமல் இயல்பாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பிரச்சனையை யாரும் தொலைநோக்குப் பார்வையுடன் அணுக மறுக்கிறார்கள்.

இக்கண்டனப் பேரணியில் உரை நிகழ்த்திய விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பாளர் திருமாவளவன், "புளியங்குடியில் 3 தலித்துகள் தூங்கும்போது கழுத்தையறுத்துக் கொலை செய்யப்பட்டுள்ளனர். தலித்துகள் விழித்திருக்கும்போது எதிர்க்கத் துணிவில்லாமல்தான் - தூங்கும்போது இந்தக் கொலையை செய்துள்ளனர். எங்கள் மீது திணிக்கப்படுகின்ற இது போன்ற வன்முறைகளை இனியும் தாங்கிக் கொள்ளவோ, பொறுத்துக் கொள்ளவோ முடியாது. மேலவளவில் லீலாவதி படுகொலை செய்யப்பட்ட போது நேரில் சென்று பார்த்து நிதி வழங்கிய கருணாநிதியால், அதே ஊரில் முருகேசன் படுகொலை செய்யப்பட்டபோதும் நேரில் செல்ல முடியவில்லை, திருநெல்வேலி தாமிரபரணி ஆற்றில் 17 தலித் மக்கள் போலிசாரின் வன்முறையால் உயிரிழந்தபோதும் நேரில் செல்லவில்லை.

ஆக, மனித நேயம் என்பது சாதிப் பாரபட்சத்தின் அடிப்படையிலேயே இங்கு நிர்ணயம் செய்யப்படுகிறது. இதே வன்முறை தொடர்வதை இனி மேலும் பொறுத்துக்கொண்டு 'விடுதலைச் சிறுத்தைகள்' சும்மா இருக்க மாட்டார்கள்" என எச்சரித்தார். "கடலூர் மாவட்டத்தில் பேரணிக்குப் புறப்படும் மக்களை பல்வேறு இடங்களில் பா.ம.க.வினர் பேரணிக்குச் செல்லக் கூடாது என்று தடை விதித்து வாகனங்களைத் தாக்கி வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், சேத்தியா தோப்பு அருகே வட்டத்தூர், அறந்தாங்கி ஆகிய கிராமங்களிலிருந்து புறப்பட்ட இரண்டு வேன்களை மடக்கி முந்திரிக் காடுகளுக்கு கடத்திச் சென்று உயிரோடு கொளுத்தி விடுவதாக மிரட்டி வருகின்றனர். இத்தகைய சனநாயக விரோத வன்முறைக் கும்பலான பா.ம.க.வை தேர்தலில் நிற்கத் தடை செய்ய வேண்டுமென இப்பேரணியின் கோரிக்கையாக தமிழக அரசையும் தேர்தல் ஆணையத்தையும் கேட்டுக்கொள்கிறோம்" என்றார்.



கண்டன அணிவகுப்பில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதி

பேரணியின் இறுதியில் புளியங்குடியில் படுகொலை செய்யப்பட்ட மூவரின் குடும்பத்தினருக்கும் தலா ரூ. பத்தாயிரத்தை திருமாவளவன் வழங்கினார்.

எதில் எங்கு சிக்கல் இருக்கிறது என்று தேடி அதைக் களைந்துவிட யாருக்கும் துணிவில்லை. இன்றைய சூழலில் அரசியலுக்கு சாதி துணை போவதும், சாதிக்கு அரசியல் துணை நிற்பதும் - வன்முறைகளை ஒரு போதும் அழிக்காது. ஒவ்வொரு தனி மனிதரின் உரிமையையும் ஒவ்வொருவரும் உணர்தல் நாளுக்கு நாள் அவசியமாகி வருகிற சூழலில், இதே நிலை நீடிக்குமானால் - மனித உரிமைகள் அழிந்து போய், மனிதமும் அழிந்துபோக - தமிழகத்தின் எதிர்காலம் வன்முறையின் வரலாறாகி விடும் என்பதில் சந்தேகமில்லை. ●

புகைப்படம் : ஜெயராணி



படிப்பகம்

www.padippakam.com


நல்வாழ்த்துகள்



# விஜயா பப்ளிசிடிஸ்

பாரிவள்ளல்

விஜயா பப்ளிசிடிஸ்

13/1, சாரி தெரு, தி.நகர்

சென்னை - 600 017


படிப்பகம்

www.padippakam.com



■ வே. மதிமாறன்

# 'பாரதி'ய ஜனதா பார்ட்டி! 4

> நன்றாக செய்யப்பட்டதாகத் தன் பெயரிலேயே சொல்லிக்கொள்கிற ('ஸம்' என்றால் நன்றாக, 'கிருதம்' என்றால் செய்யப்பட்டது) ஸம்ஸ்கிருதத்திலிருந்தே, தமிழ் தயாரிக்கப்பட்டதாக, ஒட்டு மொத்தமாக சேர்த்து வைத்து ஆணியடிக்கிறார்.
>
> 'கல்தோன்றா, மண்தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி தமிழ் மொழி'
>
> என்று மாறுவேடப் போட்டியில் அரிதாரம் பூசி வசனம் பேசியவர்கள் முகத்தில் கரியைக் குழைத்துப் பூசி விட்டார்.

"நமது முன்னோர்களும் அவர்களைப் பின்பற்றி நாமுங்கூடப் புண்ணிய பாஷையாகக் கொண்டாடி வரும் ஸம்ஸ்கிருத பாஷை மிகவும் அற்புதமானது. அதைத் தெய்வ பாஷை என்று சொல்வது விளையாட்டன்று. மற்ற ஸாதாரண பாஷைகளையெல்லாம் மனித பாஷையென்று சொல்லுவோமானால், இவை அனைத்திலும் சிறப்புடைய பாஷைக்குத் தனிப்பெயர் ஒன்று வேண்டுமல்லவா? அதன்பொருட்டே அதைத் தெய்வ பாஷை யென்கிறோம்.

அந்தப் பாஷையில் தைரியம் என்பதோர் சொல்லுண்டு. தீரனுடைய இயற்கை, தைரியம். தீரன் என்ற வார்த்தையின் தாதுப் பொருளைக்கவனிப்போமானால் அறிவுடையவன் என்ற அர்த்தமாகும். துணிவுடையவனுக்கும் அந்தப் பாஷையிலே அதுவே பெயராக வழங்கப்படுகிறது. எனவே, 'தைரியம்' என்ற சொல் அறிவுடைமையென்றும், துணிவுடைமையென்றும் இருவித அர்த்தங்கள் உடையது. இங்ஙனம் இவ்விரண்டு கருத்துக்களுக்கும் ஒரே சொல்லை வழங்குவது, அந்த பாஷையின் பெருமைக்குள்ள சின்னங்களிலே ஒன்றாகும்.

உலகத்தில் வேறு எந்தப் பாஷையிலும் மேற்கூறிய இரண்டு கருத்துக்களையும் சேர்த்துக் குறிப்பிடக்கூடிய ஒரே பதம் கிடையாது. எந்த நாட்டினரைக் காட்டிலும் அதிகமாக யதார்த்தங்களைப் பரிசோதனை செய்து பார்த்த மஹான்கள் வழங்கிய பாஷையாதலால், அந்தப் பாஷையிலே இவ்விரண்டு பொருள்களுக்கும் ஒரே பதம் அமைக்கப்பட்டிருக்கிறது........

..............................................................

இந்தியாவில் பெரும்பான்மையான பாஷைகள் ஸமஸ்க்ருதத்தின் திரிபுகளேயன்றி வேறல்ல: அங்ஙனம் திரிபுகளல்லாததுவும் ஸம்ஸ்கிருதக் கலப்புக்குப் பிந்தியே மேன்மை பெற்றனவாம்."

'நடுவுல இருக்கிறவன் மாதிரியில்ல; பெரியவர் கொஞ்சம் நல்லவர்' என்று நமது அசடுகளில் பலர் விமர்சனங்களோடு ஆதரிக்கிற செத்துப்போன காஞ்சி சங்கராச்சாரி சந்திரசேகரன், சமஸ்கிருதம் பற்றி மேலே சொன்னது போல் சொல்லியிருக்கிறார். ஆனால், இதைச்சொன்னது,

*"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்"*

என்று பாட்டெழுதிய பாரதி.

● ●

*"அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி*
*பகவன் முதற்றே உலகு"*

என்று தொடங்கிய திருவள்ளுவர், தன்னுடைய 1330 குறள்களிலும் கடைசி வரை ஆதிபகவன் யார் என்று சொல்லாமலேயே விட்டுவிட்டார். இது, சுப்பிரமணிய பாரதிக்கு பெரியதொந்தரவாகவே இருந்திருக்கிறது.

அந்தக் கடுப்பு தாங்காமல், எடுத்திருக்கிறார் எழுதுகோலை - வடித்திருக்கிறார் பாடலை. ஆதிபகவன் யாரென்றும், தன்னுடைய சிறப்புகள் எதனால் என்றும் தமிழ்த்தாயே ஒப்புதல் வாக்குமூலம் தருவதுபோல் எழுதி அடைத்தார் தமிழர்களின் வாயை.

*"ஆதிசிவன் பெற்று விட்டான் - என்னை*
*ஆரிய மைந்தன் அகத்தியனென்றோர்*

*வேதியன் கண்டு மகிழ்ந்தே - நிறை*
*மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான்.*

*மூன்று குலத்தமிழ் மன்னர் - என்னை*
*மூண்ட நல்லன்பொடு நித்தம் வளர்த்தார்.*

*ஆன்ற மொழிகளினுள்ளே - உயர்*
*ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன்"*

இதில் மொத்தம் மூன்று ஆப்புகளை தமிழர்களுக்கு அடித்திருக்கிறார் சுப்பிரமணியார்.

1. வள்ளுவர் சொன்ன ஆதிபகவன் சிவன் என்று அறிவிக்கிறார். (பார்ப்பனரில் பாரதி அய்யர் பிரிவைச் சேர்ந்தவர். அய்யருக்கு சிவனே எல்லாம்)

2. தமிழுக்கு இலக்கணம் செய்தவர் அகத்தியர் என்று சொல்லப்படுவதைப் பயன்படுத்தி, அகத்தியர் ஒரு பார்ப்பனர் என்று அவருக்குப் பூணூல் அணிவிக்கிறார்.

3. நன்றாக செய்யப்பட்டதாகத் தன் பெயரிலேயே சொல்லிக்கொள்கிற (ஸம் என்றால் நன்றாக, 'கிருதம்' என்றால் செய்யப்பட்டது) ஸம்ஸ்கிருதத்திலிருந்தே, தமிழ் தயாரிக்கப்பட்டதாக, ஒட்டு மொத்தமாக சேர்த்து வைத்து ஆணியடிக்கிறார்.

*'கல்தோன்றா, மண்தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி தமிழ் மொழி'*

என்று மாறுவேடப் போட்டியில் அரிதாரம் பூசி வசனம் பேசியவர்கள் முகத்தில் கரியைக் குழைத்துப் பூசி விட்டாலும், அவரும் ஒரு மாறுவேடம் போடுகிறார்.

"தமிழ் நாட்டில் தேசீயக் கல்வி யென்பதாக ஒன்று தொடங்கி, அதில் தமிழ் பாஷையை ப்ரதானமாக நாட்டாமல் பெரும்பான்மைக் கல்வி இங்கிலீஷ் மூலமாகவும் தமிழ் ஒருவித உப பாஷையாகவும் ஏற்படுத்தினால், அது 'தேசீயம்' என்ற பதத்தின் பொருளுக்கு முழுவதும் விரோதமாக முடியுமென்பதில் அய்யமில்லை. தேசபாஷையே ப்ரதானம் என்பது தேசீயக் கல்வியின் ஆதாரக் கொள்கை; இதை மறந்துவிடக்கூடாது. தேச பாஷையை விருத்தி செய்யும் நோக்கத்துடன் தொடங்கப்படுகிற இந்த முயற்சிக்கு நாம் தமிழ் நாட்டிலிருந்து பரிபூர்ண ஸஹாயத்தை எதிர்பார்க்க வேண்டுமானால், இந்த முயற்சிக்குத் தமிழ் பாஷையே முதற் கருவியாக ஏற்படுத்தப்படும் என்பதைத் தம்பட்டம் அறைவிக்க வேண்டும்."

டாக்டர். நாயரின் ஞாபகம் வந்தவுடன் தான் போட்டிருப்பது மாறுவேடம் என்பதையும் மறந்து கோபத்தில் மேக்கப்பை கலைத்து விட்டு,

"இங்ஙனம் தமிழ் ப்ரதானம் என்று நான் சொல்லுவதால், டாக்டர். நாயரைத் தலைமையாகக் கொண்ட திராவிடம் கக்ஷியார் என்ற போலிப் பெயர் புனைந்த தேச விரோதிகளுக்கு நான் சார்பாகி அரியபாஷை விரோதம் பூண்டு பேசுகிறேன் என்று நினைத்து விடலாகாது. தமிழ் நாட்டிலே தமிழ் சிறந்திடுக. பாரத தேச முழுதிலும் எப்போதும் போலவே வடமொழி வாழ்க. இன்னும் நாம் பாரத தேசத்தின் அய்க்கியத்தைப் பரிபூர்ணமாகச் செய்யுமாறு நாடு முழுவதிலும் வடமொழிப் பயிற்சி மேன்மேலும் ஓங்குக. எனினும், தமிழ் நாட்டில் தமிழ் மொழி தலைமை பெற்றுத் தழைத்திடுக."

பாரதியின் இந்த வார்த்தைகள் மொழி



படிப்பகம்

www.padippakam.com

குறித்து தமிழக பாரதிய ஜனதா தலைவர்களின் இப்போதைய கருத்தை பிரதிபலிப்பதாக இருக்கிறது அல்லவா?

ஆம், தமிழ் மொழிகுறித்த இந்த திரைக்கதை வசனம், 'பார்ப்பனீய ஜனதாவின்' பரம்பரை தொடர்ச்சி.

● ●

இன்று பாரதிய ஜனதா கட்சியின் எதிர்க்கட்சியாக இருக்கிற, அதனாலேயே மதப் பேரினவாத சக்தியின் எதிரியாகக் காட்சி தருகிற, ஜெயலலிதாவின் தயவில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சி நடத்தியபோது - புதுமையான கல்வித் திட்டத்தைக் கொண்டு வரும் முயற்சியில் அனைத்து மாநிலக் கல்வி அமைச்சர்கள் கூட்டத்தைக் கூட்டியது.

அந்தக் கூட்டம் 'சரஸ்வதி வந்தன'த்துடன் துவங்கியபோது, அன்றைய பாரதிய ஜனதாவின் எதிர்க்கட்சிகளின் வரிசையில் இருந்ததால், மதப்பேரினவாதத்தின் எதிரியாகக் காட்சி தந்தது திராவிட முன்னேற்றக் கழகம். அந்த முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அப்போதைய, இப்போதைய கல்வி அமைச்சர் அன்பழகன் சரஸ்வதி வந்தனைத்தைக் கண்டித்து அந்தக் கூட்டத்தில் அலறியதாக சொல்லப் பட்டது அறிந்ததே.

சரி, அந்த தேசியக் கல்வித் திட்டத்தில் எல்லா மதத்தினரையும் அரவணைத்துக் கொண்டு வாழைப்பழத்தில் விஷ ஊசியை சொருகுவதுபோல் பல திட்டங்கள் சொல்லப்பட்டனவாம். என்ன திட்டங்கள் முன்வைக்கப்பட்டன? இதோ பாரதி சொல்கிறார் அதைப் பற்றி:

"நான்கு வேதங்கள், ஆறு தர்சனங்கள், உபநிஷத்துக்கள், புராணங்கள், இதிஹாஸங்கள், பகவத்கீதை, பக்தர் பாடல்கள், சித்தர் நூல்கள் - இவற்றை ஆதாரமாகக் கொண்டது ஹிந்து மதம். ஹிந்து மதத்தில் கிளைகள் இருந்த போதிலும், அக்கிளைகள் சில சமயங்களில் அறியாமையால் ஒன்றையொன்று தூஷணை செய்து கொண்ட போதிலும், இந்து மதம் ஒன்றுதான் பிரிக்க முடியாதது. வெவ்வேறு வ்யாக்யானங்கள் வெவ்வேறு அதிகாரிகளைக் கருதிச் செய்யப்பட்டன. தற்காலத்தில் சில குப்பைகள் நம்முடைய ஞான ஊற்றாகிய புராணங்கள் முதலிய வற்றிலே கலந்துவிட்டன. மத த்வேஷங்கள், அனாவசிய மூட பக்திகள் முதலியனவே அந்தக் குப்பைகளாம். ஆதலால் தேசீயப் பள்ளிக்கூடத்து மாணாக்கர்களுக்கு உபாத்தியார் தத்தம் இஷ்ட தெய்வங்களினிடம் பரமபக்தி செலுத்தி வழிபாடு செய்து வர வேண்டும் என்று கற்பிப்பதுடன், இதர தெய்வங்களைப் பழித்தல், பகைத்தல் என்ற மூடச்செயல்களை கட்டோடு விட்டு விடும்படி போதிக்க வேண்டும்.

'ஏகம் ஸத்விப்ரா: பஹுதா வதந்தி' (கடவுள் ஒருவரே, அவரை ரிஷிகள் பல பெயர்களால் அழைக்கின்றனர்) என்ற ரிக் வேத உண்மையை மாணாக்கரின் உள்ளத்தில் ஆழப்பதியுமாறு' செய்ய வேண்டும். மேலும், கண்ணபிரான் 'எல்லா உடம்புகளிலும் நானே உயிராக நிற்கிறேன்' என்று கீதையில் கூறியபடி, ஈ, எறும்பு, புழு, பூச்சி, யானை, புலி, கரடி, தேள், பாம்பு, மனிதர் எல்லா உயிர்களும் பரமாத்மாவின் அம்சங்களே என்பதை நன்கறிந்து, அவற்றை மன மொழி மெய்களால் எவ்வகையிலும் துன்புறுத்தாமல், இயன்ற வழிகளிலெல்லாம் அவற்றிற்கு நன்மையே செய்து வரவேண்டும்' என்பது இந்து மதத்தின் மூல தர்மம் என்பதை மாணாக்கர்கள் நன்றாக உணர்ந்து கொள்ளும்படி செய்ய வேண்டும்.



மாம்ஸ போஜனம் மனிதன் உடல் இறைச்சியைத் தின்பது போலாகும் என்றும், மற்றவர்களைப் பகைத்தலும் அவர்களைக் கொல்வது போலேயாகும் என்றும் இந்து மதம் கற்பிக்கிறது. 'எல்லாம் பிரம்மமயம்,' 'ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்' என்ற வசனங்களால் உலக முழுதும் கடவுளின் வடிவமே என்று இந்து மதம் போதிக்கிறது. 'இங்ஙனம் எல்லாம் கடவுள் மயம் என்றுணர்ந்தவன் உலகத்தில் எதற்கும் பயப்பட மாட்டான். எங்கும் பயப்பட மாட்டான்; எக்காலத்திலும் மாறாத ஆனந்தத்துடன் தேவர்களைப் போல் இவ்வுலகில் நீடூழி வாழ்வான்' என்பது இந்து மதத்தின் கொள்கை. இந்த விஷயங்களெல்லாம் மாணாக்கருக்குத் தெளிவாக விளங்கும்படி செய்வது உபாத்தியாயர்களின் கடமை. மத விஷயமான போராட்டங்கள் எல்லாம் சாஸ்தர விரோதம்; ஆதலால், பரம மூடத் தனத்துக்கு லக்ஷணம். ஆசாரங்களை எல்லாம் அறிவுடன் அனுஷ்டிக்க வேண்டும். ஆனால், ஸமயக் கொள்கைக்கும் ஆசார நடைக்கும் தீராத ஸம்பந்தம் கிடையாது. ஸமயக் கொள்கை எக்காலத்திலும் மாறாதது. ஆசாரங்கள் காலத்துக்கு காலம் மாறுபடும் இயல்புடையன..........

தேசீயக் கல்வியில் முஹம்மதியர் எத்தனைக் கெத்தனை சேர்ந்துழைக்கிறார்களோ, அத்தனைக் கத்தனை அம்முயற்சி அதிகப் பயன்அடையும். மத பேதங்களை வ்யாஜமாகக் காட்டி ஹிந்து முஹம்மதியர் ராஜரீக முதலிய பொது விஷயங்களிலும் கூடியுழைக்காமல் தடுக்கவேண்டும் என்று ஆங்கிலோ - இந்தியப் பத்திராதிபர் முதலிய பொதுச் சத்துருக்கள் செய்ததீய முயற்சிகளெல்லாம் விழலாய்விட்டன.

மேலும், இந்தியாவிலுள்ள முஸல்மான்களில் பலர் ஹிந்து ஸந்ததியார். அவர்களுடைய நெஞ்சில் இந்து ரத்தம் புடைக்கிறது. இங்ஙனமில்லாமல் வெறும் பட்டாணிய அராபிய பாரஸீக மொகலாய ஸந்ததியாக இருப்போரும் இந்த தேசத்தில் ஆயிர வருஷங்களுக்கு மேலாக வாழ்வதால், இந்து ஜாதியராகவே கருதத்தக்கவர் ஆவர். எங்ஙனமெனில், ஜப்பானில் பிறந்தவன் ஜப்பானியன்; சீனத்தில் பிறந்தவன் சீனன்; இந்து தேசத்தில்பிறந்தவன் இந்து;

1. இந்தியா, இந்து, ஹிந்து மூன்றும் ஒரே சொல்லின் திரிபுகள். இந்தியாவில் பிறந்தவன் இந்திய ஜாதி அல்லது ஹிந்து ஜாதி.

2. கிறிஸ்தவர்

தேசீயக் கல்வி முயற்சிகளில் சேரக்கூடாதென்று ஒரு சில மூடப் பாதிரிகள் சொல்லக்கூடும். அதை இந்துக் கிறிஸ்தவர் கவனிக்கக்கூடாது. தேசீயக் கல்வியில், ரிக்வேதமும், குரானும், பைபிளும் ஸமானம். கிறிஸ்து, கிருஷ்ணன் என்பன பர்யாய நாமங்கள். வங்காளத்தில் இந்துக்கள் கிருஷ்ண தாஸ பாலன் என்று சொல்வதற்குக் கிறிஸ்தோதாஸ் பால் என்று சொல்கிறார்கள்.

3. மனுஷ்யத்தன்மை

ஆங்கிலேயர், பிராமணர், ஆஸ்திரேலியாவில் முந்தி வேட்டைகளில் அழிக்கப்பட்ட புதர்ச்சாதியார் எல்லாரும் பொதுவில் 'மனிதர்', 'ஆதாம் ஏவா வழியில் பிறந்தவர்கள்' என்று கூறி, முஹம்மதியக் கிறிஸ்தவ வேதங்கள் 'மனிதர் எல்லோரும் ஒன்று' என்பதை உணர்த்துகின்றன. மஹாபாரதத்தில் மனிதர், தேவர், புட்கள், பாம்புகள் எல்லோருமே காச்யபப்ராஜாபதியின் மக்களாதலால் ஒரே குலத்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆதலால், தேசீயக்கல்வி முயற்சியில் ஜாதி மத வர்ண பேதங்களைக் கவனிக்கக் கூடாதென்று அரவிந்த கோஷ், திலக், அனி பெஸண்ட் முதலியவர்கள் சொல்லுவதை இந்த நாட்டில் எந்த ஜாதியாரும், எந்த மதஸ்தரும், எந்த நிறத்தையுடையவரும் மறுக்க மாட்டார்களென்று நம்புகிறேன்."

மகாகவி பாரதியின் இந்த சிந்தனைகளையெல்லாம் நாம் புரிந்து கொள்ளுகிறபோது,

அது மூடநம்பிக்கை நிறைந்த வரிகளாக இருந்தாலும், அவரின் அந்தக் கவிதையே நமக்கு ஞாபகம் வருகிறது.

*'படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால்,*
*போவான், போவான், ஐயோ என்று போவான்.'*

- பாரதி பார்வை தொடரும்



படிப்பகம்

www.padippakam.com



# பண்பாட்டுச் சீரழிவு

## இந்தியப் பண்பாடு பற்றி பேச பா.ஜ.க.வுக்கு அருகதை இல்லை

அண்மைக் காலமாக எந்த ஒரு செய்தித்தாளின் பக்கங்களைத் திறந்தாலும் ''நண்பர்களை வளர்க்கும் நம்பர்'', ''போனில் ஜோதிடம்'', ''சினிமா மசாலா'', ''சினிமா செய்திகள்'' என்று நாள்தோறும் வெளிவரும் விளம்பரங்களைக் காணலாம். இதன் பின்னணி என்ன என்று நாம் தெரிந்துகொள்வது அவசியம்.

அமெரிக்காவில் உள்ள சில தனியார் தொலைபேசி நிறுவனங்கள், இளைஞர்களின் உணர்ச்சியைத் தூண்டும் வகையில் இயங்கிவருகின்றன. ''உங்களுக்கு போராடிக்கிறதா அல்லது தனிமையாக இருக்கிறீர்களா? உங்களுக்கு சிநேகிதி வேண்டுமா? குறிப்பிட்டுள்ள இந்த எண்ணில் தொடர்பு கொள்ளவும்'' என விளம்பரப்படுத்தின.

அங்கு 13 வயதிலிருந்து 25 வயது வரை உள்ள இளைஞர்கள் இந்தத் தொலைபேசியைப் பயன்படுத்தினர். இதனைப் பயன்படுத்துவதற்கான கட்டணம், மற்ற நாடுகளை விடப் பல மடங்கு அதிகம். இதனால் இந்தத் தொலைபேசி நிறுவனங்கள் அதிக லாபம் ஈட்டின. இது போதாதென்று கருதி இந்தியா போன்ற நாடுகளில் விளம்பரம் கொடுத்தன.

இங்குள்ள இளைஞர்கள் பெற்றோருக்குத் தெரியாமல், வெளிநாட்டவருடன் பேசும் வசதியுள்ள தொலைபேசியில் தொடர்பு கொண்டனர். இதனால், தொலைபேசிக் கட்டணத் தொகை அதிகமாக வந்தது. இதனைக் கண்ட பெற்றோர்கள் அதிர்ச்சியடைந்தனர். நாங்கள் வெளிநாட்டவருடன் தொலைபேசியில் பேசவில்லை என புகார் கொடுத்தனர். ஆனால், ஆராய்ந்து பார்த்தால், வீட்டிலுள்ள இளைஞர்கள் பெற்றோருக்குத் தெரியாமல் இதுபோன்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளனர் என்பது தெரியவந்தது.

இதனால் பெரிய சமூகப் பிரச்சனை உருவாக வாய்ப்பு ஏற்பட்டது. இதனால் உடனடியாக வெளிநாட்டினருடன் பேசும் வசதி இந்தியா முழுவதும் ரத்து செய்யப்பட்டது. மேலும், வெளிநாட்டினருடன் பேசும் வசதி வேண்டும் என்று வேண்டுகோள் விண்ணப்பம் கொடுத்தால்தான் இவ்வசதி கொடுக்கப்படும் என அரசு அறிவித்தது.




ஆனால், தற்பொழுது இந்திய 'கலாச்சாரத்தின் காவலர்கள்' எனப் பெருமையடித்துக் கொள்ளும் பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் தற்பொழுது மறைமுகமாக இது வந்து கொண்டிருக்கிறது. தகவல் தொடர்புத்துறையை தனியார் மயமாக்கும் பணி ஒரு புறம் நடந்து கொண்டிருக்க, தற்பொழுது சில குறிப்பிட்ட எண்கள் சில தனியாருக்கு விற்கப்பட்டுள்ளன.

மூட நம்பிக்கையை வளர்க்கும் முகமாக, உங்கள் ராசி பலனை அறிந்து கொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய எண்: 0900334433 மக்கள் சிந்திக்காமல், மக்கள் பிரச்சனைகளில் கவனம் கொள்ளாமல், திரைப்பட கிசு கிசு, திரைப்பட நடிகர்கள் பற்றி அறிந்து கொள்ள வேண்டிய எண்: 0900334545 திரை உலகில் மறைவாக நடக்கும் நிகழ்ச்சிகளை அரிய 0900443322. பெண் நண்பர்கள் வேண்டுமென்றால், தொடர்பு கொள்ள வேண்டிய எண்: 0900334400 மேலும், சில எண்களை அரசு பன்னாட்டு நிறுவனங்களுக்கு விற்றுள்ளது. இந்த எண்களைத் தொடர்பு கொண்டால் ஒரு நொடிக்கு ரூ. 1.20 செலுத்த வேண்டும். இது கிட்டத்தட்ட வெளிநாட்டுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வதற்குச் சமம்.

இந்தப் பன்னாட்டு தொலைத் தொடர்பு நிறுவனம், 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டில் ஒரு விளம்பரம் வெளியிட்டது. அதில், ''20 லிருந்து 35வயது வரை உள்ள பெண்கள் தேவை. ஆங்கிலம் சரளமாகப் பேசவேண்டும். மேலும், எல்லா விஷயங்களையும் கூச்சமின்றி பேசவேண்டும்.'' என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த எண்ணைத் தெரிந்துகொண்ட ஒரு நிறுவனத்தின் காவலாளி பலருடன் இந்த எண்ணில் பேசியுள்ளார். தொலைபேசி கட்டணம் வந்தபோது அந்நிறுவனத்தினர் அதிர்ச்சியடைந்தனர். பிறகு ஆராய்ந்து பார்த்ததில், காவலாளி இந்த எண்ணை பயன்படுத்தியது தெரியவந்தது. அவரை வேலை நீக்கம் செய்துவிட்டனர். இச்செய்தி 'இந்தியன் எக்ஸ்பிரசில்' வந்துள்ளது. வெளிவராதது எவ்வளவோ?

இதில் வரும் லாபம், தொலைதொடர்புத் துறைக்குச் செல்லாது. இந்த எண்களை விலைக்கு வாங்கியுள்ள தனியார் நிறுவனங்களுக்குத் தான் இது செல்லும். ''இந்திய கலாச்சாரத்தை பாதுகாப்போம்'' என்று கூறிக்கொண்டு அயல் நாட்டு தொலைபேசி எண்களைத் தடை செய்த பா.ஜ.க கூட்டணி அரசு, தற்பொழுது நம் ஊரிலேயே இதைக்கொண்டு வந்துள்ளது. இந்தியப் பண்பாட்டைக் காப்பாற்றுபவர்களின் லட்சணம் இதுதான். ●

- நெடுஞ்செழியன்



படிப்பகம்

www.padippakam.com



# நிலமும் தலித் மக்களும்

"குஜராத்தில் உள்ள ஒரு கிராமத்தில், தலித் மக்களுக்குரிய நிலங்களைப் பெற அவர்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள வேண்டும்."

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, தலித் மக்களுக்கு, பெண்களுக்கு சொத்துரிமை இல்லை என்று பார்ப்பனர்களால் ஏற்படுத்தப்பட்ட மநுஸ்மிருதி சட்டம், இந்திய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட பிறகும் இன்றுவரை தொடர்கிறது. இதுபோன்ற அநீதிகளை, ஏப்ரல் 19-20 அன்று சென்னையில் நடைபெற்ற தேசிய பொது விசாரணையின்போது காண முடிந்தது. (இது குறித்து மே இதழில், பொது விசாரணை குறித்து வெளிவந்த செய்தியின் தொடர்ச்சியே இக்கட்டுரை)

குஜராத்தில் நிலச்சீர்திருத்தம் பற்றிய ஒரு விசாரணை வந்தது. இதைப்பார்க்கும்போது, உண்மையிலேயே மநுஸ்மிருதி சட்டங்கள் தான் நாட்டை ஆள்கின்றனவா என்ற கேள்வியைத்தான் இது மக்களிடையே எழுப்பியது. இத்துணை நூற்றாண்டுகளில் ஒரேயொரு விஷயம்தான் மாறியிருக்கிறது. இதுநாள் வரை தலித் மக்களின் நிலத்தைப் பார்ப்பனர்கள் ஆக்கிரமித்துப் பறித்துக் கொண்டிருந்தனர். இப்பொழுது நவீன சூத்திரர்களான - பிற்படுத்தப்பட்டவர்கள், இம்மக்களிடமிருந்து நிலத்தைப் பறித்துக் கொள்கின்றனர்.

குஜராத் மாநிலத்தில் நில உச்சவரம்புச் சட்டம் 1960இல் கொண்டுவரப்பட்டது. ஆனால், 1974இல்தான் இது நடைமுறைக்கு வந்தது. சுரேந்திர நகர் போன்ற மாவட்டங்களில் இது 1980-க்குப்பிறகுதான் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின்படி, 12.5 லட்சம் ஏக்கர் நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். ஆனால், 1991 வரை குஜராத் அரசு வெறும் 2.5 லட்சம் ஏக்கர் நிலங்கள் மட்டுமே இருப்பதாக அறிவித்துள்ளது. இதில், அரசு கையகப்படுத்தியுள்ள நிலம் 1.54 லட்சம் ஏக்கர் மட்டுமே. ஆக, 1.27 லட்சம் ஏக்கர் நிலத்தை மட்டுமே ஏழைகளுக்கு என அளித்துள்ளது.

அரசாங்கத்தின் கொள்கைப்படி, அனைத்து 'பொறம்போக்கு' நிலங்களும் நிரந்தரமாக அல்லது ஆண்டுக்கு



ஒருமுறை புதுப்பித்துக் கொள்ளுதல் என்ற அடிப்படையில் தலித் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். ஆனால், பெரும்பான்மை இடங்களில் இந்நிலங்கள், தலித் அல்லாதவர்களாலேயே ஆக்கிரமிக்கப்பட்டு வருகிறது.

எடுத்துக்காட்டாக, அகமதாபாத் மாவட்டத்தில் உள்ள வீரம்கம் வட்டத்தில் உள்ள 22 கிராமங்களில், 518 ஏக்கர் நிலங்களை தலித் மக்களுக்கு என அரசு வழங்கியிருக்கிறது. 13 கிராமங்களில் உள்ள 106 தலித் குடும்பங்களின் 387 ஏக்கர் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. ராஜ்காட் ஜசாதன் வட்டத்தில் 299 ஏக்கர் தலித் நிலங்களில், 258 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

இவ்வழக்கை பொது விசாரணையின்போது, அகமதாபாத்திலுள்ள 'நவசார்ஜன் அறக்கட்டளை' அளித்தது. தலித் மக்களுக்குரிய நில உரிமைகள் மறுக்கப்படுவதற்கு முக்கிய காரணம், அரசு அதிகாரிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலத்தைக் கைப்பற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுவதில்லை. சில இடங்களில், தலித் மக்களிடமிருந்து வெளிப்படையாகவே நிலத்தைப் பறித்துக் கொள்கின்றனர்.

பிபார்டி கிராமத்தில் நடைபெற்ற மிகப் பெரிய கொடுமை என்னவென்றால், இங்குள்ள 13 தலித் குடும்பங்களுக்கு 64 ஏக்கர் நிலம் வழங்கப்படவேண்டும். ஆனால், இவர்கள் அனைவரும் குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொண்டால்தான் இவர்களுக்கு இந்நிலம் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டது. அதன் பிறகு, இதே நிலம் 12 ஆடு, மாடு மேய்க்கும் குடும்பத்திற்கு மேற்கூறிய நிபந்தனையுடன் வழங்கப்பட்டது.

இங்குள்ள பெரும்பாலான கிராமங்களில், தலித் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலங்களுக்குரிய சட்ட ஆவணங்கள் அளிக்கப்படுவதில்லை. ஒருவேளை அப்படியே இதற்கான ஆவணங்கள் வழங்கப்பட்டாலும், உள்ளூர் வருவாய்த்துறை அதிகாரிகள் இந்நிலத்திற்கான வரியை பெற்றுக் கொள்வதில்லை. ஏனெனில், இந்தப் பணத்தை பெற்றுக்கொண்டால் அதிகாரப்பூர்வமாக இந்நிலம் இம்மக்களுக்குச் சொந்தமாகிவிடும் என்பதால் இப்படி செய்கின்றனர். "சாதி இந்துப்பண்ணையார்கள் தாக்குவார்கள் என்ற அச்சம்தான் தலித் மக்கள் நிலத்தை தங்களுக்கு சொந்தமாக்கிக் கொள்ள முடியாததற்கு முக்கிய காரணமாகும். தலித் மக்கள் மீது இழைக்கப்படும் பெரும்பாலான வன்முறைகளுக்கு - இம்மக்கள் நில உரிமைக்கான போர்க் குரல் எழுப்புவதுதான் காரணம்" என்று நவசார்ஜன் அறக்கட்டளை கூறுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

அடுத்து, கம்யூனிச மாநிலமான கேரளாவில்கூட கம்யூனிஸ்டுகளே - தலித் மக்களின் நிலவுரிமைக்கான போராட்டத்தைத் தடுக்கின்றனர் என்ற செய்தி அதிர்ச்சியையும் வேதனையையும் அளித்தது. ''கேரள மாநிலத்தில் அதிக அளவு படிப்பறிவு பெற்ற மக்கள் வாழ்கின்றனர். நிலச் சீர்திருத்தம் மிகுந்த பரவலான வகையில் நடைமுறையில் உள்ளது. சிறந்த வகையில் உணவுப் பொருட்கள் வழங்கும் முறை வழக்கில் உள்ளது. இதன் காரணமாக, வளர்ச்சி மாநிலமான கேரளாவில், தலித் மக்கள் பிரச்சனைகள் இது வரை உருவானதில்லை; வர்க்க ரீதியான போராட்டங்களே இது வரை கேரள மாநிலத்தில் நடைபெற்றுள்ளன'' என்பது கேரள கம்யூனிச வாதிகளின் வாதம் மட்டுமல்ல; இது பெரும்பாலான மக்களிடையே உள்ள கருத்து மாகும். ஆனால், இங்கு உண்மையில் நடப்பது என்ன?

பதனம் தித்தா என்ற மாவட்டத்தில் உள்ள குதிரைமூக்கு என்ற இடத்தில் வாழும் தலித் மக்கள், நீண்டகாலமாகவே இடது கம்யூனிச ஆதரவாளர்களாக இருந்தனர். ஆனால், அங்கு வாழும் கம்யூனி சத்தைச் சார்ந்த, தலித் அல்லாத மக்கள், தலித் மக்களை அந்தப் பகுதிகளில் சாராயம் விற்பதற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுள்ளனர். இதற்கு தலித் மக்கள் மறுத்ததன் காரணமாக, அவர்களை சி.பி.அய். மற்றும் சி.பி.எம், கட்சியினர் தாக்கியுள்ளனர். இதனால், அங்குள்ள கேரள தலித் சிறுத்தை இயக்கத்தினரையும் (கே.டி.பி) அதன் பகுதி தலைவரான திரு. கொம்மலம் அவர்களையும் தலித் மக்கள் சந்தித்து பாதுகாப்பு கேட்டுள்ளனர்.

சாராயம் விற்று வந்த சி.பி.அய்./ சி.பி.எம். கட்சியினர் மீது தலித் மக்கள் காவல் துறையில் புகார் செய்துள்ளனர். கே.டி.பி. இயக்கத்தில் சேரும்படி தலித் மக்கள் வீடு வீடாகச் சென்று பிரச்சாரம் செய்தனர். இதனால் தலித் மக்கள் தங்கள் பிரச்சனைகளின் அடிப்படையில் ஒன்று திரள்வதைக் காணச் சகிக்காத சாதி இந்துக்கள், கே.டி.பி. யைப் பற்றி அவதூறு கிளப்பியும் தலித் மக்களை அச்சமூட்டியும், கே.டி.பி. அமைப்பினர் கொடிகளை எரித்தும், கொலை ஆயுதங்களுடன் தலித் மக்களை தாக்கவும் செய்தனர்.

கே.டி.பி. அமைப்பில் இணையும் தலித் மக்களின் தலை வெட்டியெறியப் படும் என பகிரங்க அறிவிப்பும் விடுத்தனர். இந்த வெறிச் செயல்களை காவல் துறையும் மெத்தனத்தோடு குறைந்த பட்சம் பதிவு செய்யக்கூட முன்வரவில்லை. கே.டி.பி. இயக்கத்தினர் கடும் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டனர். பெண்கள், குழந்தைகள் கூட இவர்களிடமிருந்து தப்பிக்க முடியவில்லை.

நிலைமை மிகவும் மோசமடையவே, தலித் மக்கள் தங்களின் இருப்பிடங்களையும், அசையாத சொத்துக்களையும் விட்டுவிட்டு உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேறிடம் நோக்கி அகதிகளாய் சென்றனர். இந்தக் கொடுமையை எதிர்த்ததற்காக, சுரேஷ் என்ற இளைஞர் மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளார். இதில் 9 சி.பி.அய். கட்சியினர் கூட்டாகச் சேர்ந்து கொண்டு, அங்குள்ள தலித் மக்களின் வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். பல வீடுகளை அடித்துத் தரைமட்டமாக்கியுள்ளனர்.

இதையெல்லாம் அங்குள்ள நிர்வாகம், எஸ்.சி./எஸ்.டி. வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்குப் பதில், சாதாரண சிவில் வழக்குகளின் கீழ் பதிவு செய்துள்ளது. கடந்த 50 ஆண்டுகாலமாக சி.பி.அய்./சி.பி.எம். கட்சிகளில் இருந்த தலித் மக்கள், தங்களுக்கான பிரச்சனைகளுக்காக அணிதிரளும்போது, சாதி வெறியர்கள் அவர்களை சாதியைக் காரணங்காட்டி கொடுமைப் படுத்துகின்றனர். இது குறித்து குறைந்த பட்சம் சுவரொட்டி மூலம் மக்களிடம் தெரியப்படுத்தக்கூட, அங்குள்ள காவல் நிலையம் தடைவிதித்துள்ளது.

இதன் மூலம் நாம் சில உண்மைகளைப் புரிந்துகொள்ள முடிகிறது. தமிழ் நாட்டில் இத்தனை ஆண்டுகாலம் எப்படி தாழ்த்தப்பட்ட மக்கள், திராவிட அரசியல் கட்சிகளின் கைப்பாவையாக, சுவரொட்டி ஒட்டுவதற்கும் ஊர்வலத்தில் கோஷங்கள் போடுவதற்கும் பயன்படுத்தப்பட்டு வந்தார்களோ, அதே போல்தான் கேரளாவிலும் தலித் மக்கள் கம்யூனிச இயக்கத்தில் பயன்படுத்தப்படுகின்றனர். இக்கட்சிகளின் தலையாயப் பொறுப்புகளில் - உழைக்கும் வர்க்கமான தலித் மக்களின் தலைமை இன்றுவரை இல்லை. உயர் சாதியினரே தலைமையை ஆக்கிரமித்து வருகின்றனர். கம்யூனிஸ்டு கொடியில் அருவாளும் சுத்தியும் உள்ளது. ஆனால், இதைப் பயன்படுத்தும் மக்களுக்கு கட்சியின் பொதுக்குழுவில் இடம்பெற உரிமை யில்லை என்பதுதான் உண்மைநிலை.

- நம் செய்தியாளர்

புகைப்படம் : ஜெயராணி

## ஜாதித் திமிர்

இடுப்புக்கான தல்ல
துண்டு - தோளுக்கானது
முழங்கு முதலாளியிடம்.

○

பண்ணையிடம் வாங்கப் போவது
பிச்சையல்ல - சம்பளம்
நிமிர்ந்து நில்.

○

ஊர் டீக்கடை
பெயர் சமத்துவம்
ரெட்டை டம்ளர்.

○

செருப்புக் கால் தடங்கள்
தொடரும் வெறுங்கால் தடங்கள்
சாதிகள் இல்லையடி பாப்பா.

○

மவுனமே மேன்மையென்பார்
எச்சரிக்கை தோழா
மேன்மைக்கு முழக்கமிடு.

○

கைகளை உயர்த்தும்
தூளிக் குழந்தை
போராட்ட அறிகுறி.

○

அணையவில்லை அக்னி
பல்லாயிரம் ஆண்டு
சிந்துவெளி, வெண்மணி.

○

தீ, தண்ணீர்
கூட்டணி உடன்பாடு
வெண்மணி, தாமிரபரணி.

○

கட்டிக்க முடியாது
வச்சிக்க முடியும்
வெட்டு நாக்கை.

○

விளக்கேற்ற சாதி தடை
விளக்கணைக்க அனுமதி
ஜாதித் திமிர்.

- ம.தி. சாந்தன்
மரண தண்டனை சிறைவாசி
வேலூர் நடுவண் சிறை



படிப்பகம்

www.padippakam.com






திருமாவளவன், சங்கமித்ரா, சுப.வீரபாண்டியன், விடுதலை க. ராசேந்திரன்

# அய்.அய்.டி. நிறுவனத்திற்கு கடும் எச்சரிக்கை

சென்னைமக்களுக்கு 'அய்.அய்.டி.' என்ற வாசகம் இப்போது மிகவும் அத்துபடி! நாட்டின் மிக உயர்ந்த கல்வி நிறுவனமாக பார்ப்பனர்களால் அது தம்பட்டமடிக்கப்படுகிறது. ஆனால், அந்த பல ஆயிரம் ஏக்கர் வளாகத்துக்குள் தீண்டாமையும், வர்ணாசிரமமும் கோரத்தாண்டவமாடும் கொடுமைகள், இப்போது வெளிச்சத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன. ஆர்ப்பாட்டம், பொதுக்கூட்டம், கருத்தரங்குகள் என்று தொடர்ச்சியான இயக்கத்தை நடத்திக்கொண்டிருக்கிறது பெரியார் திராவிடர் கழகம். அந்த வரிசையில், சூன் 24அன்று - வேளச்சேரியில் ஒரு பொதுக்கூட்டம். அய்.அய்.டி.யில் எஸ்.சி./எஸ்.டி மாணவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை,அவமதிப்புகளை, ஆதாரங்களுடன் பலரும் ஆவேசமாகப் பேசினார்கள்; செய்திகள் ஒவ்வொன்றும் அதிர்ச்சியூட்டுவதாக இருந்தன.

சுஜி - ஒரு பழங்குடி சமூகத்தைச் சார்ந்த பெண். அப்பாவுக்கு ஆந்திராவில் பணி. இன்டர்மீடியம் தேர்வில் பவுதீகம், கணிதம், ரசாயனம் பாடங்களில் 95 சதவிகிதம் மதிப்பெண்களைக் குவித்தவர். ஆந்திர மாநிலத்தில் பழங்குடி மாணவர்களிடையே முதலிடம் பெற்றவர். ஆந்திர மாநில அரசின் 'பிரதிபா விருது'ம் இவருக்குக் கிடைத்தது. மருத்துவம், பொறியியல் கல்லூரிகளில் சேருவதற்கான தேர்வுகளில் வெற்றி பெற்றார். ஆனாலும் நாட்டின் மிக உயர்ந்த கல்வி நிறுவனமான அய்.அய்.டி.க்குள் நுழைய அவர் விரும்பினார்; அதற்கான நுழைவுத் தேர்விலும் வெற்றி பெற்றார்; எஸ்.சி., எஸ்.டி. இட ஒதுக்கீடு அடிப்படையில் - அந்த மாணவியை பி.டெக். வகுப்பில் சேர்த்திருக்க வேண்டும்.

ஆனாலும், இந்த சமூகத்தினரை அவமதிப்பதற்காகவே - ஒரு 'தயாரிப்பு பயிற்சி வகுப்பை' அய்.அய்.டி. பார்ப்பன நிர்வாகம் நடத்துகிறது. தாழ்த்தப்பட்டோர் - பழங்குடி மாணவர்களுக்கு மட்டும்தான் இந்தப் பயிற்சி. இது ஏதோ அவர்களுக்கு வழங்கப்படும் சலுகை அல்ல; மாறாக, இந்த சமூக மாணவர்களுக்கு மேலும் ஓராண்டு கூடுதல் சுமை. மேலும், நுழைவுத்தேர்வில் வெற்றி பெற்றும், தயாரிப்புப் பயிற்சியில் தேர்ச்சி பெறவில்லை என்று கூறி, வீட்டுக்கு அனுப்பிவிடும் அவலம்! இது ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து நடக்கிறது.

இவ்வாண்டு, அப்படிப் பலிகடாவாக்கப்பட்டவர்களில் பழங்குடி சமூகத்தைச் சார்ந்த மாணவர்கள் 6 பேர்; அதில் சுஜியும் ஒருவர். பழங்குடி மாணவர் சமூகத்தைச் சார்ந்தவர்கள் படிக்க வருவது என்பதே மிக மிக அரிது. பல நிறுவனங்களில் இவர்களுக்கான ஒதுக்கீடுகள், விண்ணப்பதாரர்கள் இல்லாமலே நிரப்பப்படாமல் போய்விடுகின்றன! ஆனால், இத்தனை சமூகத் தடைகளையும் மீறி எதிர்நீச்சல் போட்டு உரிய கல்வித் தகுதியோடு வரும் மாணவர்களையும் - இப்படி வெளியே தள்ளும் அநீதி, அய்.அய்.டி.க்குள் தொடர்ந்து நடக்கிறது.

இப்படி தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை முழுமையாகப் பூர்த்தி செய்யாமல், அவைகளை வெளிநாட்டிலிருந்து படிக்க வரும் மாணவர்களுக்கு, இடங்களைப் பணத்துக்கு விற்றுவிடுகிறார்கள். இந்தத் திட்டத்தின் பெயர் 'தாசா' (DASA - Direct Admission to the Students Abroad) இந்தத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்படும் மாணவர்களுக்கு நுழைவுத் தேர்வும் கிடையாது; தயாரிப்புப் பயிற்சியும் கிடையாது. பணம் தந்தால் போதும்; இதில் பயனடைவோர் எல்லாம் - வெளி நாடுகளில் வாழும் பார்ப்பனர்கள்தான்!

**நுழைவுத் தேர்வுக்கான விண்ணப்பப்படிவங்களில்கூட தீண்டாமை இருக்கிறது. தலித் மாணவர்களுக்கான விண்ணப்பப்படிவங்கள் மட்டும் தனி வண்ணத்தில் இருக்கும்; விடைத்தாள்களும் கூட இப்படித்தான்; விடைத்தாள்களில் தலித் மாணவர்கள் மட்டும், பதிவு எண்களோடு, தங்களது பெயர்களையும் எழுத வேண்டும். விடைத்தாளைப் பார்த்தவுடனேயே - திருத்துகிறவர்களுக்கு, அது ஒரு தலித்துக்கு உரியது என்பது தெரிந்து விடும்; நாட்டின் மிக உயர்ந்த கல்வி நிறுவனத்தில், இப்படி ஒருஅப்பட்டமானதீண்டாமைக்கொடுமை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.**

அய்.அய்.டி. நிர்வாகம் நடத்தும் தயாரிப்புப் பயிற்சி வகுப்புக்கு, வினாத்தாள் குறிப்பதும், விடைத்தாள் திருத்துவதும் அவர்களேதான். இதற்கு மறு மதிப்பீடு (Revaluation) கோரும்



படிப்பகம்

www.padippakam.com

உரிமை இல்லை. பி.டெக். வகுப்பில் சேர்ந்து தேர்ச்சி பெறாத மாணவர்களுக்குக் கூட, உடனடியாக ஒரு மறு தேர்வு உண்டு. ஆண்டை வீணாக்காமல் தொடர்ந்து படிக்கும் வாய்ப்பு உண்டு. ஆனால், தலித் மாணவர்களுக்காக மட்டுமே நடத்தப்படும் தயாரிப்புப் பயிற்சி வகுப்புக்கு மட்டும் மறு தேர்வு கிடையாதாம்! பாதிக்கப்பட்ட சுஜி தந்த புகாரின் அடிப்படையில், மத்திய அரசின் 'தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் தேசிய ஆணையம்' - இது பற்றி விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பியிருக்கிறது. இந்த விவரங்களை எல்லாம், கூட்டத்தில் பேசியவர்கள் மக்கள் மன்றத்தில் எடுத்து வைத்தபோது, கூட்டத்தினர் உணர்ச்சி மயமானார்கள்.

எழுத்தாளர் **சங்கமித்ரா** பேசுகையில், ''50 ஆண்டு காலத்தில் மக்கள் வரிப்பணத்தில், பார்ப்பனர்களை வெளிநாட்டுக்கு வேலைக்கு அனுப்பியதைத்தவிர அய்.அய்.டி.வேறு என்ன செய்திருக்கிறது?'' என்று கேட்டார். ''மக்களே இல்லாத மத்திய அரசுக்கு கல்வித் துறை எதற்கு?'' என்று கேட்ட அவர், ''20 கோடி தாழ்த்தப்பட்ட மக்கள் இருந்தும், ஒரு பிரதமர்கூட வர முடியவில்லை; ஆனால், இரண்டரை கோடி பார்ப்பனர்களில் 7 பேர் பிரதமராகி விட்டனர்'' என்றார்.

''சென்னை பல்கலைக் கழகத் துணை வேந்தருக்கே ரூ. 25,000 தான் ஊதியம். ஆனால், அய்.அய்.டி.யில் ஒரு பேராசிரியரின் குறைந்தளவு ஊதியமே ரூ.40,000. 41 ஆண்டு கால வரலாற்றில், அய்.அய்.டி.யில் 420 பேராசிரியர்களில் தாழ்த்தப்பட்டவர்கள் 2 பேர் மட்டுமே'' என்று, சென்னை மாவட்ட மக்கள் சிவில் உரிமைக் கழகத்தலைவர்பேரா. **சரசுவதி** சுட்டிக்காட்டினார்.

தமிழ் - தமிழர் இயக்கத்தலைவர் திரு. **சுப. வீரபாண்டியன்** கடும் எச்சரிக்கை விடுத்தார், ''விஞ்ஞானி வசந்தா ஒரு தனிமனிதரல்ல; அவரைப் பழி வாங்கிவிடலாம் என்று நினைத்து விடாதீர்கள்; அவருக்குப் பின்னால், ஒடுக்கப்பட்ட சமுதாயமே நிற்கிறது'' என்றார்.

## போராடுகிறார், விஞ்ஞானி வசந்தா

பார்ப்பன நிர்வாகமான அய்.அய்.டி.யை எதிர்த்து, நீதிமன்றத்திலும், நிர்வாக மட்டத்திலும் தொடர்ந்து ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடி வருகிறார், விஞ்ஞானி வசந்தா. சர்வதேச கணித ஆய்வு இதழ்களில் 158 ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்ட பெருமை இவருக்கு உண்டு. இந்த எண்ணிக்கையில் அய்.அய்.டி.யில் ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டதே இல்லை. கணிதம் தொடர்பான சர்வதேச ஆய்வரங்கங்களிலும் இவர் 108 கட்டுரைகளை அளித்துள்ளார். கடந்த சனவரி மாதம் பூனாவில் 'இந்திய தேசிய விஞ்ஞான காங்கிரஸ் - பிரதமர் தலைமையில் கூடியபோது, மொத்தம் 18 ஆய்வுக்கட்டுரைகள் அங்கீகரிக்கப்பட்டன. இதில் தனது மாணவர்களுடன்சேர்ந்து முனைவர் வசந்தா அளித்த கட்டுரைகளின் எண்ணிக்கை மட்டும் 6 ஆகும். கணித ஆய்வு வரலாற்றில், இது மிகப்பெரும் சாதனை ஆகும்!

வசந்தாவின் அறிவு, ஆற்றல், கடும் உழைப்பு காரணமாக, இவரது வழிகாட்டலில் பணியாற்ற ஏராளமான மாணவர்கள் முன்வந்தாலும், பார்ப்பன நிர்வாகம், 2 மாணவர்களுக்கு மேல் அனுமதிக்க மறுக்கிறது. முனைவர் வசந்தா, தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவர்களை ஆய்வுக்குத் தேர்வு செய்வதே இதற்குக் காரணம். அமெரிக்காவில் உள்ள கணித ஆய்வு மய்யம், இவரின் 127 ஆய்வுகளை, பரிசீலனைக்கு உட்படுத்தி அங்கீகரித்திருக்கிறது. 1996இல் உலகிலேயே மிக அதிக எண்ணிக்கையில் கணித ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்து, முதலிடத்தில் நிற்கும் பெருமையைப் பெற்றவர் முனைவர் வசந்தா. அத்தகைய ஒரு பெண்ணை, பதவி நீக்கம் செய்து உத்தரவு பிறப்பித்தார், பார்ப்பன இயக்குனர் நடராசன். என்ன காரணம்?

புகழ் பெற்ற விருது ஒன்றைப் பெறும் முழுமையான தகுதி வசந்தாவுக்கு இருந்தும், அவருக்குப் பதிலாக தன்னைவிடக் குறைவான கல்வித்தகுதி கொண்ட வி.எஸ். சுந்தர் எனும் பார்ப்பனருக்கு வழங்கப்பட்டதை எதிர்த்து, அவர் நீதிமன்றம் சென்றார். அதன் காரணமாக, நிர்வாகம் அவரை பதவி நீக்கம் செய்தது; பதவி நீக்கத்தை எதிர்த்து வழக்குத் தொடர்ந்து சட்டரீதியாக தனது பதவியைக் காத்துக் கொண்டு, தலித் மாணவர்களின் சமூக நீதிக்காக, உறுதியுடன் போராடுகிறார் முனைவர் வசந்தா. தன்னைச் சூழ்ந்து நிற்கும் ஆபத்துகளைப் புறந்தள்ளி - சமூக நீதிக்குப் போராடும் உண்மையான வீராங்கனையாக அவர் களத்தில் நிற்கிறார். ●

பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை **க. ராசேந்திரன்** பேசுகையில், ''பெரியார் தி.க. துவங்கியுள்ள இந்தப் போராட்டம் தொடரும். குடியரசுத் தலைவருக்கும்மத்திய அரசின் கவனத்துக்கும் பிரச்சனைகளைக் கொண்டு சென்றுள்ளோம். இந்த இயக்கத்தை, மாபெரும் மக்கள் இயக்கமாக மாற்றுவோம். தாழ்த்தப்பட்டோரை அவமதிக்கும் பார்ப்பன இயக்குனர், பார்ப்பனப் பேராசிரியர்களின் புகைப்படங்களோடு, சுவரொட்டிகளை ஒட்டுவோம்'' என்றார். ''தாழ்த்தப்பட்டோருக்குரிய 80 பேராசிரியர் இடங்களைப் பூர்த்தி செய்யாமல் புதிய நியமனங்கள் செய்யப்படுமானால் - அய்.அய்.டி.யை செயல்பட அனுமதிக்க மாட்டோம்'' என்று எச்சரித்தார்.

'விடுதலைச்சிறுத்தைகள்' அமைப்பாளர் தோழர் **திருமாவளவன்** பேசுகையில் - ''இந்தப் போராட்டத்துக்கு எங்களின் முழுமையான ஆதரவு உண்டு. விடுதலைச் சிறுத்தைகளும் களத்தில் இறங்குவார்கள். அய்.அய்.டி. பார்ப்பன வெறியாட்டம் தொடர்ந்தால், பெர்லின் சுவர் உடைக்கப்பட்டதுபோல் அய்.அய்.டி.யின் சுவர்கள் உடைத்து நொறுக்கப்படும்'' என்றார். சமூக நீதிக்காகத் துணிவுடன் போராடும் திருமதி வசந்தா கந்தசாமியைப் பாராட்டினார்.

அய்.அய்.டி.யில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை, ஆதாரங்களுடன் தொகுத்து, பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்டுள்ள நூலை, பேரா. சரசுவதி வெளியிட, தோழர் திருமாவளவன் பெற்றுக் கொண்டார். அய்.அய்.டி. பற்றி பெரியார் தி.க.வெளியிட்ட 3ஆவது வெளியீடு இது. அய்.அய்.டி. வளாகத்தின் அருகில் நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்கு, நிறுவனத்தைச் சார்ந்த பலரும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. ●

- நம் சிறப்புச் செய்தியாளர்



படிப்பகம்

www.padippakam.com



### தலித் இயக்கங்கள் / அமைப்புகள்

# எதை நோக்கி செயல்பட வேண்டும்?

ஜே. கோபிநாத்

வரலாற்று நிகழ்வுகளை நாம் சிந்தனை செய்வோமானால், நோக்க வேண்டிய இலக்கு, செல்ல வேண்டிய பாதை, செயல்படுத்தக்கூடிய செயல்கள் ஆகியவற்றை அறிவு பூர்வமாக காட்டும் அட்சய பாத்திரமே வரலாறு.

ஒடுக்கப்பட்ட சாதிகள் ஒன்றுபடுவதுதான் நம் விடுதலைக்கு ஒரே வழி என்று டாக்டர். அம்பேத்கர் கூறினார். இக்கருத்தினை தலித் அமைப்புகள் மனதில் கொண்டிருக்கிறார்களா என்பதே அய்யமாக இருக்கிறது. சகோதர பூசல் இருக்கக் கூடாது. எடுத்துக்காட்டாக ஈழத்தில் சகோதர யுத்தம் இல்லாமல் இருந்திருந்தால், அவர்களுடைய நோக்கம் எப்போதோ நிறைவேறியிருக்கும்.

இந்து மதத்திலும் பல கடவுள்கள், பல அமைப்புகள், வெவ்வேறு உருவங்கள் வடிவங்கள் கொண்டிருந்தாலும், அவர்களின் நோக்கம் ஆரிய இனம் வாழ, இம்மண்ணின் மைந்தர்களை பலி கொடுப்பது. அதனால், நம்மிடையே பகைமையைத் தூண்டி அவர்கள் குளிர்காய்கிறார்கள். நம்முடைய மதம் இந்து மதம் அல்ல. நம்மீது இந்து மதம் திணிக்கப்பட்டது என்பது தான் வரலாற்றுப் பூர்வமான உண்மை.

எனவேதான், 1935ஆம் ஆண்டு இயோலா மாநாட்டில் இந்து மதத்தை விட்டு வெளியேறுங்கள் என அறைகூவல் விடுத்தார் அம்பேத்கர். அம்பேத்கரின் இந்தக் கருத்தை இந்தியாவில் வாழ்ந்த அனைத்து தலித் தலைவர்களும் முற்போக்கு வாதிகளும் ஆதரித்து இருந்தால், இந்து மதம் இந்நேரம் பலவீனப்பட்டிருக்கும். இந்து மதம் நம்மீது திணிக்கப்பட்டது என்று நாம் உணர்வோம். பின்பு, நம் மக்களுக்கும் உணர்த்துவோம்.

மக்கள் தொடர்பு சாதனங்களை நாம் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். நாம் பத்திரிகையுடன் பெரும்பாலும் நிறுத்திக் கொள்கிறோம். நாம் இன்னும் திரைப்படங்கள் போன்றவற்றை முழுமையாகப் பயன்படுத்தவில்லை.

அறிவியல் வளர்ச்சியை முழுமையாகப் பயன்படுத்தாத சமூகம் முன்னேற்றம் காண முடியாது என்பதை அண்ணல் அவர்கள் அறிந்திருந்தார் என்பதுதானே பொருள். அண்ணல் அம்பேத்கர் இன்றைய சூழ்நிலையில் இருந்தார் என்றால் அனைத்து அறிவியல் வளர்ச்சிகளையும் நம் சமுதாயத்திற்கு பயன்படுத்தி இருப்பார். நம் மக்களை அதைப் பற்றி உணரச் செய்திருப்பார்.

**நமக்கு ஆர்.எஸ்.எஸ். போன்ற பாசிச அமைப்பு வேண்டாம். நம் இன மக்களுக்கு உணர்வை ஊட்டக் கூடிய நம் இனமக்களுக்கு நல்ல ஆட்சியாளர்களை தர, நம் இன மக்களுக்கு அறிஞர்களை வழங்கும் ஒரு அமைப்பு வேண்டும். அந்த அமைப்பு நேரடியாக ஆட்சியில், அரசியலில், போராட்டங்களில் பங்கேற்கக் கூடாது. ஆனால், அந்த அமைப்பு 24 மணிநேரமும் இயங்கும் தன்மை கொண்டதும், அனைத்துத் துறையிலும் உரிய நபர்களை உருவாக்கி அனுப்பிக் கொண்டே இருக்க வேண்டும்.**

நம்முடைய இயக்கங்கள் வெட்டி வேலைகள் செய்கிறார்களா என்றால், அது பெரிய் தவறு ஆகும். நம்முடைய தலித் இயக்கங்கள், அமைப்புகள் மகத்தான வேலைகளை செய்தன, செய்கின்றன. இதில் கருத்து, வேறுபாடு இல்லை. எத்தனையோ போராட்டங்களைக் கண்டிருக்கின்றனர். நம் இன மக்கள் மீது அநீதி நடக்கும்போது மக்களின் மனங்களில் உணர்வுகளை வளர்த்துப் போராடுகிறார்கள். அத்தகைய உணர்வு அந்த போராட்டம் முடிந்தவுடன் மறந்து விடுகின்றனர். அல்லது மறக்க வைக்கப்படுகின்றனர்.

பா.ஜ.க. ஒரு இந்துத்துவா கட்சி என்பது ஊரறிந்த ரகசியம்; இருந்தும் அவர்கள் அனைத்து தரப்பினர்களின் வாக்குகளைப் பெறமுடிகிறது என்றால் காரணம் என்ன? சிந்திக்க வேண்டும். ஆர்.எஸ்.எஸ். என்றால் பெரும்பான்மை இந்துக்கள் கூட ஓட்டுப்போடுவார்களா என்பது சந்தேகமே. எனவேதான் அதற்கு ஒரு முகமூடி தேவைப்பட்டது. அதுதான் பா.ஜ.க.

நமக்கு ஆர்.எஸ்.எஸ். போன்ற பாசிச அமைப்பு வேண்டாம். நம் இன மக்களுக்கு உணர்வை ஊட்டக் கூடிய, நம் இனமக்களுக்கு நல்ல ஆட்சியாளர்களைத் தர, நம் இன மக்களுக்கு அறிஞர்களை வழங்கும் ஒரு அமைப்பு வேண்டும். அந்த அமைப்பு நேரடியாக ஆட்சியில், அரசியலில் போராட்டங்களில் பங்கேற்கக் கூடாது. ஆனால், அந்த அமைப்பு 24 மணிநேரமும் இயங்கும் தன்மை கொண்டதும் அனைத்துத் துறையிலும் உரிய நபர்களை உருவாக்கி அனுப்பிக் கொண்டே இருக்க வேண்டும்.

தலித் மக்கள், இந்து மதத்தில் உள்ள பிற ஒடுக்கப்பட்ட மக்களுக்கு பங்காளிகள். தலித் மக்கள் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பகையாளிகள் அல்ல என்பதை அம்மக்களுக்கு உணர்த்த வேண்டும். அண்ணலின் கனவை நனவாக்க, புவுத்தத்தில் ஒன்றுபட்டு, தம்மத்தில் வாழ்ந்து; சங்கத்தில் வளர்வோம்.

**மூன்றாம் பரிசு பெறும் கட்டுரை**



படிப்பகம்

www.padippakam.com

வரலாறு

# தலித்தியமும் உலக முதலாளியமும்

## சுதந்திர இந்தியாவில் தலித் மக்களின் நிலை 8

நீதித்துறை, மும்பை துறைமுக டிரஸ்ட் போன்ற சுயாதீனமான நிறுவனங்கள், தனியார் துறை, மதச்சிறுபான்மையினர் வசமுள்ள சில நிறுவனங்கள், அணுசக்தித் துறை போன்ற அறிவியல் துறைகள் ஆகியனவற்றில் தலித் மக்களுக்கு இட ஒதுக்கீடு இல்லை. பாதுகாப்புத் துறை, இந்தியாவில் மிக அதிகமானோருக்கு வேலைவாய்ப்புத் தரும் துறையாகக் கருதப்படுகிறது. ஆனால், இங்கு தலித் மக்கள் பெற்றுள்ள இடங்கள் மிகச் சொற்பமானவை. அரசாங்க வங்கித்துறையில், 1972ஆம் ஆண்டிலிருந்துதான் இட ஒதுக்கீடு முறை நடைமுறைக்கு வந்தது.

மத்திய அரசாங்கப் பதவிகளிலும், வங்கிகளிலும் பொதுத்துறைகளிலும் தலித் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் முழுமையாக நிரப்பப்படவில்லை. 1996-97ஆம் ஆண்டின் நிலவரப்படி, அப்படி நிரப்பப்படாத இடங்களின் விவரம் கீழ்வருமாறு:

| பிரிவு | நிரப்பப்படாத இடங்களின் எண்ணிக்கை | விழுக்காடு |
|---|---|---|
| ஏ பிரிவு | 369 | 74.84 |
| பி பிரிவு | 438 | 51.39 |
| சி பிரிவு | 3133 | 55.87 |
| டி பிரிவு | 4811 | 54.30 |
| வங்கிகள் | 272 | 45.10 |
| பொதுத்துறை | 2642 | 88.10 |

எத்தனை விழுக்காடு தலித் மக்கள் அடிப்படைக் கல்வியறிவை பெற்றிருக்கிறார்கள் என்பதைக் காண்போம்:

| அனைத்திந்தியா (%) | | நகர்ப்புறம் (%) | | கிராமப்புறம் (%) | |
|---|---|---|---|---|---|
| (1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு) | | | | | |
| 37.41 | | 55.11 | | 33.25 | |
| ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 49.91 | 23.75 | 66.60 | 42.24 | 45.94 | 19.46 |

எஸ்.வி. ராஜதுரை

எழுத்தறிவில் தலித் மக்களுக்கும் பிற சாதியினருக்குமிடையிலான இடைவெளியைக் காண்போம்:

| ஆண்டு | சதவிகிதம் |
|---|---|
| 1961 | 17.59 |
| 1971 | 19.13 |
| 1981 | 19.84 |
| 1991 | 17.20 |

ஒருபுறம், தொழில்களோடும் வேலைகளோடும் தொடர்புடைய கல்வி கற்கும் தலித் மாணவர்களின் எண்ணிக்கை பெருகிவருகிறது. 1995இல் பட்டதாரி மட்டத்தில் அறிவியல் பட்டங்கள் பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 47,794; பொறியியல் பட்டதாரிகள் 17,794; பாலிடெக்னிக் படித்தவர்கள் 30,877; பள்ளி இறுதி வகுப்பு முடித்தவர்கள் 5 லட்சம் எனப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. இத்தொழில் நுட்பக் கல்வி கற்ற தலித் மாணவர்கள், ஆண்டுதோறும் ஒரு லட்சம் பேர் உருவாகிறார்கள். பொதுத் துறையில் இவர்கள் பணியேற்கத் தகுதி படைத்தவர்கள். ஆயினும், தகுதியடைந்த பொருத்தமான ஆட்கள் கிடைக்கவில்லை என்று அரசாங்கமும் அதிகார வர்க்கமும் அறிவியல் - தொழில்நுட்பத் துறைகளில் தலித் மக்களுக்குள்ள ஒதுக்கப்பட்ட இடங்களை நிரப்பாமலேயே இருந்து வந்துள்ளது.

மறுபுறம், 1990-91ஆம் ஆண்டுக் கணக்குப்படி தலித் மாணவர்களில் 50 விழுக்காட்டினருக்கும் மேல் 13 மாநிலங்களில் தொடக்க நிலைப் பள்ளிகளிலிருந்தும் 19 மாநிலங்களில் இடைநிலைப் பள்ளிகளிலிருந்தும் 19 மாநிலங்களில் உயர்நிலைப் பள்ளிகளிலிருந்தும் படிப்பை முடிக்காது நின்றுகொண்டனர். பெற்றோர்களில் வறுமை, பள்ளிக் கூடத்தில் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்குத் தேவையான பொருள்கள் கிடைக்காமை, வீடுகளில் படிப்பில் கவனம் செலுத்தவும் பாடங்களைக் கற்கவும் / கற்றுக்கொடுக்கவும் வசதிவாய்ப்புகள் இல்லாமை - இவை போன்ற காரணங்களே தலித் மாணவர்கள் படிப்பை முடிக்காமல் பாதியிலேயே நின்றுவிட வேண்டிய நிலைக்குத் தள்ளுகின்றன.

1991ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி, தலித் மக்களில் 85 சதவிகிதம் கிராமப்புறங்களில்தான் வாழ்கின்றனர். இந்தியா முழுவதிலுமுள்ள மொத்த கிராம மக்களில் சாகுபடியாளர்களின் விகிதம் 40%; கிராமங்களில் உள்ள மொத்த தலித் மக்களில் சாகுபடியாளர்களின் விகிதம் 2.5%; மொத்த கிராமப்புற மக்கள் தொகையில் விவசாயத் தொழிலாளர்களின் விகிதம் 20%; மொத்த தலித் மக்களில் விவசாயத் தொழிலாளர்களாக இருப்பவர்களின் விகிதம் 49%.

கிராமப்புறங்களிலுள்ள நிலவுடைமையைக் காண்போம்:

| | தலித் மக்கள் % | | பிற சாதியினர் % | |
|---|---|---|---|---|
| | 1980-81 | 1985-86 | 1980-81 | 1985-86 |
| குறுவிவசாயிகள் | 68.9 | 70.7 | 56.2 | 59.5 |
| சிறு விவசாயிகள் | 16.3 | 16 | 11.9 | 16.3 |
| மத்திய விவசாயிகளுக்கும் கீழே இருப்பவர்கள் | 9.5 | 8.8 | 14.00 | 13.7 |
| மத்தியதர விவசாயிகள் | 8.4 | 3.8 | 9.3 | 8.4 |
| பெருவிவசாயிகள் | 0.9 | 0.7 | 2.6 | 2.1 |

1961 முதல் 1991ஆம் ஆண்டு வரையிலான ஓராண்டுக் காலத்தில் சாகுபடியாளர்களின் விகிதங்கள் கீழ்வருமாறு:

அனைத்து சாதியினர்

| 1961 | 1971 | 1981 | 1991 |
|---|---|---|---|
| 52.78% | 43.38% | 41.53% | 39.72% |

தலித் மக்கள்

| 1961 | 1971 | 1981 | 1991 |
|---|---|---|---|
| 37.76% | 27.87% | 28.17% | 25.44% |



படிப்பகம்

www.padippakam.com

முப்பது ஆண்டுக்காலத்தில் தலித் மக்களின் நிலங்கள் பறிபோயிருக்கின்றன. இதே ஆண்டுகளில் விவசாயத் தொழிலாளர்களின் வளர்ச்சி விகிதத்தைக் காண்போம்:

அனைத்து சாதியினர்

| 1961 | 1971 | 1981 | 1991 |
|---|---|---|---|
| 16.71% | 20.32% | 25.10% | 19.66% |

தலித் மக்கள்

| 1961 | 1971 | 1981 | 1991 |
|---|---|---|---|
| 34.48% | 51.74% | 48.22% | 49.6% |

அதாவது, தலித் விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை, இந்த முப்பதாண்டுகளில் கணிசமாக அதிகரித்துள்ளது.

இந்தியா முழுவதிலும் நிறைவேற்றப்பட்ட உச்சவரம்புச் சட்டங்களை நடைமுறைப்படுத்தியதன் விளைவாக, 30.9.96 வரை கிடைத்ததாக அறிவிக்கப்பட்ட உபரிநிலம் 74.94 லட்சம் ஏக்கர்தான் (நிலவளம் மிக்க இந்தப் 'புனித பாரத நாட்டில்' நிறைவேற்றப்பட்ட உச்சவரம்புச் சட்டங்களின் 'யோக்கியதை'யை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்). இவற்றில் அரசாங்கம் கையகப்படுத்தியது 64.84 லட்சம் ஏக்கர்தான். மீதமுள்ள 10.10 லட்சம் ஏக்கர் நிலத்தைச் சட்டவிரோதமாக அனுபவித்து வருபவர்களிடமிருந்து கையகப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது. இவை பகிர்ந்தளிக்கப்பட்ட விதத்தைக் காண்போம்:

| | ஏக்கர்கள் | பயனடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|---|
| தலித் மக்கள் | 18.08 லட்சம் | 18.49 லட்சம் |
| பழங்குடியினர் | 7.31 லட்சம் | 7.14 லட்சம் |
| பிற சாதியினர் | 20.74 லட்சம் | 25.53 லட்சம் |

தமக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட நிலங்கள் எல்லாவற்றையும் தலித் மக்களால் தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை. ஆதிக்க சாதியினரின் அச்சுறுத்தல்கள், குறு விவசாயிகளுக்கான பாதுகாப்பின்மை, சாகுபடிக்குத் தேவையான இடுபொருள்களும் முதலீடுகளும் இல்லாமை, சந்தைப் பொருளாதாரத்தில் போட்டிப்போட இயலாமை - இவை போன்ற காரணங்களால் தலித் மக்கள் தம் நிலங்களை விட்டு வெளியேற வேண்டியிருந்தது.

இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக உள்ள வேளாண் துறையில் தலித் மக்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றனர். ஏனெனில், விவசாயத் தொழிலாளிகளில் மிகப் பெரும்பாலானோர் அவர்கள்தான். தலித் மக்களிடம் உள்ள நிலவுடைமை என்பது, சராசரியாக தலைக்கு 1.05 சென்ட்டு நிலம் தான் என்றும் நிலம் வைத்திருக்கும் தலித் மக்களில் 17 சதவிகிதம் பேரிடம் இருப்பது தலைக்கு ஒரு எக்டேருக்கும் குறைவான நிலமே என்றும் பொருளாதார அறிஞர் பேராசிரியர் கே.எஸ். சலம் கூறுகிறார்.

எனவே, வேளாண்மைக்குத் தரப்படும் மானியங்கள் அவர்களைப் பொறுத்தவரை பொருளற்றவை. மேலும், பணக்கார விவசாயிகளுக்குத் தரப்பட்ட மானியங்களின் காரணமாக, மிதமிஞ்சிய ரசாயன உரங்களும் பூச்சிக்கொல்லிகளும் பயன்படுத்தப்பட்டதால், நீர்நிலைகளும் வயல்களும் மாசடைந்துள்ளன. இதன் காரணமாக, விவசாய வேலை இல்லாத நாட்களில் தலித் மக்களின் உணவாக இருந்த நண்டுகள், மீன்கள் போன்ற உயிரினங்கள் கிடைப்பதுகூட அரிதாகிவிட்டது.

இறால் பண்ணைகளின் வருகையால், தலித் விவசாயத் தொழிலாளர்கள் தமது வேலைநாட்களில் கணிசமான பகுதியை இழந்து விட்டனர்; பெண் தொழிலாளர்களுக்குப் பல இடங்களில் வேலைவாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. சி.பி.எம். கட்சியின் விவசாயத் தொழிலாளர் சங்கம் வெளியிட்டுள்ள கோலப்பன் குழு அறிக்கையின்படி, நாட்டிலுள்ள விவசாயத் தொழிலாளர்களில் சரிபாதிப் பேர் தலித் மக்களும் பழங்குடியினரும் ஆவர்.

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் விவரங்கள் கீழ்வருமாறு:

| ஆண்டு | மொத்த மக்கள் தொகையில் % | தலித் மக்கள் % |
|---|---|---|
| 1977-78 | 51.2 | 64.6 |
| 1983 - 84 | 40.4 | 53.1 |
| 1987 - 88 | 33.4 | 44.7 |

1993 - 94 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி, இந்தியா முழுவதிலும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருந்தவர்கள் விவரம் கீழ்வருமாறு:

| மொத்த மக்கள் தொகை | | தலித் மக்கள் | |
|---|---|---|---|
| நகரம் % | கிராமம் % | நகரம் % | கிராமம் % |
| 37.27 | 32.36 | 44.80 | 48.11 |

கிராமப்புற, ஏன் இந்தியாவின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருக்கும் தலித் மக்களில் 20 சதவிகிதத்திற்கும் கூடுதலானவர்களுக்கு 31.3.96 வரை பாதுகாப்பான குடிநீர்வசதி கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. தலித் மக்களில் முறையே 30.91சதவிகிதத்தினரும் 9.84 சதவிகிதத்தினரும் மட்டுமே மின் வசதியும் சுகாதார வசதியும் கிடைக்கப் பெற்றுள்ளனர். 1992ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி, நான்கு வயதுக்குட்பட்ட தலித் குழந்தைகளில் 57.5 சதவிகிதத்திற்கு சத்தூட்டக் குறைவு இருந்தது. 1992-93இல் தலித் குழந்தைகளின் இறப்பு விகிதம் 1000 குழந்தைகளுக்கு 91; தேசிய சராசரி குழந்தை இறப்பு விகிதத்தைக் காட்டிலும் இது 22 முதல் 45 சதவிகிதம் வரை அதிகம்.

1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, அனைத்திந்திய அளவில் மொத்த தலித் மக்கள் தொகையில் எழுத்தறிவு பெற்றிருந்தோர் விகிதம் 37.41 சதவிகிதம் மட்டுமே. எழுத்தறிவு பெற்ற தலித் மக்களில் ஆண்களின் விகிதம் 49.91%; பெண்கள் விகிதம் 23.75%; தலித் பெண்கள் இந்தியாவிலுள்ள மொத்த பெண்கள் தொகையில் 16.3% ஆகும். மொத்த தலித் மக்கள் தொகையில் தலித் பெண்களின் விகிதம் 18%; மொத்த நகர்புறப் பெண்கள் தொகையில் தலித் பெண்களின் விகிதாச்சாரம் 12%; சாதி, பாலின, வர்க்க ரீதியாக ஒடுக்கப்படும், சுரண்டப்படும் தலித் பெண்களின் விகிதம் 100( ஆண்களுக்கு 922 ஆகும்.

இது, இந்தியாவின் ஒட்டு மொத்த மக்கள் தொகையின்படி காணப்படும் 1000 ஆண்களுக்கு 944 பெண்கள் என்ற விகிதத்தைவிடக் குறைவாக உள்ளது ஏழை தலித் குடும்பங்களில் பெண் குழந்தை பிறப்பதையே ஒரு சுமை யாகக் கருதப்படுவதும் பெண் சிசுக் கொலை, பெண் குழந்தைகளைப் பா மாகக் கருதுவதும் இதற்குக் காரணங்கள்

- தொடரு



படிப்பகம்

www.padippakam.com


# சூரியா தொலைத் தொடர்பகம்

**ஆர். சுரேஷ்பாபு**

எண்: 7, காளியம்மன் கோயில் தெரு

சாய்பாபா காலனி, விருகம்பாக்கம்

சென்னை- 600 092



# ARIHANT MOTORS

**(Two Wheelers Available)**

■ Sales ■ Finance ■ Consultants

**C. ASHOK, M.D.**

**No. 13, Arcot Road, Virugambakkam**

**(Opp. Santoshi Matha Koil) Chennai - 600 092**

**☎ 483 27 61**


படிப்பகம்

# நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்கும் விழா




எஸ். நடராஜன், உ. சகாயம், டி.ஆர்.ஓ., சட்டமன்ற உறுப்பினர் சுந்தர், கருணாகரன், சேகர்

காஞ்சிபுரம் மாவட்டம் செங்கற்பட்டை அடுத்த மாமண்டூரில் இயங்கி வரும் 'சமூக செயல்பாட்டு இயக்கம்' - தலித் மற்றும் இருளர் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்கு பல்வேறு நலத்திட்டப் பணிகளைச் செய்துவருகிறது. இம்மய்யத்தின் முக்கிய பணிகளில் ஒன்று - நிலமற்ற மக்களுக்கு நிலம் பெற்றுத் தருவது ஆகும். இம்மய்யத்தின் சார்பில் 10.6.2000 அன்று சாலவாக்கம் கிராமத்தில் நிலமற்றமக்களுக்கு நிலத்தை ஒப்படைத்து, பட்டா வழங்கும் விழா நடைபெற்றது.

இவ்விழாவிற்கு, பஞ்சமி நில மீட்பு இயக்கத்தின் மாநிலத் தலைவர் திரு.எஸ். நடராஜன் தலைமை வகித்தார். கரும்பு வெட்டுவோர் தொழிலாளர் சங்க மாநிலத் தலைவர் திரு. கருணாகரன் முன்னிலை வகித்தார். தலித் இளம்படைத் தலைவர் திரு. தே. சேகர் வரவேற்றுப் பேசினார். 21 லட்சம் ரூபாய் மதிப்புள்ள விவசாய நிலங்களை மய்யூர் கிராமத்தைச் சேர்ந்த 20 இருளர் இனமக்களுக்கும் உத்திரமேரூர் வட்டம் சின்னாலம்பாடி கிராமத்தைச் சேர்ந்த 34 அருந்ததியர் இன மக்களுக்கும் பிறசாதியை சார்ந்த ஏழைகளுக்கும் நிலங்களை ஒப்படைத்து, பட்டா வழங்கி மாவட்ட வருவாய் அலுவலரும் மாவட்ட கூடுதல் நீதிபதியுமான திரு. உ. சகாயம் அவர்கள் தமது உரையில்,

''பெரிய பெரிய நிகழ்ச்சிகளில் ஏற்படுகிற மகிழ்ச்சியைக் காட்டிலும், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நிலப்பட்டா வழங்குவதில் தான் உண்மையான மகிழ்ச்சியடைகிறேன். என்னைச் சந்திக்க வருகிறவர்கள்எல்லாம் கார் தொழிற்சாலைகளுக்கு இடம் வேண்டும்; கம்பெனிகளுக்கு இடம் வேண்டும்; பண்ணைகள் அமைக்க இடம் வேண்டும் என்று கேட்டு - ஒரு கோடியை நான்கு கோடியாக உயர்த்திக் கொள்ள திட்டம் வைத்துக்கொண்டு என்னை சந்திக்க வருவார்கள். நான் அவர்களுக்கெல்லாம் நிலம் ஒதுக்கும்போது ஏற்படாத மகிழ்ச்சி, இந்த நிலமற்ற இருளர் பழங்குடி மக்களுக்கு நிலம் வழங்குவதில் ஏற்படுகின்றது. ஏனென்றால், கம்பெனி அதிபர்கள் எல்லாம் தங்களின் வாழ் நிலையை மேம்படுத்திக் கொள்வதற்காக என்னை சந்திப்பார்கள்; இருளர், அருந்ததியர் இன மக்கள் தாங்கள் வாழ்வதற்காக என்னை சந்திக்கிறார்கள்.




நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்ற தலித் சேனா கூட்டம்

எனவே, இவர்களுக்கு நிலங்களை வழங்குவதுதான் எனது உண்மையான கடமையாகும். பெரிய பெரிய தொழிற்சாலை அதிபர்களிடத்தில் பணம் இருக்கலாம்; ஆனால், பாசம் இருக்காது. பெரிய பெரிய தொழிற் சாலை அதிபர்களிடத்திலே வாகன வசதிகள் இருக்கலாம்; வாஞ்சை இருக்காது. பெரிய பெரிய தொழிற்சாலை அதிபர்களிடத்திலே எந்திரங்கள் பல இருக்கலாம்; ஆனால், இதயம் இருக்காது. உண்மையான இதயம் உள்ள ஏழை எளிய மக்களுக்குப் பணி செய்வது என்னுடைய கடமை. நான் இதற்காக சம்பளம் பெறுகிறேன். உங்களிடை மே கைத் தட்டல் வாங்க வேண்டும் என் தற்காக நான் இதை பேசவில்லை நான் எந்த நேரத்திலும் உங்களுக்




உதவி செய்யக் காத்திருக்கிறேன். நீங்கள் என்னைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தமிழக முதல்வர் அறிவித்துள்ளபடி, நிலமற்ற மக்களுக்கு வீட்டு மனைகள் நிலம் ஒப்படை செய்வதில் - வேறு எந்த மாவட்டத்தைக் காட்டிலும் - காஞ்சி மாவட்டம் தமிழகத்திலேயே முதல் இடத்தில் இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். நானூறு ஏக்கர் நிலம் என்ன, நாலாயிரம் ஏக்கர் நிலங்களைக்கூட விரைவில் வழங்க எண்ணியிருக்கிறேன்'' என்றார்.

இவ்விழாவில் உத்திரமேரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சுந்தர், பஞ்சமி நில மீட்பு இயக்கப் பொதுச் செயலாளர் ஆர்.கே. சுவாமிநாதன், பத்திரிகையாளர் மோ. ஜேம்ஸ், அருந்ததியர் சங்க பொறுப்பாளர் திரு. அந்தோணி, இருளர் சங்க பொறுப்பாளர் திரு. ஜி. தங்கவேலு, தலித் இளம் படை திரு. துரை, சிறுபினாயூர் தலைவர் திரு. எஸ். தயளான், திரு. தாஸ் மற்றும் பலர் கலந்து கொண்டனர். ●

■ தலித் சேனாவின் மாநிலத் தலைவர் திரு. பெ. சந்திரசேகன் அவர்கள் ஜுன் 17,18ஆம் தேதிகளில் கோவை நீலகிரி மாவட்டங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கொடியேற்றி சிறப்புரையாற்றினார்.

■ பெரியார் நாயக்கன் பாளையம் புதுப்புதூரில் 17அன்று நடைபெற்ற கூட்டத்திற்கு தோழர் அருள்ராஜ் தலைமையில் தலைவர் அவர்கள் இயக்கக் கொடியினை ஏற்றி சிறப்புரையாற்றினார்கள்.

■ அன்னூரில் உள்ள திருமண மண்டபத்தில் மாவட்ட செயல் வீரர்கள் கூட்டம் மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் வை.குப்புராஜ் தலைமையில் நடைபெற்றது. மாநிலத் தலைவர் அவர்கள் சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில், சுமார் 150க்கும் மேற்பட்ட ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டனர். 2000, 2001ஆம் ஆண்டிற்கான மாவட்ட நிர்வாகிகளை தலைவர் அறிவித்தார்.

■ குட்டைப்புதூர் அன்னூர் ஒன்றியத்திற்குட்பட்ட குட்டைப்புதூரில் கே. ஆறுமுகம் தலைமையில் இயக்கக் கொடியினை ஏற்றிவைத்து சிறப்புரையாற்றினார்.

■ பூலுவபாளையத்தில் தோழர் ரங்கசாமி, ராமன் தலைமையில் இயக்கக் கொடியினை ஏற்றிவைத்து இனிப்புகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

■ அச்சம்பாணயத்தில் தோழர் அழகிரி தலைமையில் இயக்கக் கொடியினை எற்றிவைத்து சிறப்புரையாற்றினார்.

■ சொக்கட்டாம்பள்ளியில் தோழர் ஏ. பண்ணாரி, பி. பண்ணாரி அவர்கள் தலைமையில் இயக்கக் கொடியினை ஏற்றி பெயர் பலகையினை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

■ மேட்டுப்பாளையம் - காந்திபுரம் தோழர் தலித் தங்கம் தலைமையில் இயக்கக் கொடியினை ஏற்றி சிறப்புரையாற்றினார்.

■ 18.6.2000 அன்று நீலகிரி மாவட்டம் மாலை 4 மணிக்கு கடலூரில் தோழர் ஏ. குணசேகரன் தலைமையில் அரங்கக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் தமது உரையில் நிலம் சம்மந்தமான - வேலை வாய்ப்பு, சுயதொழில் சம்மந்தமான பிரச்சனைகளைப் பற்றியும் இயக்க வளர்ச்சியினைப் பற்றியும் விரிவாகப் பேசினார்.

## வாழ்த்து !



**5.7.2000 அன்று தமது 55ஆவது பிறந்த நாளைக் காணும் தலித் சேனாவின் தேசியத் தலைவரும், தொலைத் தொடர்புத் துறை அமைச்சருமான மாண்புமிகு**

**ராம்விலாஸ் பாஸ்வான்**

**அவர்களை உளமாற வாழ்த்துகின்றோம்!**



தலித் சேனா கூட்டத்தில் பங்கேற்ற ஆர்வலர்கள்

www.padippakam.com



## தேசிய இனப் போராட்டம் தேவை

■ *'தமிழ் ஈழம் : யார் தீர்மானிப்பது?'* தலையங்கம் ரத்தினச் சுருக்கமாக - தெளிவாக அனைத்துக் கட்சிகளின், இயக்கங்களின் நிலையினை வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது. தலித் இயக்கங்களின் ஈழ ஆதரவு நிலைப்பாட்டின் ஊசலாட்டத்தையும் அதுகுறிப்பிடத்தவறவில்லை. அண்மைக் காலங்களில் நேர்மையாக, அரசியல் லாபமின்றி வந்துள்ள தலையங்கம் இதுவாகத்தான் இருக்கும்.

வைகோ, ராமதாஸ் நிலைப்பாடும் பார்ப்பனீய வடிவிலான பித்தலாட்டமே! இங்குள்ள அரசியல் துரோகங்களுக்கு - ஈழப் பிரச்சனையைப் பகடைக் காயாக்கியுள்ளனர் என்பதைத் தோலுரித்தது சிறப்பு அம்சமாகும். தமிழ்த் தேச இயக்கங்கள், விடுதலைப் புலிகளின் சாகசத்தில் மயங்கி, தமிழ் நாட்டுத் தமிழர்களிடையே வேலை செய்யாமல் உள்ளனர். எரியும் பிரச்சினைகளில் தமிழர்களை ஒருங்கிணைக்க - தமிழ் இயக்கங்கள் தவறியே வருகின்றன.

டாக்டர். காஞ்சா அய்லையா அவர்களின் சமூக நீதிப் பணிகள் புத்துணர்வை ஊட்டுகிறது. தலித் இயக்கங்களின் பின்னடைவுக்கு எஸ். உதயசங்கரின் காரணங்கள் மிகவும் சரியே. அத்துடன் பிற இயக்கங்களின் அரவணைப்பு இல்லாததும் முக்கிய காரணமாகும். தலித் இயக்கங்களின் சாதி, மத, இன ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டம் - தமிழ்த் தேசியப் போராட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

**- மா. ரவிராசன்**, கோவை

■ 'தலித் இடஒதுக்கீடு : வெள்ளை அறிக்கை' தோழர் ரவிக்குமாரின் கட்டுரை, கருணாநிதியின் கபட நாடகத்தைத் தோலுரித்துக் காட்டியது. சங்கமித்திரையின் 'பவுத்த அகிம்சை' விளக்கம் அனைவராலும் படிக்கப்பட வேண்டும். கவிதைகளை வெளியிடாதது ஒரு குறையே.

**வீ. ஏழுமலை,** வங்கனூர்

■ தக்க நேரத்தில் சரியானதொரு தலையங்கத்தை எழுதியுள்ளீர்கள். தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகளை மிகச் சரியாக அம்பலப்படுத்தியுள்ளீர்கள். ஈழத்திலிருந்து ஓடிவரும் அகதிகள் மீதான அரசின் வன்முறை, அலட்சியம் வன்மையான கண்டனத்திற்குரியது.

**செ. கோவிந்தராஜன்**, திருச்சி

■ அடித்தட்டு மக்களின் பிரச்சனைகளை, உரிமைகளை, இட ஒதுக்கீடு பற்றிய செய்திகளை எந்த இதழும் வெளியிட்டதில்லை; வெளியிடப்போவதுமில்லை. ஆனால், இவை அனைத்திற்கும் மாறுபட்ட ஒரே இதழாக 'தலித் முரசு' வெளிவருகிறது.

**சு. சங்கர்**, முடவன்குளம்

■ 'தமிழ் ஈழம்: யார் தீர்மானிப்பது?' தலையங்கம் மிக மிக அருமை.

**என். நந்திவர்மன்**, புதுவை

■ தலித் முரசு, தலித் மக்களின் பிரச்சினைகளை மிகவும் தெளிவாகவும் ஆழமாகவும் படம் பிடித்துக்காட்டுகிறது. படிக்கப்படிக்க சிந்தனையைத் தூண்டக் கூடியவையாகவும், கருத்தியல் இதழாகவும் மிளிர்கிறது. தலித் முரசு இதழில் பி.எச்டி. ஆய்வு மேற்கொள்ள விரும்புகிறேன்.

**சகோ. விர்ஜின் விமலா பாய்**
தமிழ்த்துறை விரிவுரையாளர்
ஜெயராஜ் அன்னபாக்கியம்
பெண்கள் கல்லூரி, திருச்சி

## முற்றுகைப் போர் நடத்துவோம்

■ கடந்த 1978ஆம் ஆண்டிலிருந்து கோவையில தலித் மாணவர்களுக்காக தங்கும் விடுதி செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், 100க்கும் மேற்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்களைத் தற்காலிகமாக தலித் மாணவர் விடுதியில் தங்க வைத்துவிட்டார்கள். அது தற்பொழுது நிரந்தரமாகிவிட்டது. அதனால், 100க்கும் மேற்பட்ட தலித் மாணவர்களின் இடம் பறிபோய்விட்டது. இதனால் பல மாணவர்கள் கல்வி கற்க முடியாமல் உள்ளனர். மேலும், ஈரோடு நீலகிரி, சேலம் போன்ற இடங்களில் பல்கலைக்கழகம், சட்டக்கல்லூரி, பொறியியல் கல்லூரி போன்றவை ஒரு சில மட்டுமே இருப்பதால், அங்கு இடம் கிடைக்காதவர்கள் கோவையில் கல்வி கற்றுக்கொள்ள வருகிறார்கள். இவர்கள் தனியார் விடுதியில் தங்கும் அளவிற்குப் பொருளாதார பலம் உள்ளவர்கள் அல்ல. எனவே, இவர்களுக்கு அம்பேத்கர் விடுதி அவசியமாகிறது.

இந்த இடத்தில் அய்.ஏ.எஸ்., பயிற்சி மய்யம் வைக்க பல்வேறு தலித் அமைப்புகள், பல ஆண்டுகளாக கோரிக்கை வைத்துள்ளன. ஆனால், இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.

எனவே, அரசு உடனடியாகத் தலையிட்டு சட்டவிதிகளுக்கு எதிராக தலித் மாணவர்கள் விடுதியில உள்ள - பிற்படுத்தப்பட்ட மாணவர்களை வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், இந்த இடத்தில் சட்டமன்ற அலுவலகம் கட்ட முயற்சிப்பது, ஒட்டுமொத்த தலித் மாணவர் சமூகத்திற்கு எதிரானதாக அமையும். மாணவர் விடுதி வளாகத்தில் சட்டமன்ற அலுவலகம் கட்ட முயற்சித்தால், இதற்குக் காரணமாக இருக்கும் வி.கே. லட்சுமணன், எம்.எல்.ஏ. அலுவலகம் மற்றும் த.மா.கா. அலுவலகம் போன்ற இடங்களில், முற்றுகைப் போராட்டம் நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை.

**- சிறீதர், ஆதித் தமிழர் பேரவை**

■ புத்தர் அறிவுறுத்திய அகிம்சை, இம்சைகளுக்கு எதிரான ஒரு புரட்சி. இதைத்தான் 'அகிம்சை' என்று டாக்டர்.அம்பேத்கர் கூறுவதாக சங்கமித்திரை தெளிவுபடுத்தியதன் மூலம் உண்மையை உணர்ந்து கொண்டேன்.

**அ. வேதலிங்கம்**
சேத்துப்பட்டு

■ சூன் இதழில் வெள்ளை அறிக்கை பற்றிய ஏராளமான ஆதாரப் பூர்வமான செய்திகள் மிகவும் பயனுள்ளவையாக இருந்தன. புளியங்குடி படுகொலையும் என்னை உலுக்கி எடுத்தது. இதுபோன்ற வன்கொடுமைகளைத் தடுக்க, என்னுள் ஒரு வேகம் பிறந்தது.

**தலித் முருகேசன்**
மேட்டு மகாதானபுரம்

■ சூன் மாத இதழ், ஒவ்வொரு தலித்துக்கும் உணர்வூட்டுவதாக இருந்தது. புளியங்குடி படுகொலை, கண்ணீர் வெள்ளத்தை உருவாக்கியது. தலித் அமைப்புகள் ஓரணியில் நின்றால், துயரங்கள் தொடர் கதையாகாது.

**மு. ஏழுமலை**
கிளாப்பாளையம்

■ சூன் மாத தலித் முரசு தலையங்கம் அருமை. சமூக நீதியையும் தமிழ்த் தேசியத்தையும் இரு கண்கள் எனக்கொண்டு - தலித் முரசின் தலையங்கம் வெளிவந்துள்ளது. சிங்களப் பவுத்தம் பற்றிய தலித் முரசின் கணிப்பு சரியானது. 'ஈழத்தில் நடைபெறுவது வர்க்கப்போர் அல்ல' என்கிற கம்யூனிஸ்டுகளின் அறிக்கையும் கண்டிக்கத் தக்கது. மொத்தத்தில் தலித் முரசின் பார்வையும் படைப்பும் சரியான திசை நகர்வையே கொண்டுள்ளது.

**ஆ. திருநீலகண்டன்**
திருநெல்வேலி



படிப்பகம்

பெரியார் பேசுகிறார்

# சாதியை ஒழிக்க மேடைப் பேச்சு மட்டும் போதாது

சாதியை ஒழிப்பதற்குப் பல அடிப்படையான முறைகள் இருக்கின்றன. சாதிப் பட்டங்கள் (அய்யர், முதலியார், பிள்ளை, அய்யங்கார், செட்டியார், நாயுடு, நாயக்கர், ரெட்டியார், நாடார் முதலியன) சட்டப் பூர்வமாகத் தடுக்கப்பட வேண்டும். புதிதாக மணம் புரிவோர் அத்தனை பேரும், கலப்பு மணம் செய்யுமாறு தூண்டக்கூடிய சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.

ஒரே வகுப்பில், ஒரே சாதிப் பிரிவில் திருமணம் செய்பவர்களுக்குப் பல கஷ்டமான நிபந்தனைகளையும், கட்டுத் திட்டங்களையும் விதித்து, அத்தகைய திருமணம் புரிபவர்களுக்குச் சமுதாயத்தில் செல்வாக்கில்லாமல் செய்ய வேண்டும். சாதிகளைக் குறிக்கும் நெற்றிக் குறி, உடை, பூணூல் முதலிய சின்னங்களையும் சட்டப்பூர்வமாகத் தடுக்க வேண்டும். இவ்வாறு செய்தால்தான், சாதிகள் அடியோடு ஒழியும்.

இவை மட்டுமல்ல; சாதிக்கு அடிப்படையாயிருப்பது எது? இந்து மதம். அதை ஆதரித்து நிற்பவை எவை? வேதம், இதிகாசம், சாஸ்திரம், புராணம், முதலிய கட்டுக் கதைகள். இவைகளுக்கு அடிப்படையாக உள்ளவைகள் எவை? இந்து மதக் கடவுள்கள் என்று கூறப்படும் முழுக் கற்பனைகள்.


எனவே, இவ்வளவையும் ஆணிவேருடன் பிடுங்கி எறிந்தாலொழிய, சாதியை எப்படி ஒழிக்க முடியும்? இவ்வளவையும் காப்பாற்றுவதற்காகவுள்ள ஒரு சமுதாயமான பார்ப்பனர்களின் - வைதிகர்களின் மனப்பான்மையை மாற்றியாக வேண்டும்; அல்லது அவர்களைத் தனியாகப் பிரித்து நீக்கி வைக்க வேண்டும்! ஏன்? இந்து மதம் ஒழிந்தால்தான் சாதி ஒழியும்; இந்துமதம் ஒழிந்தால் பார்ப்பனீயமும் அதே நேரத்தில் அழிந்துபோகும். இதைப் பஞ்சமா பாதகம் செய்யும் பார்ப்பான்கூட விரும்ப மாட்டான்!

'இங்கிலீஷ் அரசியலமைப்பு' என்ற நூலை எழுதிய புரொபசர் டிசே என்பவர், 'புரட்சி மனப்பான்மையுடையவன் போப் ஆகவே மாட்டான்; போப் ஆகும் மனிதன் புரட்சி செய்ய விரும்ப மாட்டான்' என்று கூறியிருக்கிறார். அது போலவே, பார்ப்பனனாகப் பிறந்தவன் சாதிப் புரட்சிக்காரனாக ஆகவே மாட்டான். ஏனெனில், போப்புக்குள்ள அதிகாரம் அதிகம்; அவைகளைக் காட்டிலும் நூறு மடங்கு அதிகமாக இந்நாட்டுப் பார்ப்பனர்களுக்கு இருக்கின்றது.

இவர்கள், இதர சாதிகளைத் தூண்டிவிட்டு, 'பார், கழுதையும் குதிரையும் ஒன்றாகுமா? அய்ந்து விரல்களும் சரியாகுமா?' என்று கூறிப்பிரித்து வைத்துக் கொண்டேதான் இருப்பார்கள். ஒரு கடைசிப் பிராமணன் இந்நாட்டிலிருக்கும் வரையில் (இங்கிலீஷ் காரரைப் பின்பற்றி) இந்தப் பிரித்தாளும் பித்தலாட்ட வேலையைச் செய்து கொண்டுதான் இருப்பான்! சாதிப் பிரிவுகள் பகுத்தறிவுக்கு முரணானவை என்பதையும் பார்ப்பனர் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஏனெனில், பகுத்தறிவுக்கு இந்து சாஸ்திரங்கள் 144 உத்தரவு பிறப்பித்திருக்கின்றன.

'யார் என்ன சொன்னாலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக உள்ள இந்து மதத்தை அசைக்க எவராலும் முடியாது. எத்தனையோ எதிர்ப்புகளையும் கஷ்டங்களையும் சமாளித்துக்கொண்டு உயிரோடிருக்கிறது நமது இந்து மதம்' என்று சர். ராதா கிருஷ்ணன் போன்ற மேதாவிகள் கூறலாம். உயிரோடிருப்பதனால் மட்டும் ஒரு விஷயம் உயர்வானதாகி விடுமா? எவ்வளவோ எதிர்ப்புகளுக்கிடையே எலி, கொசு, ஈ, தேள், பாம்பு, மூட்டைப்பூச்சிகள் கூடத்தான் உயிரோடிருக்கின்றன! மனித சமுதாயமே எதிர்த்துவரும் குடி, விபச்சாரம் கூடத்தான் உயிரோடிருக்கின்றன. இவைகளெல்லாம் இந்து மதத்தைவிடப் புனிதமானவைகளா? அதிகப் பலன் தரக்கூடியவைகளா என்று கேட்கிறோம். ■

*'விடுதலை' தலையங்கம் - 10.1.1947*



“இறுதியாக ஒன்று கூறுவோம். சாதியை ஒழிக்க விரும்புவோர், மேடைப் பிரசங்கம் மட்டும் செய்தால் போதாது. கலப்பு மணத்தைத் தவிர, வேறு சுய சாதி மணம் செய்யவே கூடாது. புத்தரும் குரு நானக்கும் கூறியதுபோல், வேதமும் சாஸ்திரங்களும் முழுப்பொய் என்று பச்சையாகவே கூறவேண்டும். இவ்வளவையும் செய்யக் கூடிய ஆற்றலும் துணிவும் தியாக உணர்ச்சியும் படைத்த இளைஞர்களால்தான் சாதியை ஒழிக்க முடியும்.”



படிப்பகம்

www.padippakam.com

YEZHUTCHI DALIT MURASU, Tamil Monthly, Regd. No.: TN / Chief PMG - 151 / 2000 RNI TC.TN.TAM 11342 Posted at Patrika Channel Egmore RMS / 1 Periodicals Regd. No.: 71325 / 97

With Best Compliments From

# JANSONS

Dealers in Home Appliances

•

## JAYSAN CREDIT LINKS

For Auto Loans, Home Loans,
Personal Loans etc.,
Through ICICI

•

*Contact at :*

Thirumala Complex I Floor, 132, Royapettah High Road
*(Opposite Providunt Fund Office)* Chennai - 600 014
☎: 822 18 35, 822 12 10, 822 03 34

PERIODICALS POSTED AT EGMORE RMS/1
PATRIKA CHANNEL ON 4,5 & 6th of Every Month

Licence No. 47, Licensed to Post without Prepayment

அனுப்புனர் :
பெ. சந்திரகேசன்
6, 97வது தெரு
15வது செக்டர்
கே.கே. நகர்
சென்னை - 600 078

பெறுநர்

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

*Owned and Published by* **P. Chandragesan** from No. 6, 97th Street, 15th Sector, K.K. Nagar, Chennai - 600 078 and printed by G.P. Ramachandran at Thamizhmarai Achagam, 32, 3rd Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Editor : P. Chandragesan

படிப்பகம்